மஞ்சரி

விஜய - கார்த்திகை
நவம்பர் - 1953

-6-
அணா

உடலும் ஆத்மாவும்

உடலின் தன்மை அழிவு; ஆத்மாவின் தன்மை அழிவில்லாமை. உண்மையைக் கண்ட பெரியோர், இவை இரண்டின் முடிவையும் பார்த்திருக்கிறார்கள்.

—பகவத் கீதை.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
ஸீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] விஜய-கார்த்திகை :: :: நவம்பர் 1953 [இதழ் 12

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் துரைக்கு இந்த வருஷம் இலக்கியத் திறமைக்காக நோபெல் பரிசு கிடைத்திருக்கிறது. பிரிட்டிஷ் சரித்திரத்தில்-ஏன், உலக சரித்திரத்திலேயே - விசேஷ இடம் ஒன்று சர்ச்சிலுக்கு உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. அவருடைய பிரசங்க வன்மையில் இலக்கிய நயத்தையும் ஒரு வேகத்தையும் எப்போதும் காணலாம். ஒரே ஒரு நாவல், ஜீவிய சரித்திரம், சுய சரித்திரம், பிரயாணக் கட்டுரை, தற்கால உலக சரித்திரம் இவையெல்லாம் அவர் எழுதியிருக்கிறார். ஆனால், இவைகளுக்காக இலக்கியத் துறையில் அவருக்கு நோபெல் பரிசு கிடைத்தது மட்டில் ஆச்சரியந்தான். அவருடைய நடை மிடுக்கும் சொல்லலங்காரமும் இலக்கிய மணம் செறிந்திருந்தாலும், அவருடைய நூல்கள் இலக்கிய அந்தஸ்து உடையவையா என்பதை யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. எப்படியானால் என்ன? அவர் ஒரு ராஜ தந்திர மேதை. அவருக்கு இலக்கியத் துறையிலும் பெருமை கிடைத்தது மகிழ்ச்சிக்குரியதுதான்.

* * *

ஸ்ரீ ஈ. வே. ரா. நாயக்கருக்குத் திடீரென்று புதிய ஆவேசம் வந்திருக்கிறது. பிராம்மணரைத் தமிழ் நாட்டிலிருந்து விரட்டுவதிலேயே இனித் தம் மீதி ஆயுள் முழுவதையும் ஈடுபடுத்தப் போவதாகச் சமீபத்தில் அவர் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ஷஃபீ முகம்மது கூறுவதே போல, இன்று நாயக்கர் கிளப்பும் பிராம்மணக் குரோதம் நாளைக்கு இன்னொரு சமூகத்தின் மீது திரும்பாதென்று யார் சொல்ல முடியும்? பச்சையாகச் சொன்னால், இன்று பிராம்மணரல்லாதார் இயக்கமாயிருப்பது, பிராம்மணர் போனால் முஸ்லிமல்லாதார் இயக்கமாகத் திரும்பலாம். மற்றொரு நாள் நாயக்கரல்லாதார் இயக்கமாகவே மாறி, அந்த வகுப்பார் மீதே கூடப் பாயலாம். வகுப்

புக் குரோதம் என்ற விதையை இன்று விதைக்கிறவர் நாளைக்கு அதே விளைச்சலைப் பன்மடங்காய் அறுவடை செய்ய நேரும். இது நாடு சீரழியும் வழி. வீண் மயக்கம் கொண்ட அல்லது சுயநலத்தையே குறியாகக் கொண்ட ஒரு சிலரைத் தவிர, அறிவு தெளிந்த தமிழ்ப் பெருமக்கள் இந்தப் பகைமை நெறியை ஒரு நாளும் பின்பற்ற மாட்டார்கள்.

* * *

உத்தரப் பிரதேச ஜவுளி ஆலைகளில் பேல் பேலாக ஜவுளிச் சரக்குகள் வாங்குவாரற்றுக் கட்டுக் கிடையாகக் கிடக்கின்றனவாம். இந்த ஜவுளி ஆலை நெருக்கடி இந்தியா முழுவதிலுமே தான் ஏற்பட்டிருக்கிறதாம். உத்தரப் பிரதேசத்தில் சற்றுக் கடுமையாக இருக்கலாம்; அவ்வளவுதான். ஜவுளிகள் உள்நாட்டில் விலை போகவில்லை; வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விதிகளைச் சர்க்கார் தளர்த்தினாலுங்கூட ஏற்றுமதி அதிகரிப்பது சந்தேகம். இரண்டுக்கும் பொதுவான ஒரே காரணம் இந்திய ஜவுளிகளின் விலை மிகுதியே என்கிறார்கள். வேலை கிடைக்காமல் கைத்தறிக்காரர்கள் கஷ்டப்படுகிறார்கள்; சரக்கு விலை போகாமல் ஜவுளி ஆலைகள் கஷ்டப்படுகின்றன; ஜனங்களோ கட்டத் துணி போதாமலிருந்தும் வாங்க வகையின்றிக் கஷ்டப் படுகிறார்கள்! இந்த நிலை எப்படித் தான் மாறுமோ? இதற்கு என்ன தான் பரிகாரமோ?

* * *

பிரிட்டிஷ் கயானா தென் அமெரிக்காவின் வட பகுதியில் உள்ள காலனி நாடு. பிரிட்டிஷார் இதற்கென்று தனி அரசியல் சட்டம் வகுத்து அதன்படி பொதுத் தேர்தல் வைத்தார்கள். இதில் 'மக்கள் முன்னேற்றக் கட்சி'யார் 24 ஸ்தானங்களில் 18-ஐக் கைப் பற்றி விட்டார்கள். ஆனால், அந்த நாட்டின் பிரிட்டிஷ் கவர்னர் ஸர் ஆல்ஃப்ரெட் ஸாவேஜ் என்பவர் உடனே, "இவர்கள் கம்யூனிஸ்ட் கொள்கையை ஆதரிப்பவர்கள். இவர்கள் பதவி ஏற்றால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டு விடும்" என்று சொல்லித் தாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்கப் போவதாகப் பிரகடனம் செய்துவிட்டார். கலவரம் நேருமென்று பிரிட்டிஷ் ராணுவத்தையும் அங்கங்கே காவல் வைத்துவிட்டார். மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவரான டாக்டர் ஜாகன் ஐக்கிய அமெரிக்காவில் படித்தவர். அவர் மனைவி அமெரிக்கப் பெண். 'அவள் முன்பு கம்யூனிஸ்ட் கட்சியிலும் தொழிலாளர் இயக்கத்திலும் ஈடுபட்டவள்; சோவியத் நாடுகளுக்குப் போய்வந்தவர் ஜாகன்' என்ற காரணத்தால்தான் இவ்வளவும் நடந்திருக்கிறது. ஆயினும் ஜாகன் தம்பதிகள் தாங்கள் கம்யூனிஸ்ட்கள் அல்ல என்றும், கவர்னர் செய்தது சட்டத்துக்கு விரோதமான செயல் என்றும் கூறி, ஐ. நா. சபையில் முறையிட்டுக்கொள்ளப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலிருந்தும் கெனியாவில் நடக்கும் அடக்குமுறையிலிருந்தும், இன்னும் பிரிட்டிஷ் சர்க்காருக்குச் சாம்ராஜ்ய மோகம் விடவில்லை என்றுதான் படுகிறது.

இந்தியக் கடற்படை

★

கிழக்கு இந்தியக் கம்பெனியார் அமைத்த இந்தியக் கடற்படையின் சரித்திரம் 1613-ஆம் வருஷத்திலிருந்து ஆரம்பிக்கிறது. அந்தக் காலத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனி போர்த்துக்கீசியருக்கும் டச்சுக்காரருக்கும் எதிராக நடத்திய போராட்டத்தில் இந்தியக் கடற்படை கலந்துகொண்டது.

1685-ஆம் வருஷத்தில் இந்தியக் கடற் படையின் தலைமைக் காரியாலயம் சூரத்திலிருந்து பம்பாய்க்கு மாறியது. 1735-ஆம் வருஷம் வரை இந்தியக் கடற்படைக்குத் தேவைப்பட்ட கப்பல்களைச் சூரத்தில் கட்டினார்கள். அந்த வருஷத்தில்தான் தற்போது பம்பாயில் கப்பல் கட்டும் தளம் அமைந்துள்ள இடத்தை அந்த உபயோகத்துக்காக ஆர்ஜிதம் செய்தார்கள். 1765 வாக்கில் பம்பாய்க் கப்பல் கட்டும் தளம் உலகில் மற்ற எந்தக் கப்பல் கட்டும் தளத்துடனும் நிகர் நிற்கக் கூடிய அளவு அபிவிருத்தி அடைந்தது.

வேத காலமாக வளர்ந்து வந்திருக்கும் நம் கடற்படையின் வரலாறு இது. சமீபத்தில் அதன் ஆண்டு விழா நடந்ததும், ராஷ்டிராபதி ராஜேன் பாபு யுத்தக் கப்பல்களின் அணிவகுப்பைப் பார்வையிட்டதும் அனைவருக்கும் தெரிந்த செய்திகள்.

முதலாவது உலக மகா யுத்த காலத்தில் ராயல் இந்தியன் மரைன் என்று பெயர் வழங்கிய இந்தியக் கடற்படையைச் சேர்ந்த யுத்த வீரர்களை ஏற்றிச் சென்ற கப்பல்களை உதவி யுத்தக் கப்பல்களாக மாற்றினார்கள். அவை பிரிட்டிஷ் கடற்படையின் கிழக்கு இந்தியப் பிரிவுடன் பெர்ஷிய வளைகுடாவிலும் செங்கடலிலும் போர் புரிந்தன.

1918-ஆம் வருஷத்தில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின், இந்தியக் கடற்படையை அதன் பழைய வேலைக்கு மறுபடியும் அனுப்பிவிட்டார்கள். ஆனால் 1928-ஆம் ஆண்டில் அதைப் போரிடும் அந்தஸ்துள்ள ஒரு படையாகப் புனர்நிர்மாணம் செய்தார்கள். ஆறு வருஷங்களுக்குப் பின் இந்தியச் சட்ட சபையில் இந்தியக் கடற்படைக் கட்டுப்பாடு பற்றிய சட்டம் நிறைவேறியது. 1934 செப்டம்பர் 8-ஆம் தேதி அதற்கு ராயல் இந்தியக் கடற்படை என்ற நாமகரணம் சூட்டினார்கள்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது ஆபீஸர்களும் படை வீரர்களுமாக 2,000 பேர் ஆள் பலம் கொண்டதாயிருந்த இந்தியக் கப்பற்படையை மொத்தம் 30,000 பேர் ஆள்பலம் கொண்டதாக விஸ்தரித்தார்கள். அதோடு புதிய வகைக் கப்பல்களையும் சேர்த்தார்கள். ராயல் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த சிறிய போர்க் கப்பல்

மூலம்: தென்தூது (தமிழ்: 17-10-'53), திருவனந்தபுரம்.

களை வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் வர்த்தகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளித்துச் செல்லும் பணியாற்ற உபயோகித்தார்கள். தவிர, எதிரி நாடுகளிலிருந்து ராணுவத்தினரை விடுவிக்கும் வேலைகளிலும் அவை உதவி புரிந்தன.

சுதந்தர உதயத்துக்கு முன், அதாவது 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதிக்கு முன், சொந்தக் கடற்படை ஒன்று இந்தியாவுக்கு இருந்ததாகக் கூற இயலாது. அந்தக் காலத்தில் போர்க் கப்பல்களையும், துணைக் கப்பல்களையும் கொண்டதாக இருந்த சிறிய இந்தியக் கடற்படை, இரண்டாவது உலக யுத்தத்தில் பயனுள்ள சேவை புரிந்த போதிலும் அது பிரிட்டிஷ் கடற்படையின் ஒரு பகுதியாக மட்டுமே இருந்தது. 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதி இந்தச் சிறிய கடற்படை நாட்டில் ஏற்பட்ட பிரிவினையின் விளைவாக மேலும் சுருங்கியது. பிரிவினையின் விளைவாகக் கடற்படையில் மூன்றில் ஒரு பகுதியும், மூன்று பிரதானக் கடற்படை நிலையங்களும் பாகிஸ்தானுக்குப் போய்விட்டன. அதனால் இந்தியா தன் கடற்படையை அபிவிருத்தி செய்வதில் தீவிர நடவடிக்கைகள் எடுக்க நேர்ந்தது.

கடற்படையை விஸ்தரிப்பதற்கான திட்டங்களை இந்திய அரசாங்கத்தார் உடனே வகுத்து அமலுக்குக் கொண்டு வரத் தொடங்கினார்கள். அந்த வருஷ இறுதிக்குள் இந்திய சர்க்காருக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குமிடையே ஓர் ஒப்பந்தம் நடந்தது. அந்த ஒப்பந்தத்தின் விளைவாக, என்றுமே மறக்க முடியாத ரிவர் ப்ளேட் யுத்தத்தில் வெற்றிபெறப் பங்குகொண்டு கீர்த்தியடைந்ததும் 7,030 டன் எடையுள்ளதுமான 'எச். எம். எஸ். அக்கிலஸ்' என்ற பிரிட்டிஷ் கப்பலை இந்தியக் கடற்படைக்குக் கொடுத்தார்கள். அந்தப் போர்க் கப்பலுக்கு 'டில்லி' என்று பெயரிட்டார்கள். 1948 ஸெப்டம்பர் 15-ஆம் தேதி 'டில்லி' பம்பாய்த் துறைமுகத்துக்கு வந்த போது இந்தியக் கடற்படையின் கொடிக்கப்பலாக அதை மாற்றினார்கள்.

இந்தியக் கடற்படையில் 'டில்லி'யைச் சேர்த்தபின் 1948-ஆகஸ்டு 15-ஆம் தேதி வைஸ் அட்மிரல் (பின்பு அட்மிரல்) ஸர் எட்வர்ட் பாரி அதன் தளகர்த்தராக நியமனம் பெற்றார். 1951 அக்டோபரில் அவர் இந்த வேலையை விட்டுச் சென்றபோது அவருடைய இடத்தில் தளகர்த்தராக ஸர் மார்க் பிஸி நியமனமானார். இவ்விதமாகக் கடற்படையின் புனர் அமைப்பு வேலை ஆரம்பமாயிற்று; 1949-ஆம் வருஷத்தில் பிரிட்டனிலிருந்து மூன்று டெஸ்ட்ராயர்களை வாங்கி, 'ராஜ்புத்', 'ரஞ்சித்' 'ராணா' என்று பெயரிட்டார்கள். அவைகள் 1950 ஜனவரியில் பம்பாய் வந்து சேர்ந்தன. இவ்வாறு இந்தியக் கப்பற் படையில் முதல் முதலாக டெஸ்ட்ராயர் கப்பற் படைப் பகுதி ஒன்றை அமைத்தார்கள்.

பிரிவினைக்குப் பின் இந்தியாவின் பங்காக 'ஜமுனா', 'சட்லெஜ்', 'கிஸ்ட்னா', 'காவேரி' என்ற போர் மரக்கலங்கள் (பிரிகேட்கள்) கிடைத்தபோது, ஒரு போர் மரக்கலப் பகுதியும் அமைந்தது. பின்பு கடற்படைப் பயிற்சிக் கப்பல் ஒன்றும் சேர்ந்திருக்கிறது. தவிர, தற்போது இந்தியக் கடற்படையில்

கடற்கண்ணி வாரிகளும் விசேஷக் கருவிகள் உள்ள சர்வே கப்பல் ஒன்றும் டாங்கி இறக்கும் கப்பல் ஒன்றும் மற்றும் பலதரச் சிறிய கப்பல்களும் இருக்கின்றன.

சிறிது காலத்துக்கு முன், இந்தியக் கடற்படையினர் வேட்டையாடும் இனத்தைச் சேர்ந்த மூன்று டெஸ்ட்ராயர்களைக் கடன் அடிப்படையில் பெற்று, இவைகளுக்கு முறையே 'கோதாவரி', 'கோமதி', 'கங்கா' என்று பெயரிட்டார்கள். இவைகளைப் பயிற்சிக் கப்பல்களாக உபயோகிக்கிறார்கள். மேலும், 'சக்தி' என்ற ஓர் எண்ணெய்க் கப்பலும் வாங்கினார்கள்.

இவ்வளவு கப்பல்களும் கிடைத்தபின் கடற்படை ஆபீஸர்களையும் சிப்பந்திகளையும் பொறுக்கி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது ஒரு பெரும் பிரச்னையாக எழுந்தது. பிரிவினையின் விளைவாக இந்தியா மூன்று பயிற்சியளிக்கும் ஸ்தாபனங்களையும் அநுபவஸ்தர்களான அநேக ஆபீஸர்களையும் சிப்பந்திகளையும் இழந்தது. விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவையாக இருந்தார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஆபீஸர்களையும் சிப்பந்திகளையும் கோஷ்டிகளாகப் பயிற்றுவித்தார்கள்.

ஜாம்நகரிலும் பம்பாயிலும் உள்ள பயிற்சியளிக்கும் நிலையங்களை விஸ்தரித்தார்கள். விசாகப்பட்டணத்திலும் கொச்சியிலும் புதிய பயிற்சிக் கேந்திரங்களை அமைத்தார்கள். தற்போது இந்தியப் பாதுகாப்புக் கல்லூரி (இந்தியன் டிஃபென்ஸ் அக்காடெமி) என்று வழங்கும் இந்திய ராணுவக் கல்லூரி (இந்தியன் மிலிட்டரி அக்காடெமி) 1949 ஜனவரியில் புனர் நிர்மாணம் ஆயிற்று. தவிர, மூன்று படைகளிலும் சேவை செய்வதற்கு வேண்டிய ஆபீஸர்களுக்கு மூன்று படைகள் சம்பந்தமான அடிப்படைப் பயிற்சியை ஒரே சமயத்தில் அளிக்கும் வசதிகள் உள்ள ஜாயிண்ட் ஸர்விஸஸ் விங் என்ற ஸ்தாபனத்தை நிறுவினார்கள். ஜாயிண்ட் ஸர்விஸஸ் விங்கில் முப்படை பற்றிய பயிற்சியை இரண்டு வருஷ காலம் பெறும் கடற்படைக் 'காடெட்'டுகளை, மேற்பயிற்சி பெற இங்கிலாந்துக்கு அனுப்புகிறார்கள். அங்கே அவர்களுக்கு நான்கிலிருந்து ஆறு வருஷகாலம் வரையில் பயிற்சியளிக்கிறார்கள். ஆனால் அத்தகையோருக்கு முழுப் பயிற்சியையும் இனி இந்தியாவிலேயே அளிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் போதிய அளவு செய்திருக்கிறார்கள்.

(1) கடற்படைப் பயிற்சிக் கேந்திரமான 'ஐ. என். எஸ். சிவாஜி', (2) பம்பாயில் லோணுவ்லா என்ற இடத்தில் கப்பற்படை அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் யந்திரங்கள் கருவிகள் பற்றிப் பயிற்சி அளிக்க அமைத்துள்ள நிலையம், (3) ஜாம்நகரிலுள்ள மின்சாரப் பயிற்சி நிலையமான ஐ. என். எஸ். லால்சூரா ஆகிய முக்கியப் பயிற்சிக் கேந்திரங்கள் பிரிவினைக்குப் பின் இந்தியாவுக்குக் கிடைத்தன. 1948-ஆம் வருஷத்தில் கொச்சி வில்லிங்டன் தீவில் 'ஐ. என். எஸ். வெண்டுருத்தி' என்ற பயிற்சிக் கேந்திரமும், விசாகப்பட்டணத்தில் ஒரு பயிற்சி நிலையமும் புதிதாகச் சேர்ந்தன.

கொச்சியில் உள்ள பயிற்சி நிலையம் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த பயிற்சி நிலையங்கள் அனைத்திலும் பெரியது. அங்கே கப்பலோட்டுவது, பீரங்கி சுடுவது, ராணுவ ஸமிக்ஞை, டார்ப்பிடோவையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் நாசம் செய்வது, நிர்வாக அலுவல்கள், உணவு சமைப்பது ஆகிய விஷயங்களில் நவீனமும் முற்போக்குமான முறைகளில் பயிற்சி அளிக்கிறார்கள். இந்தப் பாடசாலைகளுக்கு வேண்டிய புதிய கட்டிடங்களை இப்போது கட்டிவருகிறார்கள். அது போலவே ஜாம் நகரிலும் பயிற்சி வகுப்புக்களுக்கு, வேண்டிய புதிய கட்டிடங்களைக் கட்டி வருகிறார்கள். கடலிலும் கரையிலும் பயிற்சி அளிக்கும் நிய மிக்கப் பெற்ற உத்தியோகஸ்தர்களில் தலைமைப் பதவியையும் நிர்வாகப் பதவிகளையும் வகிப்போர் அனைவரும் இந்தியர்களே என்பது மெச்சத் தகுந்த விஷயம்.

கடற்படை ஸ்க்வாட்ரன்கள் விஸ்தரிக்கப் பெற்றதைத் தொடர்ந்து பம்பாயில் உள்ள கப்பல் கட்டும் தளத்தையும், மற்றுமுள்ள நிலையங்களையும் விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அநேக வருஷ காலமாக நிறுத்தி வைத்திருந்த கப்பல் கட்டும் தள விஸ்தரிப்பு வேலை, மறுபடியும் ஆரம்பமாயிற்று. 1949-ஆம் வருஷத்தில் பம்பாயிலுள்ள கடற்படைக் கப்பல் கட்டும் தளத்தில், கப்பல் கட்டும் தளம் சம்பந்தமான பல்வேறு வேலைகளில் சிப்பந்திகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு பாடசாலையை அமைத்தார்கள்.

1950 ஜனவரி 26-ஆம் தேதி இந்தியக் கடற்படையின் பெயரில் மிக முக்கியததுவம் வாய்ந்த ஒரு மாறுதல் செய்தார்கள். அன்று 'ராயல்' என்ற சொல்லை அது தன் பெயரிலிருந்து நீக்கிக்கொண்டது. அன்று முதல் அது இந்தியக் கடற்படை என்றே வழங்குகிறது. இந்தியக் கடற்படையின் கொடியை எல்லாப்படைக்கப்பல்களிலும் நிலையங்களிலும் பறக்க விடுகின்றனர்.

அது போலவே கடற்படைச் சின்னத்தில் இடம் பெற்றிருந்த ட்யூடார் கிரீடத்தை அகற்றி அந்த இடத்தில் அசோகச் சிங்கங்களை வைத்தார்கள். நட்சத்திரத்துக்குப் பதிலாகத் தாமரைப் பூ வைத்தார்கள்.

அதன் பின்பு, 1951 மே 27-ஆம் தேதி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வைபவம் நிகழ்ந்தது. அன்று இந்திய முப்படைகளின் சுப்ரீம் கமாண்டர் என்ற நிலையில் ராஜேந்திரப் பிரசாத், ஜனாதிபதியின் கொடியைப் பம்பாயில் நடைபெற்ற ஒரு விசேஷ வைபவத்தில் கடற்படைக்கு அளித்தார்.

இந்தியக் கடற்படையில் சமீப காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், கடற்படையின் விமானப் பகுதி அமைக்கப்பட்டதே. இந்தக் கடற்படை விமானப் பகுதியைக் கொச்சியில் சென்ற மே மாதம் 'ஐ. என். எஸ். கருடா' என்ற பெயரில் கமிஷன் செய்தார்கள். கடற்படை விமானப்பகுதிக்காகப்பிரிட்டனிலிருந்து தரையிலும் தண்ணீரிலும் இறங்கும் அமைப்புப் பெற்ற பத்து விமானங்கள் வாங்கியுள்ளார்கள்.

ரமணர்

வாழ்வும் வாக்கும்



ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

சுடர் மறைந்தது: (வாழ்வு) பகவானுடைய கையில் உண்டான புண் வரவரப் பெரிதாயிற்று. அதற்கு மனித முயற்சியால் செய்யக் கூடிய சிகிச்சைகளெல்லாம் செய்தார்கள். டாக்டர் ஒருவர், "அந்தக் கையை எடுத்துவிட்டால் குணமாகலாம்" என்று சொன்னார். அதற்கு இந்த முனிவர் ஒப்புக்கொள்ளவில்லை. வர வர உடம்பில் பலம் குறைந்துகொண்டு வந்தது. நடக்க முடியாத நிலை வந்தது. ஆனாலும், பக்தர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் தரிசனம் கொடுப்பதை நிறுத்தவே இல்லை. அருள் பொழியும் திருவிழியும் புன்னகையும் எப்போதும் மங்காமல் இருந்தன. மிக மெல்லிய குரலிலே பேசினாலும் அதில் வேதனை தோன்றவில்லை; அன்பே ஒலித்தது.

யார் யாரோ வந்தார்கள். பார்த்தார்கள். பக்தர்கள் கூடினார்கள். ஆங்கில முறையில் வைத்தியம் செய்தார்கள். இரண்டு முறை ஆபரேஷன் செய்தார்கள். ஹோமியோபதி டாக்டர் ஒருவர் வந்து சில நாள் மருந்து கொடுத்தார். கல்கத்தாவிலிருந்து கவிராஜர் ஒருவர் வந்து ஆயுர்வேத மருந்துகளைத் தந்தார். பக்தர்களுடைய எற்பாடுகள் இவை. இந்த முனிவர் அவர்கள் ஆட்டிய ஆட்டத்துக்கெல்லாம் உட்பட்டார். குழந்தைக்குப் பல விதமாக அலங்காரம் செய்யும்போது அது எப்படி மற்றவர்களுக்காக அதனை எற்றுக் கொள்கிறதோ அது போல இந்தப் பெரியார் மற்றவர்களுக்காக வைத்தியர்களின் சோதனைகளுக்கு உட்பட்டார். நாடித் துடிப்பு, தேக வெப்பம் இவற்றைக் கணக்கெடுத்தார்கள். இன்னும் நுட்பமான சோதனைகளைச் செய்தார்கள். சில சமயங்களில் மனித இயற்கையில் இல்லாத சில விநோத அறிகுறிகள் இருந்தன.

அன்பர்களின் கற்பனை விரிவடைந்தது. "பகவான் குணமடைவார்" என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டாயிற்று. ஆனால் மறுபடியும் நோயின் கடுமை தலைகாட்டியதனால் முன்பிலும் பல மடங்கு வேதனைக்குள் ஆழ்ந்தார்கள்.

1950 மார்ச் மாதம் 20-ஆம் தேதி, மகரிஷியிடத்தில் பக்தியுடைய வங்காள அன்பர் ஒருவர் வந்தார். அவருக்கு ஜோசியத்தில் நம்பிக்கை இருந்தது. அவர் பெங்களூரில் உள்ள ஜோசியர் ஒருவரிடம் பகவானுடைய ஜாதகத்தைக் காட்டினார். "நன்றாக ஆராய்ச்சி செய்து பலன் சொல்ல வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அந்த ஜோசியர் மிகப் புகழ் பெற்றவர். கெட்டிக்காரர். அவர், "இந்த ஜாதகப்படி மகரிஷி நிச்சயமாக 1953-ஆம் வருஷம் ஜூலை மாதம் வரையில் வாழ்வார். அதற்குப் பிறகும் பன்னிரண்டு வருஷம் வாழ இடமுண்டு" என்று சொன்னார். "நன்றாகப் பாருங்கள்" என்று அன்பர் கேட்டார். "குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? நிச்சயமாக இன்னும் மூன்று வருஷத்துக்கு உயிருக்கு அபாயமே இல்லை" என்று சொன்னார். அதைக் கேட்ட அந்த வங்காள அன்பருக்கு ஆறுதல் உண்டாயிற்று. அவர் திருவண்ணாமலைக்கு வந்தார். "அவர் சொன்னால் தவறாது. பெரிய ஜோசியர். இந்த வியாதி அபாயமானதல்ல. கீல் வாயுவினால் வந்த கோளாறாக இருக்கலாம்" என்று சொன்னார். அதைக் கேட்டுப் பல பக்தர்களுக்கு நம்பிக்கை உண்டாயிற்று.

ஜோசியம், வைத்தியம், நம்பிக்கை, பிரார்த்தனை இத்தனைக்கும் நடுவில் பகவான் தம்முடைய உடற் கூட்டில் எப்போதும் போல ஆத்மானந்தத்துக்குக் குறைவின்றித் தங்கியிருந்தார். உடம்பு வசப்படாமல் இருந்தாலும் வசப்பட்ட ஓர் ஆனந்தக் கடலில் அவர் திளைத்துகொண்டிருந்தார். "எல்லாவற்றையும் நிறுத்திவிட்டுப் பேசாமல் இருங்கள்" என்று சொன்னார். ஆனால் மற்றவர்கள் கேட்பார்களா?

உடம்பு மெலிந்தது. நாடி தளர்ந்தது. கண்கள் ஆழ்ந்தன. மூச்சு விடுவதுகூடச் சிரமமாகத்தான் இருந்தது. ஆனால் முகத்தில் அருளொளி மங்கவில்லை. ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதியன்றே எல்லோருக்கும் உண்மை நிலை தெரிந்துவிட்டது. "இனி இந்தச் சுடர் இந்த மண் வீட்டில் நில்லாது" என்பதைத் தெரிந்துகொண்டார்கள். ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி உடல்நிலை பின்னும் இறங்கியது. பகவானுடைய உடல் நிலையை அறிந்து தமிழ் நாட்டிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் அன்பர்கள் கூட்டங் கூட்டமாக வந்தார்கள்.

ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி இரவு மணி 8-47-இல் ரமண பகவான் பரிபூரணமானார். பாரத நாட்டின் ஞானச் செல்வம் என்றும் அழியாதது என்பதைக் காட்டும் குபேரர் மறைந்தார்; மாயை இருளில் மயங்கி வழி தெரியாது அலையும் மக்களுக்கு வழி காட்டும் வள்ளல் மறைந்தார்; தமிழ் நாட்டின் சரித்திரத்தில் ஆத்மானந்த அமுதத்தைப் பில்கிய பெரியார்களென்று வரிசைப்படுத்தும் அத்தியாயத்தில் பெரிய அமுத கலசமாகத் திகழ்ந்த பகவான் பிரிந்தார்; ஏழைக்கு எளியராய், விலங்குகளிடமும் தம் கருணையைக் காட்டி இன்பந் தந்த எளிமையில் எளிய பிரான் பிரிந்தார்; அஷ்டாங்க யோகமும், சாதன சதுஷ்டயமும், தவத்துக்

குரிய சாதனங்களும் இல்லாமலே தம்முடைய சந்நிதியில் வந்து அமர்ந்த அளவில் மனத்தை நிறுத் தும் வலிமையை அருளிய சித்தர் அகன்றார்; ரமணாசிரமத் தனிப் பெருந் தெய்வம், ரமண நாமத் தைத் தாரக மந்திரமாகக் கொண்டு வாழும் அன்பர்களாகிய கன்றுகளுக்கு இன்மொழிப் பால் வழங்கி ஆதரித்த காமதேனு, மந்திரோபதேசமின்றிப் பிரசங்க மின்றித் தன் அருட் பார்வையா லும் தன்னுடைய அணிமையில் அமர்ந்திருக்கும் வாய்ப்பாலும் சாந்தியென்பது இப்படித்தான் இருக்கும் என்று எத்தகைய முரட்டு மனிதனையும் ஒரு கண நேரமாவது உணரச் செய்யும் அருள் மின்சாரம், கண்காணாத் தெய்வங்களை நம்பிக் கருத்தழிந் தோருக்குக் கவலை போக்க நின்ற கண் கண்ட தெய்வம், மேல் நாட் டாரும் கண்டு வியந்து வணங்கி அடிமையாக விரும்பிய அற்புதக் கற்பகம் தான் அவதாரம் செய்த காரியம் நிறைவேறியதனால் அருணாசலத்தை விட்டு அகண்டப் பெரு வெளியில் கலந்துகொண் டது. பரஞ்சுடரைச் சிறு குகை யிலே மறைத்து வைத்திருப்பது தவறென்று திருவருள் நினைந்தது போலும்; அச்சுடர் பஞ்ச பூதத் தொடர்புள்ள சடலக் குகையி னின்றும் பிரிந்தது.

என்ன ஆச்சரியம்! அந்தச் சடலமென்னும் கோயிலில் இருந்த சுடர் யாவரும் காண வெளிப்பட்டு மறைந்தது! பகவான் பரவெளியிற் கலந்த அதே தருணத்தில், சரியாக 8 - 47 - க்கு, பெரிய சோதி ஒன்று வானில் தோன்றித் திருவண்ணாமலைக்குப் பின் சென்று மறைந்தது. இதனை நாட்டிலுள்ள அனைவரும் கண்டு வியந்தார்கள். கட்டுக் கதையல்ல; உண்மையா கவே கண்டவர்கள் தாங்கள் கண்ட செய்தியைப் பத்திரிகை யில் வெளியிட்டார்கள்.

ஏப்ரல் மாதம் 15 - ஆம் தேதி பகவானுடைய பொன்னுடலைச் சமாதி செய்து முறைப்படி பூசித் தார்கள். அது முதல் அந்தச் சமாதி ஒரு கோயிலை அடக்கிய பூங்கோயிலாகத் திகழ்கிறது.

ஞானச் செல்வர்களுக்கு இட மாகிய அருணையிலே தமிழ் மக்கள் செய்த புண்ணியத்தால் பல ஆண்டுகள் வாழ்ந்த ரமண பகவான் தம்முடைய அருள் வாக்கையும், அன்பர் கூட்டத்தை யும், ஞானக் கனலையும் இங்கே நிலை நிறுத்தியிருக்கிறார். இனி மேல் அப்பெருமானுடைய புகழும் அவருடைய தியானத்தால் அமை யும் பயனும் வர வர மிகுதி யாகும். வாழ்க ரமண நாமம்!

யோகியின் நிலை (வாக்கு): மனம் என்பது பொய்; அதன் உருவம் மாயம். ஆதலின் மெய் யோடு பொருந்திய யோகி அந்த மனத்தின் வசப்படாமல் தன் மய மாய் நிற்பான். அவன் செய லற்றவன். அவனுக்கு ஒரு செய லும் இல்லை. அவன் எப்போதும் தன்னுடைய இயல்பாகிய ஆத்மானுபூதியில் லயித்திருப் பான்.

மனவுரு மாயம்மெய்ம்
மன்னுமா யோகி
தனக்கோர் செயலிலை
உந்தீ பற
தன்னியல் சார்ந்தன்ன
உந்தீ பற!
(உபதேச உந்தியார்.)

எதற்கு எந்த மரம்?

இராம. ஐயராஜா

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மரம் நடும் விழா இப்போது ஆண்டுதோறும் நம் நாட்டில் நடந்து வருகிறது. இதுபற்றிய ஒரு கட்டுரையில் எந்த எந்த மரம் எது எதற்கு ஏற்றது என்பதைக் கட்டுரையாளர் விவரித்திருக்கிறுர். இவர் தஞ்சையில் பயிர்ப்பாதுகாப்பு உதவியாளர் (பூசண இயல்).

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

1. அழகாகப் பூக்கும் மரங்கள்:

மலேக் கருங்காலி: இது பல நிறப் பூக்களை உடையது. 20 முதல் 25 அடிகள் வரை விரைவில் வளரும். 20 முதல் 25 அடிகள் வரையில் பரவும். 2 வருஷங்களில் பூக்கும். பூக்கும் பருவம் நவம்பர்-மார்ச்சு.

சரக்கொன்றை: இதன் பூ மஞ்சள் நிறம். 30 முதல் 35 அடிகள் வரையில் வளரும். 25 முதல் 30 அடிகள் வரையில் பரவும். 6 ஆண்டுகளில் பூக்கும். பூக்கும் பருவம் ஜூன்-செப்டம்பர்.

இலங்கை வாகை: இளஞ்சிவப்பு நிறமுடைய பூக்களையுடையது. 15 முதல் 20 அடிகள் வரையில் வளரும். 15 முதல் 20 அடிகள் வரையில் பரவும். 3 வருஷங்களில் பூக்கும். பூக்கும் பருவம் நவம்பர்-பிப்ரவரி. இது அதிகத் தழைகள் கொடுப்பதால் அந்தத் தழையை நன்செய் வயல்களுக்கு எருவாகப் பயன்படுத்தலாம். ஆதலால் இதை 'எருத்தழைச் செடி' என்றும் அழைப்பதுண்டு.

மஞ்சள் குல்மோகர்: மஞ்சள் பூப் பூக்கும். 40 முதல் 50 அடிகள் வரை விரைவில் வளரும். 40 முதல் 50 அடிகள் வரையில் பரவும். 3 வருஷங்களில் பூக்கும். பூக்கும் பருவம் மார்ச்சு-ஜூன்.

சிவப்புக் குல்மோகர்: சிவப்பு நிறமுள்ள பூக்களைக் கொடுக்கும். 40 முதல் 50 அடிகள் வரை விரைவில் வளரும். 40 முதல் 50 அடிகள் வரையில் பரவும். 3 வருஷங்களில் பூக்கும். பூக்கும் பருவம் ஜூன்-அக்டோபர்.

2. அழகான இலைகளையுடைய மரங்கள்:

நீர்வேம்பு: 25 முதல் 35 அடிகள் வரையில் வளரும். 25 முதல் 35 அடிகள் வரையில் பரவும். மெதுவாக வளரும் தன்மை உடையது.

வேம்பு: 40 முதல் 50 அடிகள் வரை விரைவில் வளரும். 25 முதல் 30 அடிகள் வரையில் பரவும்.

மகாகனி என்னும் செம்மரம்: 40 முதல் 50 அடிகள் வரை மெதுவாக வளரும். 35 முதல் 40 அடிகள் வரை பரவும்.

3. சாலைகளுக்கு ஏற்ற மரங்கள்.

மஞ்சள் குல்மோகர்: விவரம் முன்பே உள்ளது.

மூலம்: மேழிச் செல்வம் (தமிழ்: செப்டம்பர்-அக்டோபர் '53), சென்னை.

நெட்டிலிங்க மரம்: 35 முதல் 40 அடிகள் வரை வளரும். 25 முதல் 30 அடிகள் வரையில் பரவும். மற்ருெரு வகை 25 முதல் 30 அடிகள் வரை வளரும். 7 முதல் 10 அடிகள் வரையில் பரவும்.

புன்க மரம்: 25 முதல் 30 அடிகள்வரை வளரும். 25 முதல் 30 அடிகள் வரையில் பரவும்.

புளிய மரம்: 40 முதல் 50 அடிகள் வரை வளரும். 35 முதல் 40 அடிகள் வரையில் பரவும்.

பூவரசு: 25 முதல் 30 அடிகள் வரை வளரும். 25 முதல் 30 அடிகள் வரையில் பரவும்.

* * *

4. மணற் பாங்கான நிலத்துக்கு அல்லது கடற்கரை யோரத்துக்கு ஏற்ற மரங்கள்.

புன்னை: வெண்ணிறப் பூக்களை உடையது. 25 முதல் 30 அடிகள் வரை வளரக்கூடியது. 25 முதல் 30 அடிகள் வரையில் பரவக் கூடியது.

சவுக்கு: 40 அடிகள் வரை விரைவில் வளரக் கூடியது. 20 அடிகள் வரையில் பரவக்கூடியது.

* * *

5. நீர்ப்பிடிப்புள்ள இடங்களுக்கு ஏற்ற மரங்கள்.

கருவேல மரம்: மார்ச்சு-ஏப்ரல் மாதங்களில் முற்றின நெற்றுக்களிலிருந்து எடுத்த விதைகளைக் கால மழைக்கு முன் ஊன்றலாம்.

புன்னை: விவரம் முன்பே உள்ளது.

புன்கன்: விவரம் முன்பே உள்ளது.

6. வறண்ட இடங்களுக்கு ஏற்ற மரங்கள்.

காட்டு வகை: இதன் கிளைகளை நறுக்கி ஊன்றலாம். வேளாண்மைக்கு வேண்டிய கருவிகள் செய்யலாம்.

வேம்பு: விவரம் முன்பே உள்ளது.

புளி: விவரம் முன்பே உள்ளது.

* * *

7. விறகுக்குப் பயன்படும் மரங்கள்.

சவுக்கு: பிப்ரவரி மாதத்தில் நாற்று விட வேண்டும். அக்டோபர் மாதத்தில் நட வேண்டும். வரிசைக்கு வரிசை இடைவெளி 9 அடிகள் விடவேண்டும். செடிக்குச் செடி 9 அடி இடைவெளி விட வேண்டும். 2-3 வருஷங்கள் வரையில் கோடைக் காலத்தில் தண்ணீர் விடவேண்டும். 10 வருஷங்களில் இதை வெட்டி விடலாம். ஓர் ஏக்கரில் சுமார் 50 டன் வரை விறகு கிடைக்கும்.

மஞ்சள் கோன்றை: இலங்கை ரெயில்வே எஞ்சின்களில் இதை விறகாகப் பயன்படுத்துகிறார்கள். விரைவில் வளரக்கூடியது. விதைகள் மூலம் உற்பத்தி செய்யலாம்.

கலியாண முருங்கை: விரைவில் வளரக் கூடியது. விதை மூலமும் கிளைகளை நறுக்கி நடுவதன் மூலமும் இதை உற்பத்தி செய்யலாம். விறகுக்கு அவ்வளவு நன்றாக இராதென்றாலும், விறகுக் குறையை ஒருவாறு நீக்க இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

எவருமே தொழிலைக் கற்கவில்லை; தொழில் தந்திரங்களைக் கற்கிறார். இதுதான் இன்றைய தொல்லை.

—நீல் ஓ'ஹாரா.

வளர்ந்து வரும் சித்தரஞ்சன்
தொழிற்சாலையின் வர்ணனை—

வாரத்துக்கு ஓர் எஞ்சின்

ஜகதீச ஆர். மல்ஹோத்ரா

மேற்கு வங்காளத்திலுள்ள சித்தரஞ்சன் தொழிற்சாலையில் ஒரு வாரத்துக்கு ஒரு புதிய ரெயில்வே எஞ்சின் தயாராகி வருகிறது. இந்தத் தொழிற்சாலை இன்று இந்தியாவிலேயே எஞ்சின் உற்பத்தியில் முக்கியமாக விளங்குவது. எஞ்சினுக்குத் தேவையான 5,327 பாகங்களில் முக்கால்வாசி இங்கேதான் தயாராகின்றன.

இப்போது நடக்கிற ரீதியிலே தொடர்ந்து இங்கே உற்பத்தி வேலை நடந்து வந்தால் 1956-இல் மூன்று நாளைக்கு ஓர் எஞ்சின் வீதம் தயாரித்து விடலாம். 'டிஸைன்' முதற்கொண்டு எல்லாவற்றையும் நம் இந்திய எஞ்சினீர்களும், தொழில் நுணுக்கம் அறிந்த உழைப்பாளிகளுமே செய்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் சிறந்த எஞ்சினுக்கு இந்த இந்திய எஞ்சின் எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை.

1951-இலிருந்து இதுவரை 85 எஞ்சின்கள் தயாராகி இப்போது இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன.

1956-க்குள் குறைந்த பட்சம் ஆண்டு ஒன்றுக்கு 120 எஞ்சின்களும் 50 தனிப் பாயிலர்களும் தயாரிப்பார்களென்று தெரிகிறது. அடுத்த ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கும்போது 14 கோடியே 93 லட்சம் ரூபாய் இதற்காகச் செலவிடுவதென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆசியாவிலேயே இது பெரிய திட்டங்களில் ஒன்றாகும்.

இன்னும் நாலு ஆண்டுகளில் சித்தரஞ்சனிலும், ஜாம்ஷேத்பூரிலுள்ள டாடா தொழிற்சாலையிலும் ஆண்டுதோறும் கழிவு, தேவை இவைகளுக்கு ஏற்றபடி எஞ்சின்கள் தயாராகிவிடும்; 1952-53-இல் ஜாம்ஷேத்பூரில் 30 எஞ்சின்கள் தயாராயின. இனி ஆண்டு ஒன்றுக்கு அங்கே 50 எஞ்சின் தயாராகும்.

சித்தரஞ்சன் தொழிற்சாலையில் பிராட் கேஜ் (அகலப் பாதை) எஞ்சின் ஒன்று தயாரிக்கச் சுமார் ரூ. 5,35,000 ஆகிறது. இரண்டாம் உலக யுத்த முடிவிலிருந்து இதுவரை இந்தியா வெளிநாடுகளிலிருந்து 1,280 எஞ்சின்களைத் தருவிக்க 50 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறது. இவற்றில் 289 எஞ்சின்கள் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து தருவித்தவை.

5,000 வீடுகள் கொண்டு விளங்கும் சித்தரஞ்சன் என்ற இந்தப் புதிய நகரம் 4,200 ஏக்கர் பரப்பில் அமைந்திருக்கிறது. முன்னே வயல்களும் குக்கிராமங்களும் இருந்த இடம் இது. திட்டம்

மூலம்: பம்பாய்க் கிரானிக்கிள் (ஆங்கிலம்: 27-9-'53), பம்பாய்.

போட்டதிலிருந்து கட்டி முடிக்கும் வரை ஒழுங்காக அமைத்த நகரம் இந்தச் சித்தரஞ்சன். தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் அவர்களின் பெயரை இதற்கு வைத்திருப்பது முற்றும் பொருந்தும்; அவரைப் போலவே பல வசதிகளை அளிக்கும் நகரம் இது.

மேற்கு வங்காளத்தில் நிலக்கரிச் சுரங்கம் மிகுதியாகவுள்ள பகுதிக்கு 10 மைல் தூரத்திலும், தாமோதர அணைத் திட்டத்துக்குட்பட்ட மைதான் அணைக்கு 6 மைல் தூரத்திலும் இது அமைந்திருப்பதால் தண்ணீருக்கும் மின்சார வசதிக்கும் குறைவே இல்லை.

இங்கே உள்ள புது வகை யந்திரங்களையும் யந்திர சம்பந்தமான அமைப்புக்களையும் கணக்கிட்டால் அவை 10 லட்சம் சதுர அடிக்கு மேல் இருக்கும். 18 தொழிற்சாலைகள் இதில் இருக்கின்றன. தாமோதர அணைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் மின்சார வசதியைக் கொண்டு இங்குள்ள யந்திரங்கள் இயங்குகின்றன. ஓர் எஞ்சினைத் தயாரிக்கச் சுமார் 85 000 கிலோவாட் மணி மின்சார சக்தி வேண்டியிருக்கிறது. லேசாகவும், அதே சமயம் ஆபத்து எற்படாமல் பாதுகாப்பாகவும் இருக்கும் எஞ்சின்களை அமைத்து அவற்றின் வேகமும் பாரத்தை இழுக்கும் சக்தியும் மிகுதியாவதற்குரிய ஆராய்ச்சியில் தான் இப்போது முக்கியமாக ஈடுபட்டு வருகிறார்கள் சித்தரஞ்சன் தொழிற்சாலையார். கனமான எஞ்சின்களைத் தயாரிப்பதற்கும் சரி, பராமரிப்பதற்கும் சரி அதிகச் செலவாகும்; பாலம், தண்டவாளம் இவைகளில் அவற்றைச் செலுத்துவதும் சிரமமே.

பத்து ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் 500 வகை எஞ்சின்கள் இயங்கி வந்தன; சாமான் வண்டிகளைத் தள்ளிக்கொண்டு போய்ச் சேர்ப்பது, எக்ஸ்பிரஸ் வண்டிகளை ஓட்டிச் செல்வது - இப்படிப் பல வேலைகளுக்கு இவை பயன்பட்டு வந்தன. ஆயினும், இவற்றையெல்லாம் பழுது பார்ப்பது சிக்கலான வேலை யாகையால் இனி 377 வகை எஞ்சின்களையே தயாரிப்பது என்று திட்டமிட்டிருக்கிறார்கள்; இவற்றில் புதுத் தினுசும் இருக்கும். இன்னும் 15 ஆண்டுகளில் 50 வகை தயாரித்தாலே போதும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இந்தியாவில் 1885-இலிருந்தே எஞ்சின்களைப் பழுது பார்க்கும் ரெயில்வே வொர்க் ஷாப்புகளில் புதிய எஞ்சின்கள் தயாராகி வருகின்றன. ஜமால்பூர், அஜ்மீர் இந்த இடங்களிலேயேகூட 1940-க்குள் 649 எஞ்சின்கள் தயாராகியிருக்கின்றன. இருந்தாலும் எப்போதோ ஒவ்வொரு சமயந்தான் இந்த வேலை நடக்கும்; வெளிநாட்டிலிருந்து சில பாகங்களைத் தருவிக்க வேண்டியிருந்ததே இதற்கு முக்கியமான காரணம்.

சித்தரஞ்சன் தொழிற்சாலை, அதைக் கட்டியவர்களுக்கும் நாட்டுக்குமே பெருமை தருவதாகும். அந்த வழியாகப் போகும் போது இருளில் மினுக் மினுக்கென்று எண்ணற்ற விளக்குகள் ஒளிரும் காட்சி, எல்லாரையும் கவரும்; மிஹிஜம் மலை உச்சியில் தெரியும் விளக்கு, நம்பிக்கை தளராமல் பலர் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு அறிகுறியாகத் திகழ்கிறது.

காவேரி பிறந்த ஊரும் அதன் மக்களின் பழக்கங்களும்—

குடகின் வீர மக்கள்

பி. ஏ.

இயற்கைத் தாய் உலகத்தில் சில இடங்களில் மட்டும் தன் சௌந்தரியத்தை அள்ளி வீசியிருக்கிறாள். மைசூரும் அதை ஒட்டிய சில கன்னட ஜில்லாக்களும் இயற்கை வளத்துக்கு எப்படிப் பெயர் பெற்றவையோ அப்படியே குடகும் பசுமை பெற்று அழகின் உயிர்நிலையாக விளங்குகிறது.

குடகுச் சீமையைச் சூழ்ந்து குன்றுகளும் மலைகளும் அழகிய கட்டிடங்களும் 'ப்ளாண்டேஷன்' தோட்டங்களும் கண்களுக்கு விருந்தாகும். இவற்றைக் காண வந்த யாத்திரிகர்கள் இந்தக் காட்சிகளில் ஒன்றிப் போய்விடுகிறார்கள். இங்குள்ள மக்கள் இனிமையாகப் பேசுபவர்கள்; அமைதியாக வாழ்பவர்கள்; வீர தீரத்துக்குப் பெயர் பெற்றவர்கள். இவர்களுடைய நடையுடை பாவனைகள் தமக்கென்று ஒரு தனி வழியை வகுத்துக்கொண்டு, வெகு காலத்துக்கு முன் இங்கே தோன்றிய நாகரிகத்துக்குச் சான்றாக இருக்கின்றன. பழைய நாகரிகத்தைப் பாதுகாத்து வளர்ப்பதில் குடகு மக்களுக்கு மிகுந்த சிரத்தை இருக்கிறது. அதனாலேயே அவர்களுடைய உடை, பேச்சு முதலியவை இன்னும் தனிப்பட்ட சோபையுடன் விளங்குகின்றன.

வட நாட்டைப் புனிதமாக்குபவள் கங்கா தேவி; தென்னாட்டைப் புனிதமாக்கும் காவிரி பிறந்தது இந்தக் குடகு நாட்டில்தான். மடகேரி என்னும் ஊருக்கு அருகில் தலைக்காவேரியில் தோன்றிய காவேரி இங்கிருந்து புறப்பட்டு மைசூருக்குள் நுழைந்து அந்தப் பகுதிக்குத் தண்ணீர், மின்சாரம் இவைகளை நிறையத் தருகிறது. திப்பு சுல்தான் காலத்தில் குடகும் மைசூருடன் சேர்ந்திருந்தது. அவருடைய ஞாபகார்த்தமாக இருக்கும் 'ஜபராபாத்' என்ற இடிந்த கோட்டை, குடகின் நிர்மாணத் திறமைக்கு உதாரணமாக விளங்குகிறது. 1790-வரைக்கும் திப்புவின் சேனைத் தலைவர்களுக்குச் சொந்தமாயிருந்த இந்தப் பிரதேசம், பிறகு குடகின் அரசர்கைக்கு வந்துவிட்டது. 1834-இல் குடகின் அரசாங்க நிலைமை மிகச் சீர்கெட்டிருந்தது. ஜனங்கள் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் குடகு பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு உட்பட்டது. நாடு சுதந்தரம் பெற்ற பின் பல விஷயங்களில் குடகு முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

காப்பிரைட்: பிரஜாமத (கன்னடம்), பங்களூர்.

வெகு காலத்துக்கு முன்னமே இந்த நாட்டு மக்கள் வீரத்துக்குப் பிரசித்தி பெற்றவர்கள். இவர்களைப்போல் பெரியவர்களிடத்தில் அவ்வளவு மரியாதை செலுத்துபவர்கள் அபூர்வம். இவர்கள் சுதந்தரப் பிரியர்கள். பெண்கள் அழகும் தேக திடமும் தைரியமும் வாய்ந்தவர்கள். பண்டிகை என்றால் இவர்களுக்கு மிக மிக உற்சாகம்.

குடகின் தலைநகராகிய மடகேரி பல அழகிய கட்டிடங்களுடனும் இயற்கை எழிலுடனும் காட்சியளிக்கிறது. குடகில் பிறந்து வளர்ந்த ஸ்ரீ கரியப்பா அவர்கள் சுதந்தர இந்தியாவின் முதல் சேனாபதியாய்க் குடகுக்கு மட்டுமன்றிக் கர்னாடகத்துக்கே ஒப்பற்ற பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்.

பண்டிகைகள் இந்துக்களின் தனிப்பட்ட அம்சம். இங்கே இருப்பது போல் வெளி நாடுகளில் அவ்வளவு பண்டிகைகள் இல்லை. நாட்டின் பழைய பண்பாடு புது நாகரிகத்தின் தாக்குதலால் அழியாமல் மிஞ்சியிருப்பதற்குப் பண்டிகைகளைக் கொண்டாடுவதும் ஒரு காரணம்.

இந்தியா முழுவதிலும் கொண்டாடும் பண்டிகைகள் சில உண்டு. சில பகுதிகளில் மட்டும் விசேஷமாகக் கொண்டாடும் பண்டிகைகள் சில உண்டு. குடகு மக்கள் மற்றப் பிரதேசத்துப் பண்டிகைகளை அதிகமாகக் கொண்டாடுவதில்லை. இவர்களுக்கே சிறப்பாக அமைந்த பண்டிகைகளில் மூன்று முக்கியமானவை. ஒன்று 'கைல்மூர்த்த' என்பது. 'காவேரி சங்கிரமணம்' மற்றொன்று. மூன்றாவது 'ஹுத்ரி.' 'கைல்மூர்த்த' என்பது ஆயுத பூஜை. இது

ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில் வரும். இவர்கள் வாழ்க்கைக்கு விவசாயமே ஜீவநாடி. ஜூன் மாதத்தில் தென் மேற்குப் பருவக் காற்றுத் தொடங்கும்போது உழுதலும் விதைத்தலும் மும்முரமாக நடக்கும். ஓயாத மழையிலும் பனியிலும், விடிய ஒரு ஜாமத்தில் தொடங்கிச் சாயங்காலம் வரைக்கும் சேற்றிலும் தோட்டங்களிலும் விவசாயிகள் உழைப்பார்கள். இங்கே நீர்நிலைகள் அதிகமாக இல்லை. வானம் பார்த்த விவசாயந்தான். மழைக் காலத்தில்தான் விவசாயம் நடக்கவேண்டும். கஷ்டப்பட்டுப் பலனைப் பெற வேண்டும். ஆகஸ்ட் கடைசியில் மழை சற்று வெளி வாங்கும். பல நாட்களாக மேகங்களில் மறைந்து கிடக்கும் சூரிய பகவான் இந்தச் சமயத்தில் சற்றுத் தலையைக் காட்டுவார். அப்போது நடவு முடிந்திருக்கும். காற்று இதமாக வீசும். வேலையை முடித்த திருப்தியும், பாடுபட்டதன் பயனாகப் பயிர்கள் தலைதூக்கி ஆடும் அழகிய காட்சியைக் கண்ட திருப்தியும் மக்களின் முகத்தில் நிறைந்திருக்கும். இப்படி ஏற்பட்ட மகிழ்ச்சி பூஜை, விருந்து இவற்றின் மூலமாகத்தானே வெளிப்பட வேண்டும்!

'கைல்மூர்த்த' தினத்தன்று விவசாயிகள் தம் தொழில் சம்பந்த

மான ஆயுதங்களை ஒன்றாகத் துடைத்து வீட்டில் ஒரு புறம் வரிசையாக வைத்துப் பூஜிப்பார்கள். இவற்றுக்கு அன்னமும் மற்றத் தின்பண்டங்களும் நிவேதனம் செய்வார்கள். பூஜைகளாகட்டும், பண்டிகைகளாகட்டும், புரோகிதர் வந்து செய்யும் வழக்கம் இங்கே இல்லை. அவரவரே செய்வார்கள். அன்று ஆயுதங்களின் எதிரிலேயே சாப்பிடுவார்கள்.

சாப்பாட்டுக்குப் பின் ஊர்ப் பொதுச் சாவடிகளில் நடக்கும் விளையாட்டுக்களில் பங்கெடுத்துக் கொள்வார்கள். கத்தி வீச்சு, உரியடி இவைகளில் தங்கள் திறமையை வெளியிடுவார்கள். தேங்காயைக் குறி வைத்து அடிக்கும் பழக்கம் இங்கே அதிகம். மறு நாள் எல்லாரும் காட்டுக்கு வேட்டையாடப் போவார்கள்.

குடகு நாட்டைச் சேர்ந்த தலைக் காவேரியே காவேரிப் பேராற்றின் பிறந்த வீடு. துலா (ஐப்பசி) மாதத்தில் ஆகாய கங்கை காவேரியுடன் கலக்கிறாள் என்பது அநாதி காலந்தொட்டு வந்த ஐதிகம். அதனால் காவேரியின் பிறந்த நாடாகிய குடகில் துலா மாத ஆரம்பத்தைக் 'காவேரி சங்கிரமணம்' என்ற பெயரில் விசேஷமாகக் கொண்டாடுவார்கள்.

தலைக் காவேரி இயற்கை வனப்பு மிகுந்த பிரதேசத்தையொட்டி அமைந்திருக்கிறது. காவேரி தோன்றிய பிரம்மகிரியின்மேல் நின்று பார்த்தால் மேற்கே அரபிக்கடலும், வடக்கிலும் கிழக்கிலும் அழகே உருவான மலைத்தொடர்களும் காடுகளும் கணவாய்களும் கண் கொள்ளாக் காட்சியாகத் தோன்றும். இங்கே வருஷந்தோறும் 250 அங்குல மழை பெய்கிறது. எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென்றிருக்கும்.

தலைக் காவேரிக்குப் போகச் சௌகரியப்படாதவர்கள் வீட்டிலேயாவது பூஜை செய்வார்கள். வீட்டு எஜமானி விடியற்காலையில் எழுந்திருந்து ஒரு தட்டில் அரிசியை நிரப்பி அதன் நடுவில் விளக்கேற்றி வைப்பாள்; தட்டில் தன் நகைகளில் ஒன்றையும் வைப்பாள்; அரிசியால் செய்த அடை போன்ற தின்பண்டத்தையும் தட்டில் வைப்பாள். இந்தத் தட்டை ஒரு முக்காலியின்மேல் வைத்து வீட்டார் எல்லாரும் வணங்குவார்கள். வீட்டின் ஆண்களில் ஒருவர் சில அடைகளைக் கொண்டு போய் வீட்டின் பின்புறம் தரைமேல் வைத்துவிட்டு வருவார். மிஞ்சியவற்றை எல்லாரும் சாப்பிடுவார்கள். அன்று அந்த நாட்டில் பிரசித்தமான பசு மாட்டின் கதைபற்றிய பாட்டை எல்லா வீடுகளிலும் பாடுவார்கள்.

'ஹுத்ரி' என்பது ஒரு பண்டிகை. மலையாளத்திலும் இது போல் 'புதிய அரி' (புது அரிசி) என்று ஒரு பண்டிகை கொண்டாடுவார்களாம். அதுவே 'ஹுத்ரி' ஆயிற்று என்று சொல்லுகிறார்கள். இந்தப் பண்டிகை கார்த்திகை மாதத்தில் வருகிறது. இது குடகில் வெகு முக்கியமானது. இது ஒரு வார காலம் நடக்கிறது. சூரியன் மறைந்தபின் 6 வயதிலிருந்து 60 வயது வரை உள்ள ஆண் பிள்ளைகள் எல்லாரும் முதல் ஆறு நாளும் ஊர்ப் பொதுச் சாவடியில் கூடுவார்கள். தாரை, தம்பட்டம் முதலியவை பின்னணியாக ஒலிக்க, 'செண்டுக்கட்டு' என்பது போன்ற பழைய காலத்து விளை

யாட்டுக்களும், அந்தக் காலத்து யுத்தங்களைப்பற்றிய நாட்டியங்களும், வேறு பலவகை நாட்டியங்களும் நடக்கும். ஒவ்வொரு நாளும் விளையாட்டை ஆரம்பிக்கும் போதும் முடிக்கும்போதும் ஐயப்பன், மகாதேவன், பகவதி முதலிய நாமங்களைக் கோஷிப்பார்கள். ஏழாம் நாள் அநேகமாகப் பௌர்ணமியில் முடியும். இது 'ஹுத்ரி' யின் முக்கியமான நாள்.

அன்று அரசு முதலியவற்றின் இலைகளையும் 'இன்ஞேலி' என்னும் கொடியையும் எல்லார் வீட்டிலும் தருவிப்பார்கள். வீடுகளை மெழுகிப் பெருக்கிப் பாத்திரங்களைச் சுத்தம் செய்வார்கள். வீட்டுக்கு வரும் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் தாராளமாகப் பிச்சை இடுவார்கள். குறவன் புதிய உரி பின்னிக்கொண்டு வந்து கொடுப்பான். குயவன் 'ஹுத்ரி'ப் புதுப் பானை பண்ணிக் கொடுப்பான். பாய் பின்னுபவன் புதுப் பாய் முடைந்து கொடுப்பான். இப்படி ஒவ்வொரு தொழிலாளியும் ஒவ்வொரு பொருளைக் கொடுப்பான். வீட்டார் அவைகளுக்குப் பதிலாக அரிசியும் வாழைப் பழமும் கொடுத்தனுப்புவார்கள். மாடு கன்றுகளைக் குளிப்பாட்டுவார்கள்.

சாயங்காலம் ஸ்நானம் செய்த ஒருவர் 'இன்ஞேலி'க் கொடியை மூன்று பாகங்களாக்கி அரசு முதலாகச் சேமித்த இலைகளால் சுற்றுவார். அதற்கென்று வழக்கமான ஒருவகை நாரினால் கட்டுவார். இவற்றை 'ஹுத்ரி' உரியில் வைப்பார்கள். வீட்டுப் பெண்கள் ஒரு தட்டில் அரிசியைப் பரப்பி அதன்மேல் விளக்கேற்றி வைப்பார்கள். மூன்று முடிச்சுகள் வைத்த உரியையும் விளக்கையும் எடுத்துக்கொண்டு எல்லோரும் வயலுக்குப் புறப்பட்டுப் போவார்கள். பயிர் வளர்ந்திருக்கும் வயலில் ஓரிடத்தில் ஓர் இலை முடிச்சைக் கட்டிப் பாலை ஊற்றிச் சில கதிர்களைக் கிள்ளி, வந்திருக்கும் எல்லாருக்கும் ஒவ்வொரு நுனியைக் கொடுப்பார்கள். பிறகு களத்தில் ஓர் இடத்தில் ஒரு கம்பத்தின்மேல் தானியக் கதிர்களையும் உரியிலுள்ள முடிச்சில் ஒன்றையும் கட்டி அலங்கரிப்பார்கள். வீட்டுக்குத் திரும்பி வரும் பொழுது, 'போளி, போளி' என்று எல்லாரும் கத்துவார்கள். இதற்கு 'அதிகப்படுத்து' என்பது பொருள். தானியக் கதிர்களை முதலில் பறித்த ஆசாமியை வழியில் யாரும் தொடமாட்டார்கள். வீட்டுக்குப் போனதும் எஜமானி அந்த ஆசாமியின் காலைக் கழுவி, ஒரு பாத்திரத்தில் பால், தேன், சர்க்கரை இவற்றைக் கலந்து கொடுப்பாள். பின்பு நடு வீட்டில் புதுப் பாயை விரித்துத் தானிய மூட்டையை அதன்மேல் வைப்பார்கள். வீட்டைத் தானியக் கதிர்களால் அலங்கரிப்பார்கள். பின்பு பாலில் வாழைப் பழம், தேன் இவற்றைக் கலந்து ஏழு புது அட்சதைகள், ஏழு தேங்காய்த் துண்டுகள், ஏழு சிறு கற்கள், ஏழு சுக்குத் துண்டுகள், ஏழு எல அரிசி, ஏழு சீரகம் இவற்றையெல்லாம் மாவாக்கி அதைக் கொட்டை இலையில் வைத்து எல்லாருக்கும் கொடுப்பார்கள். பின்பு எல்லோரும் மகிழ்ச்சியோடு சாப்பிடுவார்கள்.

இதன் பிறகு மூன்று நாட்கள் பல கூத்துக்கள் நடக்கும். 11-ஆம் நாள் பெரிய வன போஜனத்துடன் பண்டிகை முடியும்.



பிருது சரிதம்

துருவ வம்சத்தைப்பற்றிச் சொல்லும்படி விதுரர் மைத்திரேய முனிவரைக் கேட்டார். முனிவர் சொல்லலானார்:

"துருவ வம்சத்தில் அங்கன் என்று ஓர் அரசன் இருந்தான். அவன் அசுவமேத யாகம் செய்தான். அதில் தேவர்கள் அவிர்ப்பாகத்தை எற்கவில்லை. அரசன் கவலையுற்று முனிவர்களை நோக்கி, 'இது என்?' என்று கேட்டான். அவர்கள் வெகு நேரம் யோசித்த பின், 'அரசே, உங்களுக்கு மக்கட்பேறு இல்லை. அதற்குக் காரணம் நீங்கள் செய்த ஏதோ ஒரு பாவம். இதனால்தான் தேவர்கள் நீங்கள் கொடுத்ததை எற்கவில்லை. இருந்தாலும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்த யாகத்திலேயே விஷ்ணுவைக் குறித்து ஹோமம் செய்யுங்கள். உங்களுக்கு மகன் பிறப்பான்' என்றார்கள். அப்படியே செய்ததும் ஹோமத் தீயிலிருந்து பகவான் தோன்றி அரசனுக்குப் பாயசம் கொடுத்தார். அரசன் அதை அரசிக்குக் கொடுத்தான்.

"சிறிதுகாலங்கழித்து அரசிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு வேனன் என்று பெயர் வைத்தார்கள். வேனன் வளர்ந்து கொண்டே வந்தான். அதோடு அவன் உள்ளத்தில் கொடுமையும் வளர்ந்து வந்தது. பிறகு தெருவில் விளையாடும் மற்றக் குழந்தைகளை வாளால் வெட்டி எறிந்து விளையாடினான். காட்டுக்கு வேட்டையாடச் சென்று மிகச் சாதுவான மிருகங்களையும் கொன்றான். அவனைத் தொலைவில் காணும் போதே, 'ஐயோ, வேனன்!' என்று எல்லாரும் அஞ்சியோடினார்கள்.

"மகனின் செய்கையைக் கண்டு அரசன் மனங் கலங்கினான். இந்த மாதிரி ஒரு மகன் இருப்பதை விட இராததே மேல் என்று கருதினான். கடைசியில் வெறுப்



கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

புற்று, ஒரு நாள் இரவு மகனுக்கும் மனைவிக்கும் தெரிவிக்காமல் காட்டுக்கு ஓடிவிட்டான்.

"மந்திரிகளும் குடிமக்களும் அரசனைத் தேடிப் பார்த்தார்கள். அரசனைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. முடிவில் மந்திரிகளுக்கும் குடிகளுக்கும் விருப்பம் இல்லாவிட்டாலும், ராஜ்யப் பாதுகாப்பைக் கருதி வேனனுக்கு முடி சூட்டினார்கள்.

"வேனன் ராஜ்யபாரம் ஏற்றபின் மதங்கொண்ட யானைபோல் கட்டுக்கடங்காமல் நடக்கத் தொடங்கினான். பெரியோரை அவமதித்தான். தேரில் ஏறி ஊர் ஊராகப் போய் எவரும் யாகம், தானம் முதலியவற்றைச் செய்யக் கூடாது என்று பறை சாற்றுவித்தான். முனிவர்கள் இதைக் கண்டு வருந்தினார்கள். 'நாமோ நாட்டுக்கு அரசன் இல்லையே என்று இவனை அரசனாக்கினோம். இது பாம்புக்குப் பால் வார்த்தது போல ஆயிற்று. நாம் ஒன்று சேர்ந்து நல்ல வழியைக் கடைப் பிடிக்கும்படி இவனுக்குப் புத்தி சொல்வோம். அப்படி இவன் கேட்காவிட்டால் யோகசக்தியால் இவனை எரித்துவிடுவோம்' என்று தீர்மானித்தார்கள். அப்படியே அவனிடம் போய்த் தெரிவித்தார்கள்.

"வேனன் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் ஏன் இப்படி அசட்டுத்தனமாகப் பேசுகிறீர்கள்? உங்களைக் காப்பாற்றும் அரசனை விட்டு இந்திரன், யமன், விஷ்ணு, ருத்திரன் முதலிய தேவர்களின் பெயரைச் சொல்லிப் பொருளை ஏன் பாழாக்க வேண்டும்? இது எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு பெண் தன் கணவனை மதியாமல் அயலானை வழிபடுவது போலத்தான் இருக்கிறது. அரசன் எல்லாத் தேவர்களின் அம்சமும் படைத்தவன் என்று சாஸ்திரங்களே சொல்லுகின்றன. ஆகவே, என்

னைத் திருப்தி செய்யுங்கள். என்னை விடப் பெரியவன் எவன் இருக்கிறான்?' என்றான்.

"இதைக் கேட்டதும் முனிவர்கள் கோபமுற்றார்கள்; 'மகா விஷ்ணு போன்ற தெய்வங்களையே 'இந்தப் பாவி இகழ்கிறான். இவன் ஒழியவேண்டும்' என்று 'ஹும்' என்ற சப்தத்தாலேயே அவனைக் கொன்றார்கள்.

"முனிவர்கள் சென்ற பிறகு வேனனின் தாய் தன் தவத்தின் வலிமையால் அவன் உடலைக் காத்து வந்தாள். ஒரு நாள் முனிவர்கள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சரஸ்வதி நதிக்கரையில் அமர்ந்திருந்தார்கள். அப்போது கொடிய சகுனங்கள் சில தோன்றின. அரசனற்றுத் தவிக்கும் பூமிக்குக் கேடு விளையாமல் இருக்கவேண்டுமே என்று அவர்கள் பிரார்த்தித்தார்கள். அங்க மகாராஜா விஷ்ணு பக்தன் ஆனதால் அவன் வம்சத்தை வளர்ப்பதென்று தீர்மானித்தார்கள். இறந்து கிடக்கும் வேனனிடம் சென்று அவன் தொடையைக் கடைந்தார்கள். அப்போது காகம் போல் கரிய மேனியுடன் குட்டையாய்க் குறுகிய கை கால் கொண்டு, பருத்த தாடையும் சிவந்த தலைமயிரும் உள்ள ஒருவன் தோன்றினான். அவன் முனிவர்களை நோக்கி, 'என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான். முனிவர்கள் அவனை, 'நிஷீத (உட்கார்)' என்றார்கள். இதனால், வேனனின் பாவமே உருவாய் வந்த அவனுக்கு 'நிஷாதன்' என்று பெயர் வந்தது. அவன் வம்சத்தில் பிறந்தவர் 'நைஷாதர்' என்று பெயர் பெற்றுக் காட்டில் திரியலானார்கள்.

"மறுபடியும் அரசனின் இரண்டு கைகளையும் கடைந்தார்கள். அதிலிருந்து ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தோன்றினார்கள். அவர்களிடம் விஷ்ணுவின் அம்சத்தைக் கண்டு முனிவர்கள் மகிழ்ந்தார்கள். அவனுக்குப் 'பிருது' என்றும், அவளுக்கு 'அர்ச்சி' என்றும் பெயர் வைத்தார்கள். மகாவிஷ்ணுவும் லட்சுமி தேவியுமே உலகத்தைக் காக்க இந்த வடிவத்தில் வந்திருப்பதாக உணர்ந்து அவர்களைப் புகழ்ந்தார்கள்.

"அரசன், 'என் குணம் இன்னும் உலகத்தாருக்குத் தெரியாது. அதற்குமுன் என் இப்படி வீண் புகழ்ச்சி செய்கிறீர்கள்? வேண்டாமே' என்றான். பிறகு அரசன் அவரவர்களுக்குரியவாறு சம்மானம் அளித்துத் தக்கபடி உபசரித்தான்.

"பிருது பட்டத்துக்கு வந்த சிறிது காலத்துக்கெல்லாம் குடிகள் பசியால் வாடி இளைத்து அவனிடம் வந்து, 'எங்களை எப்படியாவது காப்பாற்றவேண்டும்' என்று முறையிட்டார்கள். பிருது சற்று நேரம் யோசித்துவிட்டுத் தியானத்தில் ஆழ்ந்தான். உடனே மக்கள் துன்புறும் காரணத்தை உணர்ந்தான். கையில் வில்லை ஏந்திப் பாணந்தொடுத்துப் பூமியின்மேல் குறி வைத்தான். உடனே பூமி நடுங்கி ஒரு பசுவின் வடிவத்தில் அவன் எதிரே ஓடத் தொடங்கியது. அவன் கோபத்துடன் அதைப் பின் தொடர்ந்தான். எங்கே தப்பி ஓடப் பார்த்தும் பின்னால் அரசன் வருவதைக் கண்டு வேறு வழியின்றி அது வருத்தத்துடன் சொல்லியது: 'அரசே, தாங்கள் உலகத்தில் எல்லாரையும் காக்க வேண்டிய

வர். என்னையும் அப்படியே காப்பாற்றுங்கள். நான் ஒரு பெண். தவறு செய்திருந்தாலும் ஒரு பெண்ணை யாரும் கொல்ல மாட்டார்கள். அப்படியிருக்கத் தங்களைப் போல் கருணை நிறைந்தவர்கள் இப்படிச் செய்யலாமா?' என்றது.

"அரசன், 'பூமி தேவியே, என் உத்தரவுக்கு நீ கீழ்ப்படிவதில்லை. யாக யக்ஞங்களில் பாகத்தை எடுத்துக்கொண்டு உலகத்துக்கு வேண்டிய பொருளை நீ தருவதில்லை. புல்லைத் தின்று பால் கொடுக்காத மாட்டைத் தண்டிப்பதுதான் நியாயம். என் குடிகள் பசியால் வாடுகிறார்கள். ஆணாக இருந்தால் என்ன, பெண்ணாக இருந்தால் என்ன? மக்களுக்குக் கொடுமை இழைத்தவர்களைத் தண்டிக்க வேண்டியதுதான். ஆகவே, உன்னைக் கொன்று யோக சக்தியால் மக்களைத் தாங்கி நிற்கப் போகிறேன்' என்றான்.

"இவ்விதம் யமனைப் போல் கோபமே உருவாக நிற்கும் அரசனைக் கண்டு பூமி கை கூப்பி வணங்கி, 'உலகைக் காக்க அவதரித்த நீங்களே என்னை அழிக்க முற்பட்டால் நான் யாரைத் தஞ்சம் அடைவேன்? கோபத்தை அடக்கிக்கொண்டு நான் சொல்வதைச் சற்றே கேளுங்கள். உலக இயல்புக்கு மாறாக ஒருவன் ஒன்றைச் செய்தால் உலகம் அவனுக்குப் பலன் தருமா? பிரம்மா என்னிடம் பல மரஞ் செடி கொடிகளைப் படைத்தார். ஆனால் தீயவர்களே அதை அதிகமாகப் பயன்படுத்துவதைக் கண்டேன். அப்போது நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் என்னைக் காப்பாற்ற வரவில்லையே. அதனால் அவைகளை நானே உள்ளடக்கிக்கொண்டேன். நாளடைவில் அவை என்னுடலில் ஜீரணமாகிவிட்டன. நீங்கள் யோக சக்தியால் அவைகளை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளுங்கள். உங்களிடம் எனக்கு அன்பு மிகுதியாக உண்டு. ஒரு கன்றை அளித்து என்னிடமிருந்து வேண்டியதைக் கறந்துகொள்ளுங்கள். உலகில் எல்லாப் பிராணிகளுக்கும் அது பயன்படும்படி நீங்கள் செய்தாகவேண்டும்' என்று வேண்டிக் கொண்டது.

"பிருதுவும் அதற்குச் சம்மதித்தான். மநுவைக் கன்றாகச் செய்து தன் கையையே பாத்திரமாக்கிக் கொண்டு எல்லா ஓஷதிகளின் சாரத்தையும் கறந்துகொண்டான். பிறகு அவன் சொன்னபடி முனிவர்கள் பிருகஸ்பதியைக் கன்றாக்கி வேதமாகிய பாலைக் கறந்தார்கள். தேவர்கள் இந்திரனைக் கன்றாக்கிச் சோம ரசத்தைக் கறந்தார்கள். அசுரர்கள் பிரகலாதனைக் கன்றாக்கி இரும்புப் பாத்திரத்தில் கள்ளைக் கறந்தார்கள். இப்படியே கந்தர்வர், பிதுருக்கள், வித்தியாதரர், யட்சர், அரக்கர், நாகர் முதலிய எல்லாரும் தங்கள் இனத்தில் சிறந்தவனைக் கன்றாகக் கொண்டு தமக்கு வேண்டியதைக் கறந்துகொண்டார்கள்.

"பிருது அன்பு மிகுதியால் பூமியைத் தன் பெண்ணாக ஏற்றுக் கொண்டான். தன் வில் நுனியால் மலைகளையெல்லாம் தட்டிச் சமப்படுத்தினான். கிராமங்களையும் நகரங்களையும் கோட்டைகளையும் ஏராளமாக நிறுவினான். மக்களைச் சுகமாக வாழும்படி செய்தான்.

உலகெங்கும் பரவிய பத்திரிகை

★

'மஞ்சரி'யைப் போன்ற 'டைஜெஸ்ட்' என்ற பத்திரிகைகளின் சாரத் திரட்டுக்கு உலகெங்குமே வழி காட்டிய முக்கியமான பத்திரிகை அமெரிக்க 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்.' அதன் வெற்றியும் வளர்ச்சியும் மிக்க ஆச்சரியமானவை.

கொரியா அரண் குழிகளிலும் சரி, அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடக்கும் விமான அறைகளிலும் சரி, அந்தப் பத்திரிகையைப் படிக்கிறார்கள்; ஸ்வீடன் குடியானவரும், பிரேஜில் குடும்பப் பெண்களும், ஜப்பானிய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளரும் அதை ரசிக்கிறார்கள்.

இப்படி உலகெங்குமே பரவிவிட்ட 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' பத்திரிகையின் வரலாறு, உலகத்துப் பத்திரிகைத் தொழிலின் சரித்திரத்திலேயே மிகவும் மகத்தானதொரு வெற்றியாகும். விளம்பர வருமானம் இல்லாமலே, விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கைப் பலத்தைக் கொண்டே, ஒரு பத்திரிகை வாழ்ந்து வெற்றி பெற முடியும் என்பதற்கும் அது சிறந்ததொரு ருசுவாகும். 30 வருஷ காலம் ஒரே ஒரு வரிகூட விளம்பரம் போடாமல் அது மேலும் மேலும் அபிவிருத்தியடைந்து கொண்டே வந்திருக்கிறது. (இப்போது 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' பத்திரிகையில் விளம்பரம் போடுகிறார்கள் - ஆசிரியர், 'மஞ்சரி.') 1951-இல் அதன் உள் நாட்டு விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கை மட்டும் 95 லட்சம். மொத்த வருமானம் சுமார் 3 கோடி டாலர். எச்செலவும் போக மிஞ்சிய லாபம் சுமார் 15 லட்சம் டாலர். உலகெங்கும் மாதந்தோறும் விற்பனையான

காப்பிரைட்: டைம் (ஆங்கிலம்), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

மொத்தப் பிரதிகளின் எண்ணிக்கை 1 கோடியே 55 லட்சம். 11 பாஷைகளில் அது அச்சாகிறது. 59 நாட்டினர் அதைப் படிக்கிறார்கள். குருடர்களுக்கான ப்ரெயில் எழுத்திலும் அதை அச்சிடுகிறார்கள். அதில் உள்ள விஷயங்களை யாராவது படித்துக் கிராம போன் ப்ளேட்டும் எடுக்கிறார்கள். இவைகளால் ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 31,000 குருடர்கள் பயனடைகிறார்கள்.

'டைஜெஸ்ட்' இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஹாலண்ட், இந்தியா இரண்டிலும் அதை அச்சிட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

வில்லியம் ராய் டி-விட் வாலஸ் என்பவரே 'டைஜெஸ்ட்' பத்திரிகையின் ஸ்தாபகர்; சொந்தக்காரர்; தலைமை ஆசிரியர். அவருடைய மனைவி லீலா பெல் வாலஸ் என்பவள் கூட்டாசிரியை. உலகத்திலேயே மிக அதிகமான பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகை 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்.' இப்படி அது வெற்றி பெற இந்தத் தம்பதிகள் இருவரும் சேர்ந்து அற்புத யுக்தி ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். மந்திர சக்தி வாய்ந்த அந்த யுக்தி என்ன தெரியுமா?

"நான்தான் அவருக்கு அந்தப் பெயரைக் கூறினேன்" என்கிறாள் மனைவி லீலா. "அதைத் தயாரிப்பதில் அப்படியொன்றும் கண்டிப்பான விதி கிடையாது. எனக்குச் சுவையாயிருக்கும் விஷயங்களை நான் தேடிக் கண்டுபிடிக்கிறேன்; அவைகளை அச்சிடுகிறேன்" என்கிறார் கணவர் வாலி. ஆனால், அடிக்கடி இவர்களுடைய பத்திரிகைக்கு விஷயதானம் புரியும் ஆசிரியர் லூயி ப்ராம்ஃபீல்டு என்பவரோ வேறு விதமாக அபிப்பிராயப் படுகிறார்: "சாமானிய அறிவு படைத்தவர்களுக்கு ரஸமா

வாலி தம்பதிகள்

யிருப்பதே அதன் வெற்றிக்குக் காரணம். வாலி மிகவும் சாமானிய அறிவு படைத்தவர்; அவருடைய வாசகர்களின் மனப்பான்மையை அவர் பிரதிபலிக்கிறார். வாலியின் பத்திரிகையைப் படிப்பதற்குக் கூர்ந்த அறிவும் வேண்டியதில்லை; சிந்தனை சக்தியும் வேண்டியதில்லை. ஆகவேதான் அதன்மீது இத்தனை வாசகர்களுக்குப் பற்றுதல்" என்கிறார் அந்த ஆசிரியர்.

பல வருஷங்கள் ஆகிவிட்டதால், வாலஸ் கடைப்பிடிக்கும் யுக்தியில் ஏதோ கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டிருப்பது உண்மை. ஆயினும், 1920-இல் அவர் மேற்கொண்ட அசல் யுக்தியில் அடிப்படையான மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. வாசகர்களுக்கு வாழ்க்கையில் மிகவும் நம்பிக்கை யூட்டும் கட்டுரைகளையே பெரும்பாலும் அவர் பொறுக்கியெடுத்துச் சுருக்கித் தருகிறார். இடையிடையே சாதுரியப் பழமொழிகளையும் விகடத் துணுக்குகளையும் தெளித்து வைக்கிறார். கவலை மூட்டும் அல்லது மூளையைக் குழப்பும் கட்டுரை எதையும் வாசகர் மீது 'டைஜெஸ்ட்' ஒருபோதும் சுமத்துவதில்லை. இந்த விஷயத்தில் அது வெகு ஜாக்கிரதை. ஆனால், மற்றப் பத்திரிகைகளிலிருந்து விஷயங்களைச் சாராம்சமாகத் திரட்டித் தரும் வெறும் 'டைஜெஸ்ட்' சஞ்சிகையாகமட்டும் அது இப்போதில்லை. அதில் வரும் கட்டுரைகளில் பாதிக்கு மேற்பட்டவைகளை 'டைஜெஸ்ட்' எழுத்தாளர்களே இப்போது எழுதிவிடுகிறார்கள். அவைகளில் சிலவற்றை முதலில் வேறு பத்திரிகைகளில் வெளியிடச் செய்கிறார்கள். பிறகு, அவைகளைக் கிரகித்து 'டைஜெஸ்'டில் வெளியிடுகிறார்கள். பொதுவாகச் சொன்னால் 'டைஜெஸ்'டில் வரும் விஷயங்கள் ரசமான சம்பாஷணை போன்ற நடையில் அமைந்திருக்க வேண்டும்; உற்சாக மூட்டுபவையாக இருக்கவேண்டும்; வாழ்க்கையின் ஆத்மிக அம்சம் என்று 'டைஜெஸ்ட்' ஆசிரியர்கள் நினைக்கும் தோரணையில் இயன்றிருக்கவேண்டும்.

'டைஜெஸ்ட்' உலகத்தில், பொதுவாக எல்லாம் நன்மையாகவே முடியும். கடவுளிடம் காட்டும் விசுவாசம், மலையைப் புரட்டிவிடும்; பிரார்த்தனை, புற்று நோயைக் குணப்படுத்திவிடும்; வறுமையில் பலவிதமான பாக்கியங்கள் புதைந்து கிடக்கும். ('எண்ணற்ற தரித்திரப் பீடைகளிடம் பணத்தைத் தவிர வேறொன்றும் இல்லை' என்று பழைய 'டைஜெஸ்ட்' கட்டுரை ஒன்று சொல்லிற்று!) 'டைஜெஸ்ட்' புதிய புதிய அற்புத மருந்துகளைப்பற்றிய செய்திகளை நம்பிக்கையோடு கிரகித்து வெளியிடுகிறது. கிழத்தனம் என்பது வெறும் மனப்பான்மை என்பது அதன் கருத்து. சாவுகூடப் பயங்கரமானதில்லையாம். 'சாவிலே வேதனையில்லை' என்பது அதில் வெளியான ஒரு கட்டுரை. அதன் உலகத்தில், செடிகள் விலங்குகளைப் போல் செயல் புரியும்; விலங்குகள் மனிதர்களைப் போல் சிந்தித்துச் செயல் புரியும். மொத்தத்தில் 'டைஜெஸ்ட்' வாசகர்கள் தங்களைப்பற்றியும் உலக வாழ்க்கை பற்றியும் 'டைஜெஸ்'டைப் பற்றியும் மிக்க மகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

'டைஜெஸ்ட்' அதிபர் வாலிக்கு வயது 62; அவர் மனைவி லீலாவுக்கு வயது 61. வாலியின் தகப்ப

ஞர் டாக்டர் ஜேம்ஸ் வாலஸ். ஸெயின்ட் பால் என்ற இடத்துக்கு அருகே உள்ள மக்காலெஸ்டர் காலேஜில் அவர் ஒரு போதகராயிருந்தார். அங்கே வறுமைக்கிடையே பிறந்தார் வாலி. இவர் பிறந்தபோது தந்தை அந்தக் காலேஜின் பிரஸிடெண்ட் ஆனூர். அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 1,500 டாலர் சம்பளம். அவர் இந்தச் சம்பளத்தைக் கொண்டு தம்முடைய ஐந்து குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று. எளிய உணவு; காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை; சுருக்கமான உபதேசம்; மழையோ வெயிலோ, ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவாலயத்தில் இரண்டு தடவை நீண்ட வணக்கச் சடங்குகள் - இந்தக் கண்டிப்பெல்லாம் இரண்டாவது குழந்தை வாலிக்குப் பிடிக்கவில்லை. அவர் முரண்டினூர். சரியாகப் படிப்பதில்லை. பேஸ்-பால் ஆடுவதிலும் எதாவது நமுட்டு விஷமம் செய்வதிலுமே ஈடுபட்டார்.

தந்தை பதவி வகித்த காலேஜில் இரண்டு வருஷம் படித்த பின்பு மாறுதலை விரும்பி, கலிஃபோர்னியா யூனிவர்ஸிடிக்கு வாலி போய்ச் சேர்ந்தார். அங்கே முதலிலிருந்தே படிக்க ஆரம்பித்தார். 1911- கிறிஸ்துமஸ் விடுமுறை வந்தது. பார்க்லே ஆக்கிஸன் என்ற நண்பர், வாஷிங்டன் ராஜ்யத்தில் உள்ள டாக்கோமா என்னும் இடத்துக்கு வாலியை அழைத்துச் சென்றூர். பார்க்லேயின் சகோதரி லீலா என்பவளை வாலி அங்கே கண்டு காதலுற்றூர். ஆனூல், அவள் ஏற்கனவே வேறொருத்தனுக்கு நிச்சயிக்கப் பெற்றிருந்தாள்.

அடுத்த வருஷம் காலேஜ் படிப்பை விட்டு, ஸெயின்ட் பால் என்ற இடத்துக்கே வாலி திரும்பினூர். அங்கே இவருக்கு இவருடைய தந்தை ஓர் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்தார். விவசாய சம்பந்தமான புஸ்தகங்களைப் பிரசுரிக்கும் ஒரு கம்பெனிக்கு, அந்தப் புஸ்தகங்களைப்பற்றிய சுற்றறிக்கைகளைத் தயாரித்துக் கொடுப்பது தான் வாலியின் வேலை. சீக்கிரமே வாலி இந்த வேலையை விட்டுவிட்டு, தாமே ஒரு புஸ்தகம் தயாரிக்கத் தொடங்கிவிட்டார். சகல இலவச விவசாயப் பிரசுரங்களின் விஷயங்களையும் சுருக்கித் தரும் 'டைஜெஸ்ட்' (சாரத் திரட்டு) என்பதே அதன் பெயர். இந்தப் புஸ்தகத்தைப் பிரசுரிக்க ஒவ்வொரு கம்பெனியாரிடமும் போய்க் கேட்டுப்பார்த்தார். பலிக்கவில்லை. பிறகு சகல வியாபாரப் பண்டங்களையும்பற்றி வர்ணிக்கும் ஒரு புஸ்தகம் தயாரித்து, வியாபாரிகளின் உதவியால் பிரசுரிக்கலாமா என்று யோசித்தார். அதன்பின் மொண்டனூ என்னும் இடத்தில் வைக்கோற் களத்தில் சம்பளத்துக்கு உழைத்துவிட்டு இரவில் படுத்துறங்க முயலும் போது, மகத்தான புதிய யோசனை ஒன்று இவருக்குத் தோன்றிற்று. "பத்திரிகைகளில் வரும் சகல விதமான சிறந்த கட்டுரைகளின் சாரத் திரட்டு ஒன்றையே ஏன் வெளியிடக்கூடாது?" என்று இவர் எண்ணினூர்.

ஆனூல், இதுபற்றி இவர் எதும் முயற்சி எடுக்கு முன்பு முதல் உலக யுத்தம் தொடங்கிவிட்டது. வாலி யுத்தத்தில் சேர்ந்து, ஸார்ஜண்ட் பதவி பெற்று, பிரெஞ்சு

யுத்த முனையில் 35-ஆவது டிவிஷனில் இருந்துகொண்டு போரிட்டார். 1918-இல் வெர்டுன் போர்க்களத்தில் ஒரு ஷ்ராப்னல் குண்டின் நாலு துண்டுகள் இவர் உடம்பில் பாய்ந்து, இவரைக் காயப்படுத்திவிட்டன. (அந்த நான்கு துண்டுகளில் ஒன்று பல வருஷம் இவர் உடம்பிலேயே இருந்து வந்து 1950-இல்தான் இவருடைய மூக்கின் வழியாக வெளியே வந்தது.) போர்க்களத்தில் காயமுற்ற அவர் நான்கு மாதம் ஆஸ்பத்திரியில் கிடந்தார். குணமடைந்து வரும் காலத்தில், சில பத்திரிகைக் கட்டுரைகளைச் சுருக்கிப் பார்த்தார். அந்த வேலை தமக்கு மிகவும் சுலபமாக இருக்கக் கண்டார்.

ஸெயிண்ட் பாலுக்கு வாலி திரும்பினர். அங்கிருந்த பொது லைப்ரரிக்குப் போய்ப் பல பத்திரிகைகளைப் படித்தார். அவற்றில் சில பத்து வருஷம் பழமையானவை. ரசமான கட்டுரைகளைச் சுருக்கித் தம் கையாலேயே நகல் செய்தார். 1920 - ஜனவரியில் ஜேபிக்கு அடக்கமான (பாக்கட் ஸைஸ்) ஸாம்பிள் பத்திரிகை ஒன்றை 200 பிரதிகள் அச்சிட்டார். "நிரந்தர மதிப்புள்ள 31 கட்டுரைகள் அடங்கியது" என்று அதில் குறிப்பிட்டார். அதற்கு 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' என்ற பெயரும் சூட்டினர். மன்ஹாட்டன் பிரதேசத்துப் பிரசுரகர்த்தர்களில் பத்துப் பன்னிரண்டு பேருக்கும் வேறு சிலருக்கும் அதன் பிரதிகளைத் தபாலில் அனுப்பினர். அவர்களில் யாராவது தமது பத்திரிகையை ஏற்று நடத்தக் கூடும் என்று இவர் நம்பினர். இவருடைய அதிருஷ்ட வசத்தால், அவர்கள் அத்தனை பேரும் அதை நிராகரித்துவிட்டார்கள். "அவர்களில் எவராவது என்னை ஆசிரியராக அமர்த்திக்கொள்ள மட்டும் சம்மதித்திருந்தால் போதும்; அவருக்கே இதைக் கொடுத்திருப்பேன்" என்று வாலி இப்போது சொல்லுகிருர்.

வாலிக்கு இன்னோர் அதிருஷ்டமும் அடித்தது. தம்முடைய பழைய நண்பர் பார்க்லே ஆக்கிஸனை மறுபடியும் ஸெயிண்ட் பால் நகரில் தற்செயலாக வாலி சந்தித்தார். ஆக்கிஸன் இப்போது ஒரு பாதிரியாகப் பதவி வகித்தார். அவருடைய சகோதரி லீலாவுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. யுத்த காலத்தில் தொழிற்சாலைப் பெண்களுக்குப் பொழுது போக்கு முதலியவைகளை ஏற்பாடு செய்யும் வேலையில் லீலா ஈடுபட்டாள். இன்னும் அதே வேலையைப் புரிந்துகொண்டிருந்தாள். இதைக் கேட்டு வாலிக்கு வெகு சந்தோஷம். உடனே அவளுக்கு ஒரு தந்தி கொடுத்தார்: "ஸெயிண்ட் பால் பெண் தொழிலாளிகளின் நிலைமை மகா மோசம். உடனே விசாரிக்கும்படி வற்புறுத்து." ஒரு வாரத்துக்கெல்லாம் அதிருஷ்டவசமாக லீலாவையே இந்த இடத்துக்கு அதிகாரிகள் அனுப்பிவிட்டார்கள். எட்டு வருஷங்களுக்குப் பிறகு முதல் முதலாக அவளை வாலி சந்தித்தார். முதல் நாளிரவு, "என்னை மணந்துகொள்" என்று வாலி கேட்டுக்கொண்டார். இரண்டாம் நாளிரவு, "சரி" என்று லீலா சம்மதித்தாள். உடனே சிறிது கூச்சத்தோடு தமது 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' பிரதி ஒன்றை

அவளிடம் வாலி காட்டினார். "அற்புதமானது இந்தப் பத்திரிகை யோசனை என்று அப்போதே எனக்குப் பட்டது" என்று லீலா இன்று சொல்கிறாள். ஆனால், அன்று அதைப் பிரசுரிக்கவோ இருவரும் மணம் புரிந்து கொள்ளவோ இவர்களிடம் பணம் இல்லை. லீலா மீண்டும் பொதுநல ஸேவை புரிய, நியூ யார்க் நகருக்குப் போய்விட்டாள். பிட்ஸ்பர்க் நகரில் வெஸ்டிங் ஹவுஸ் என்ற கம்பெனிக்கு விளம்பரத் துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்க வாலி போய்விட்டார். ஆனால், கொஞ்ச காலத்துக்கெல்லாம் வாலியை அந்தக் கம்பெனியார் தள்ளிவிட்டார்கள்.

இச்சமயம் தப்பினால் மறு சமயம் வாய்ப்ப தரிது. தந்தையிடமும் சகோதரரிடமுமிருந்து வாலி 4,000 டாலர் கடன் வாங்கிக் கொண்டார். "ரீடர்ஸ் டைஜெஸ்ட் என்ற சின்னஞ் சிறு பத்திரிகைக்குச் சந்தா வேண்டும்" என்று ஆயிரக்கணக்கான பேருக்குத் தபால் மூலம் வேண்டுகோள் விடுத்தார். பிறகு லீலா இருக்கும் இடத்துக்குப் போய் அவளை மணம் புரிந்துகொண்டார். இரண்டு வாரம் 'ஹனிமூன்' (உல்லாச யாத்திரை) செய்துவிட்டுத் தம்பதிகள் திரும்பி வந்து பார்த்தபோது, மும்மூன்று டாலர் அடக்கம் செய்த 1,500 பதில்கள் வந்திருக்கக் கண்டார்கள்.

இதுபற்றி இப்போது குறிப்பிடுகையில், "இத்தனை பேர் சந்தா அனுப்பிவிட்டார்களே என்று நான் பரவசமடைந்தேன். வாலியோ அத்தனை பேரும் அனுப்பவில்லையே என்று வருத்தமுற்றார்" என்கிறாள் லீலா.

முதல் இதழைத் தயாரிப்பதில் துளியும் சிரமமில்லை. 1920-ஆம் வருஷத்து ஸாம்பிள் பிரதியிலிருந்தே பல கட்டுரைகளை வாலி எடுத்துக்கொண்டார். மன்ஹாட்டன் லைப்ரரிக்கு வந்த பத்திரிகைகளிலிருந்து புதிதாகச் சில கட்டுரைகளையும் எடுத்துக்கொண்டார். கட்டுரைகளை நகல் செய்து மீண்டும் பிரசுரிக்கப் பத்திரிகாசிரியர்களை அநுமதி கேட்கச் சென்றபோது, வாலிக்கு மிகவும் கூச்சமாயிருந்தது. துணைக்கு லீலாவையும் அழைத்துக்கொண்டே சென்றார். "டைஜெஸ்டில் விளம்பரமே போடப் போவதில்லை" என்று வாலி உறுதி கூறியதால், 'அது தங்களுக்குப் போட்டியாயிராது' என்று பத்திரிகாசிரியர்களெல்லாம் எண்ணினார்கள். ஆகவே, மாறு சொல்லாமல் அவர்கள் அநுமதி கொடுத்தார்கள்.

தமது பத்திரிகையை முக்கியமாகப் பெண்களே விரும்புவார்கள் என்று வாலி எண்ணினார். அதனால் ஆசிரியர் ஜாபிதாவின் தலைப்பில் லீலா பெல் ஆக்கிஸன் என்ற பெயரைப் போட்டார். பிறகு தம்முடைய பெயரோடு வேறு இரண்டு பெண்களின் பெயரையும் போட்டார். ஆனால் அந்த இரண்டு பெண்களுக்கும் இவர் பத்திரிகைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. கிரீன்விச் கிராமத்தில் கள்ளச் சாராயம் விற்கும் ஒரு கடையில் தரைக்குக் கீழேயிருந்த ஓர் அறையை ஆபீஸாக வாடகைக்கு அமர்த்திக்கொண்டார். பிட்ஸ்பர்க் அச்சுக்கூடத்திலிருந்து முதல் இதழின் 5,000 பிரதிகளும் வந்தன. உடனே சாராயக் கடைச் சிப்பந்திகளை யெல்லாம் லீலாவுக்கும் தமக்கும் உதவி புரி

யக் கூலிக்கு அமர்த்திக்கொண்டு அந்தப் பிரதிகளுக்கெல்லாம் விலாசத்தாள் சுற்றி விலாசம் எழுதச் செய்தார். இப்படித் தயாரித்தவைகளைச் சாக்குகளில் போட்டு ஒரு டாக்ஸியில் ஏற்றித் தபாலாபீஸுக்கு அனுப்பினர். தங்கள் பத்திரிகையின் வருங்கால வெற்றிக்காக உல்லாசமாய் 'டோஸ்ட்' குடிக்க, லீலாவும் வாலியும் ஒரு கஃபேக்குப் போனார்கள்.

வருங்கால வெற்றி அவர்களுக்கே வியப்பாகும்படி அப்போதே தொடங்கிவிட்டது. சந்தாதார்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் ஏராளமாய் வந்து குவிந்தன. "டைஜெஸ்டில் உள்ள விஷயம் அத்தனையும் தங்கம்" என்று ஒருவர் எழுதினார். எதிர்பார்த்ததற்கு மேல் மிகப் பெரும் வெற்றி கிட்டியதாக, இரண்டாவது இதழில் லீலா எழுதினாள். சில மாதங்களுக்குப் பிறகு பளேஸண்ட்வில் என்ற வேறிடத்தில் மாதம் 25 டாலர் வாடகைக்கு ஓர் அறையை வாலி தம்பதிகள் பிடித்துக்கொண்டார்கள். அதுவே ஆபீஸ், சமையலறை, உட்காரும் கூடம், படுக்கையறை ஆகிய எல்லாம். ஆனால், வாலி ஒரு நாள் ஒரு பெரிய மேஜையை அதற்குள் கொண்டுவந்து தள்ளியதோடு, ஒரு காரியதரிசியையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டார். இடம் போதாதென்று மாதம் 10 டாலருக்குப் பக்கத்துக் குதிரை லாயக் கொட்டகை ஒன்றை லீலா வாடகைக்குப் பிடித்து, அதை ஆபீஸாகச் செய்தாள். வெகு சீக்கிரத்தில் டைஜெஸ்ட் அந்தக் குதிரை லாயக் கொட்டகைக்குள் அடங்காமல் பிரம்மாண்டமாய் வளர்ந்துவிட்டது. ப்ளெஸண்ட்வில் நகரில் பல கட்டிடங்களை அது கைப்பற்றிக்கொண்டது. டைஜெஸ்டுக்கு வந்து குவிந்த கடிதங்களைச் சமாளிக்க நகருக்குப் பெரிய தபாலாபீஸ் ஏற்படவேண்டியதாயிற்று. 1929-இல் ஏழே வயதான டைஜெஸ்டுக்கு 2 லட்சத்து 16 ஆயிரத்து 190 சந்தாதார்கள் ஏற்பட்டுவிட்டார்கள்; 6 லட்சம் டாலருக்கு மேல் சந்தா வரவாயிற்று.

இப்படியெல்லாம் பத்திரிகை வளர்ந்த பிறகும், எங்கே அது கவிழ்ந்து போகுமோ என்று வாலிக்கு எந்நேரமும் பயந்தான். டைஜெஸ்டில் விளம்பரம் வாங்கப் போடாததால், அது எத்தனை பிரதிகள் விற்பனையாகிறது என்ற விவரத்தை வெளியிட அவசியமில்லாதிருந்தது. ஆகவே, வாலி வெகு சிரமப்பட்டு அதை ரகஸ்யமாகவே வைத்துக்கொண்டார். டைஜெஸ்டைப் பத்திரிகைக் கடைகளில் தொங்க விடவில்லை. பிறர் யாராவது தம்மைக் காப்பியடித்துவிடுவார்களோ என்பது வாலியின் பயம். தவிர, தங்கள் கட்டுரைகளை உபயோகித்துக்கொள்ள அநுமதியளித்த பத்திரிகைகள் அந்த அநுமதியை நிறுத்திவிடுமோ என்று வேறே பயம். இந்தப் பயங்களுக்கு ஏற்றாற்போல் சில சம்பவங்களும் நிகழ்ந்தன. ஏராளமான லாபம் வரத் தொடங்கியதும், தாம் உபயோகிக்கும் கட்டுரைகளுக்குப் பணம் கொடுக்க, வாலி முன் வந்தார். டைஜெஸ்டின் வளர்ச்சி பற்றி அப்போதுதான் மற்றப் பத்திரிகாசிரியர்கள் விழித்துக் கொண்டார்கள். தங்கள் கட்டுரைகளை டைஜெஸ்டில் பிரசுரிக்க அநுமதி தருவதை இனி நிறுத்திவிட வேண்டியதுதான்

என்று அவர்கள் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள். இப்படி முணு முணுக்கத் தொடங்கிய பத்திரிகைக்காரர்களின் அநுமதிக்காக அவர்களுடைய பத்திரிகைக் கட்டுரைகளில் தாம் உபயோகித்துக் கொள்ளும் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே கட்டணம் செலுத்துவதோடு வருஷ வர்த்தனையாகவும் கொழுத்த பணம் கொடுக்க இசைந்து அவர்களை வாலி சமாதானப் படுத்தினார். டைஜெஸ்டை நகல் செய்கிறவரும் பலர் முளைத்தார்கள். ஆனால், அவர்களில் பலருடைய பத்திரிகைகள் சில மாதங்களிலேயே வாடி உதிர்ந்து போயின.

தமக்கு அநுமதி அளித்துள்ள பத்திரிகைகள் அதை எந்த நிமிஷத்தில் நிறுத்திவிடுமோ என்ற பயம் இன்னமும் வாலிக்கு இருந்து கொண்டே வந்தது. அப்படி அவை மறுத்த நிமிஷத்திலேயே இவருடைய பத்திரிகை கவிழ்ந்து விடுமே; என்ன செய்வது? இதற்காக 1933-இல் தம்முடைய பத்திரிகையில் வாலி ஒரு பெரும் மாறுதலைச் செய்தார். முற்றும் பிற பத்திரிகைக் கட்டுரைகளையே எடுத்துப் பிரசுரிப்பது என்பதை விட்டு, அசல் கட்டுரைகள் சில வற்றையும் டைஜெஸ்டில் போடத் தொடங்கினார். தமக்குத் தேவையான முறையில் பலவித விஷயங்கள்பற்றியும் கட்டுரைகள் எழுதுவதற்காக யாத்திரை ஆசிரியர்கள் (ரோவிங் எடிட்டர்ஸ்) பலரை வாலி அமர்த்திக்கொண்டார். இதெல்லாம் போக, தம் ஆட்களைக் கொண்டு பிற பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி உதவச்செய்து, அவைகளையே எடுத்துச் சுருக்கி டைஜெஸ்டில் திரும்பவும் பிரசுரிக்கத் தொடங்கினார். இந்த மாதிரி இவர் விநியோகிக்கும் கட்டுரைகளைப் பெரிய பத்திரிகைகள் வாங்கிக்கொள்ளத் தேவையில்லை. போராடிக்கொண் டிருக்கும் சிறிய பத்திரிகைகள் சந்தோஷமாக இவற்றை வாங்கிக்கொண்டன. இப்படியெல்லாம் அசல் கட்டுரைகளை வாலி பிரசுரிக்கத் தொடங்கிய நான்கு வருஷத்துக்கெல்லாம், பத்திரிகை விற்பனை 4 லட்சத்து 49 ஆயிரத்து 666-இலிருந்து 24 லட்சத்து 69 ஆயிரத்து 527 பிரதிகளாக உயர்ந்து விட்டது. 1939-இல் ப்ளெஸண்ட்வில் நகரத்துக் காலிக் கட்டிடங்கள் அத்தனையும் போதாமல் டைஜெஸ்ட் வளர்ந்துவிட்டது. ப்ளெஸண்ட்வில் நகரத்துக்குச் சில மைல் வடக்கே சப்பாக்குவா என்ற இடத்துக்கருகே 15 லட்சம் டாலர் செலவில் பிரம்மாண்டமான செங்கல் கட்டிடம் ஒன்றை வாலி கட்டினார். இந்தப் புதிய கட்டிடத்திலேயே உண்மையில் தலைமை ஆபீஸ் இருக்கிறது. ஆயினும், பழைய ப்ளெஸண்ட்வில் நகரத்தையே மாற்றாமல் டைஜெஸ்டின் விலாஸமாக வாலி வைத்துக் கொண்டிருக்கிறார்.

யாத்திரை ஆசிரியர்களுக்கு 10 ஆயிரம் டாலர் முதல் 20 ஆயிரம் டாலர் வரையில் வாலி வருஷச் சம்பளம் கொடுக்கிறார். தவிர, அவர்களுடைய கட்டுரைகளுள் பிரசுரமாகிற ஒவ்வொன்றுக்கும் குறைந்த பட்சம் 1,200 டாலர் சம்மானம் அளிக்கிறார். மேலும், போனஸ் வேறு உண்டு. யாத்திரை ஆசிரியர்கள் தங்களுக்கு இஷ்டமானபடி உலகத்தின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் டைஜெஸ்டின் செலவில் போய்

வருமாறு வாலி உற்சாகப்படுத்துகிறார்.

வெளியார் கட்டுரைகளுக்கும் வாலி நல்ல சம்மானம் அளிக்கிறார். டைஜெஸ்டுக்காகச் சுருக்கிய வெளியார் கட்டுரைகளுக்கு டைஜெஸ்டின் பக்கம் ஒன்றுக்கு 200 டாலர் முதல் 800 டாலர் வரையில் கொடுக்கிறார்.

டைஜெஸ்டின் ஸீனியர் எடிட்டர்கள் 20 ஆயிரம் டாலர் முதல் 50 ஆயிரம் டாலர் வரையில் வருஷச் சம்பளமும் அதில் பாதி போனஸும் பெறுகிறார்கள். சில வருஷங்களில் சிலருக்குச் சம்பளத்தைவிடப் போனஸே அதிகமாகக் கிடைத்து விடுவதுண்டு.

வாலி சில வருஷங்களில் 99 ஆயிரத்து 500 டாலர் தமக்குச் சம்பளம் எடுத்துக் கொள்கிறார். வேறு சில வருஷங்களில் 75 ஆயிரம் டாலருக்குக் குறைவாகவே எடுத்துக் கொள்கிறார்.

லீலா பெறும் சம்பளம் எப்போதுமே 75 ஆயிரம் டாலருக்குக் குறைவுதான்.

1,060 பேருக்குமேல் டைஜெஸ்டில் வேலை பார்க்கிறார்கள். அத்தனை பேருக்கும் தாராளமாகப் பென்ஷன் வழங்கவும் இன்ஷியூரன்ஸ் பாலிஸிகள் பெறவும் வாலி ஏற்பாடு செய்திருக்கிறார்.

டைஜெஸ்டிலிருந்து யாரையுமே வேலையை விட்டுத் தள்ளுவதில்லை.

வாலி தம்பதிகளுக்குக் குழந்தைகள் இல்லாததால், செல்வம் குவிக்க அவர்களுக்கு இஷ்டமில்லை. ஆகவே, வாலியும் லீலாவும் டைஜெஸ்டில் தங்களுக்குரிய பங்குகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு தர்ம ஸ்தாபனத்துக்கு மாற்றி வருகிறார்கள். அந்த ஸ்தாபனமே பிற்காலத்தில் டைஜெஸ்டை நிர்வகித்து வரும்.

இத்தனை கண்ணாடி ஏன்?

பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீனிடம் எப்போதும் மூன்று ஜதை மூக்குக் கண்ணாடி இருக்கும்.

"இத்தனை கண்ணாடி எதற்கு?" என்று யாராவது கேட்டால் அவர், "சொல்லுகிறேன், கேளுங்களேன்: படிப்பதற்கு ஒன்றை உபயோகிக்கிறேன். இன்னொன்றைத் தூரப் பார்வைக்கு உபயோகிக்கிறேன். இந்த இரண்டையும் அடிக்கடி தொலைத்து விடுவதால் இவைகளைத் தேட மூன்றாவது ஜதை ஒன்று வைத்திருக்கிறேன்" என்பார்.

—'வொர்ல்டு டைஜெஸ்ட்'

எதன் மேல்?

அந்த ஊர்க் கருமான் அவசரம் அவசரமாகக் கற்றுக்குட்டி ஒருவனைத் தேடிப் பிடித்து அவனிடம், "லாடத்தை நெருப்பிலிருந்து நான் எடுத்துப் பட்டடைமேல் வைத்ததும், தலையை ஆட்டுகிறேன். உடனே நீ அதன்மேல் சம்மட்டியால் ஓங்கி அடிக்கவேண்டும்" என்றான்.

கருமான் சொன்னபடியே அந்த ஆள் செய்தான். இப்போது அவன்தான் கிராமத்துக் கருமான்.

—'கோட் கெமிட்டீஸ்'

கார்ட்டூன் கதம்பம்



ஐ. நா. பொது அசெம்பிளித் தலைவர் பதவிப் போட்டியில் சியாமிய இளவரசரைத் தோற்கடித்தார் விஜயலக்ஷ்மி பண்டிட்.
—'சங்கர்ஸ் வீக்லி'யில் சங்கர்



தேசபக்தி, ராஜ்ய பக்தி என்ற ஜோடிக் குதிரைகள் பூட்டிய ஆந்திர ரதத்தை ஓட்டிச் செல்கிறார் ஸ்ரீ டி. பிரகாசம். —'ஹிந்து'வில் தாணு.

மனிதன் என்றுவது கிழவனு
வதுண்டா? இல்லையா?

எழுபதுக்கு மேல்

முகுல் குப்த

புது டில்லியிலிருந்து வந்த ஒரு செய்தி இது: "அக்டோபர் 1-ஆம் தேதி ஸ்ரீ டி. பிரகாசம் ஆந்திர ராஜ்யத்தின் பிரதம மந்திரியாகி விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். அவர்தான் இந்தியாவிலேயே - ஏன் உலகிலேயேகூட - வயதான பிரதம மந்திரிகளில் மூத்தவர் என்று சொல்லவேண்டும். அவருக்கு இப்போது வயது 84. இதைப்பற்றி யாரோ பிரஸ்தாபித்தபோது அவர் சிரித்துக்கொண்டே, 'வாஸ்தவந்தான். பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், இப்படி இன்னும் பல பேர் கூட என்னைவிட வயதில் சின்னவர்கள்தான்' என்றார்."

இப்போதுதான் ஏற்பட்டுள்ள இந்த ராஜ்யத்துக்கு இவ்வளவு வயதான பிரதமர் வந்திருப்பதைப் பார்த்ததும், 'எவ்வளவு வயதானாலும் பெருங் கிழவனாவதில்லையா?' என்று புரியாமல் தவிக்க வேண்டியிருக்கிறது. சில பேர், "என் அது சாத்தியமாக இருக்கக் கூடாது?" என்று சொல்வார்கள். வேறு சிலர், "மனிதனுக்குக் கிழத்தனம் முற்றி வயதாகிவிட்டதே என்று அவனே எண்ணிக்கொண்டால் அதோடு அந்த மனிதனை, 'சரி, இவன் வயசாகிவிட்டவன். எதற்கும் இனி லாயக்கில்லை' என்று சொல்லிவிட வேண்டியதுதான்" என்பார்கள்.

இந்த இரண்டு விதமான கொள்கைகளில் இதுதான் சரி என்று நிர்ணயிப்பதற்கு இன்னும் இப்படிப் பலபேர் வாழ்க்கை வரலாறுகளைக் கவனித்தாக வேண்டும்.

விக்டோரியா மகாராணி காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த கிளாட்ஸ்டன் வெகு நாள்வரை அரசியல் துறையில் ஈடுபட்டவர். அவருக்கு வயதானபோதிலும் பொது விஷயங்களில் அக்கறையும், வாழ்க்கையிலும் வேலையிலும் பற்றும் மிகுதியாக இருந்தன. 70-ஆம் வயதில் அரசாங்கப் பொறுப்பை ஏற்று

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 27-9-'53), கல்கத்தா.

மூன்றும் முறையாக 76 - ஆம் வயதில் அதிகாரத்துக்கு வந்தார். 80 வயது இருக்கும்போது ஆக்ஸ் போர்டு யூனியன் என்ற சங்கத் தில் கிரேக்க மகாகவியான ஹோமரைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். ஹோரேஸ் என்ற கவி யின் சில நூல்களை அவர் 85 வய தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த் திருக்கிறார் என்றால் பாருங்கள்!

1914 ஆகஸ்டில் ஹிண்டன் பர்க்குக்கு 67 வயது இருக்கும் போது ஜெர்மன் எட்டாம் பட்டா ளத்துக்கு அவரைச் சேனாதிபதியாக நியமித்தார்கள். பிறகு 78-ஆம் வயதில் அவரை ஜெர்மன் குடியர சுக்குத் தலைவராக்கினார்கள். 87-ஆம் வயதில் மரணம் அடையும் வரையில் அவர் அந்தப் பதவி யிலேயே நீடித்திருந்தார்.

1917 ஏப்ரலில் பெடெய்ன் பிரெஞ்சுச் சேனாதிபதியானார். அப் போது அவருக்கு வயது 61. பிறகு அரசியலை விட்டு விலகி அவர் ஓய்வு எடுத்துக்கொண்டார். ஆனால் 1940 ஜூன் மாதம் அவர் பிரான்ஸின் பிரதம மந்திரியாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது அவருக்கு வயது 84.

பிரெஞ்சு அரசியல்வாதியான எடுவேர்டு ஹெர்ரியர் 79 வயதில் பிரெஞ்சுத் தேசிய அசெம்பிளியின் தலைவராகவும், தீவிர சோஷ லிஸ்டுகளின் தலைவராகவும் இருந்து வந்தார்.

வேல்ஸ் பிரதேசத்தைச் சேர்ந்த மாபெருங் கிழவரான லாயிட் ஜார்ஜ், பிரிட்டனில் 1920-க்கு மேல் தேசிய அரசாங்கம் ஏற்பட்ட போது எதிர்க் கட்சியில் முக்கியப் பிரமுகராக இருந்தார். 75 வயது வரைக்குங்கூட அவர் அரசியலில் கவனம் செலுத்தி வந்திருக்கிறார்.

அயர் நாட்டின் மாபெரும் வீர ரான ஈமன் டி வாலராவுக்கு 71 வயதாகிறது. இன்னும் அவர் எந்த எதிர்ப்பையும் ரோஷத் துடன் சமாளித்து வருகிறார் என் றால் பாருங்கள்!

வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு 80 வயது நெருங்கிக்கொண்டிருக் கிறது. கிளாட்ஸ்டனுக்குப் பின் அவர்தான் வயதில் மூத்த பிரதம மந்திரியாக இருந்து வருகிறார். இப்போது அவருக்கும் தள்ளாமை அதிகமாகி வருகிறது என்றாலும் இன்னும் அவருக்குச் செல்வாக்குப் பலமாகத்தான் இருக்கிறது.

ஜெனரல் மக்ஆர்த்தருக்கு 73 வயதாகிறது. இருந்தாலும் அவர் நிமிர்ந்து கம்பீரமாகத்தான் நடக் கிறார்; கண்ணும் கூர்மையாகத் தான் இருக்கிறது. 45 வயது ஆசாமி மாதிரி திடமாக இருக் கிறார். ஏப்ரல் 1951-இல் ஜப் பானை விட்டுப் போகும்வரை 52 வருஷகாலம் ராணுவத்தில் இருந் திருக்கிறார். விடுமுறை வாங்கா மல் வாரத்தில் ஏழு நாளும் உழைத் திருக்கிறார்.

70 வயதுக்கு மேலான மொஸ் ஸாடெக் வெகுநாள் வரை ஆங் கிலோ - ஈரானியச் சச்சரவைச் சாமர்த்தியமாகச் சமாளித்து வந் திருக்கிறார்.

இந்தியாவிலேயே பார்ப்போமே: சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரி யாருக்கு 74 வயதாகிறது. சென்னையின் பிரதம மந்திரியாகத் திடமாகத்தான் ஆட்சி நடத்தி வருகிறார்.

மேற்கு வங்காளப் பிரதம மந்திரி பிதான் சந்திர ராய்க்கு வயது 72 ஆகிறது. அவர் இன்னும் சக்தியோ உற்சாகமோ குன்றாமல், பல சிக்கல்கள் மலிந்த வங்க ராஜ்

யத்தை ஆண்டு வருகிறார். அவரை விட வயதில் சிறியவர்களெல்லாரும், "நம்மால் முடியவில்லை; எப்படி இவர் இவ்வளவு வேலையையும் சமாளிக்கிறார்?" என்று ஆச்சரியப்படுகிறார்கள்.

அரசியல் துறையில் மட்டுமன்றி இலக்கியத் துறையிலும் இப்படி அநேகம் பேரைக் காணலாம். இவர்களில் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா முக்கியமானவர். அவருடைய 93- ஆம் பிறந்த நாளின்போது பிரான்விஸ் வொயிட் என்பவர், "சமீபத்தில் புதிதாக ஏதாவது எழுதியிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"புதிதாகவா! நான் எப்போதும் அப்படி ஏதாவது எழுதிக் கொண்டேதான் இருக்கிறேன். 40 வயதில் உழைத்த மாதிரியே இப்போதும் கடுமையாகத்தான் உழைக்கிறேன்" என்றார் ஷா.

பெனெடெட்டோ குரோஸ் என்பவர் பிரபல இத்தாலிய தத்துவ ஞானி. அவர் 85-ஆம் வயதில் பிரதிதினமும் 10 மணி நேரம் எழுத்து வேலையில் ஈடுபட்டு வந்தார். இரண்டு நூல்களை இப்படி எழுதி வெளியிட்டார்.

ஜார்ஜ்சாந்தாயனாவைப்போன்ற பிரபல மேதை, உலகிலேயே அபூர்வம். அவர் 87-ஆம் வயதில் பெரிய நூல் ஒன்று எழுதினார்.

மாரிஸ் மேட்டர்லிங்க் 1949-இல் 88-ஆம் வயதிலே இறந்தார். அவர் 1940-இல் 78-ஆம் வயதில் கடைசியாக, 'சேதுபால் மடத்துக் குரு' என்று ஒரு நூல் எழுதினார்.

பெர்ட்ராண்ட் ரஸ்ஸலுக்கு 1950-இல் நோபெல் இலக்கியப் பரிசு கிடைத்தது. அப்போது அவருக்கு வயது 78. பல துறைகளில் கியாதி பெற்று, மனித சமூகத்துக்காகவும், கொள்கைச் சுதந்தரத்துக்காகவும் பாடுபட்டவர் என்ற காரணங்களுக்காகவே இந்தப் பரிசை அவருக்கு வழங்கினார்கள். 82-ஆம் வயதாகிற இன்றும் சம்பாஷணைத் துறையில் அவர் சிறந்து விளங்குகிறார்; அருமையாகப் பிரசங்கம் செய்கிறார்; தெளிவாக எழுதுகிறார்; சுதந்தரம், சத்தியம் இரண்டுக்காகவும் போரிடத் தயங்கவில்லை.

காப்பர்னிகஸ், நியூட்டன், டார்வின் போன்ற பிரபல விஞ்ஞானிகளின் வரிசையில் வைக்கத் தகுந்தவர் ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன். அவருக்கு இப்போது 79 வயதாகிறது; இன்னும் அவர் பிரபஞ்சத்தின் மர்மத்தை ஆராய்வதில் ஈடுபட்டுத்தான் வருகிறார்.

65 வயதான டாஸ்கானினி என்ற பிரபல ஆர்க்கெஸ்ட்ரா சங்கீத நிபுணர் சமீபத்தில் உள்ளத்தை உருக்கும்படி கச்சேரி ஒன்று நடத்தினார்.

எப்போதும் காரியத்தில் கண்ணாக இருப்பவர் பிரிட்டிஷ் பிரபுவான பீவர்-புரூக். பிரிட்டிஷ் காமன்வெல்த்திலேயே பெரிய ஆங்கிலத் தினசரி அவர் நடத்தும் 'டெய்லி எக்ஸ்பிரஸ்.' அவருக்கு இப்போது வயது 74.

இந்தியாவில் இன்றும் பெரிய மேதையாக விளங்குபவர் மோக்ஷகுண்டம் விசுவேசுவரையா. இவருக்கு வயது 92. பிரபல எஞ்சினீராக விளங்கிய இவருடைய சிறந்த நுண்ணறிவும் ஞாபக சக்தியும் இன்னும் மங்காமல் அப்படியே இருக்கின்றன.

தொழில் துறையிலும் வியாபாரத்திலுங்கூட இப்படியே வயதானவர்கள் ஈடுபட்டுப் பெயர் எடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட

நூறு வயது வாழ்ந்தவர் ஃபோர்டு. ஓர் இடத்தில் உட்கார்ந்து இன்னும் எத்தனை காலம் வாழ வேண்டுமோ என்று கவலைப்பட அவருக்கு நேரமே இல்லை. இளவயதிலும் நடு வயதிலும் தம் வியாபாரத்தை வளர்த்துத் தொண்டு கிழவரானபோது அதைச் சரிவரக் கவனித்துக்கொண்டார். ஸெப்டம்பர் 1945-இல் தம் கம்பெனியின் தலைமைப் பொறுப்பைத் தம் பேரரிடம் ஒப்பித்தபோது அவருக்கு 82 வயது இருக்கும். அப்போதும் அவருக்குத் தளர்ச்சி ஏற்படவில்லை.

கம்மோடர் வாண்டர்பில்ட் என்பவர் 70 வயதுக்கு மேல் 80 வயதுக்குள் 10 கோடி டாலருக்கு மேல் சம்பாதித்தாராம்.

லாரன்ஸ் ஹார்கின்ஸ் என்பவர் பிரபல அமெரிக்கக் கம்பெனி ஒன்றில் இருந்த எஞ்சினீர். இப்போது அவருக்கு வயது 74. அவர் வேலையிலிருந்து 'ரிடயர்' ஆனதும் தம்மைப் போன்ற சில நண்பர்களுடன் சேர்ந்து எம். டி. வி. என்ற ஒரு கம்பெனியை நிறுவினர். அதில் ஒருவர் வேலை செய்ய வருவதென்றால், அவர் குறைந்த பட்சம் 65 வயதாவது ஆனவராகவும் தனிப்பட்ட ஏதாவது கம்பெனியிலிருந்து உரிய காலத்தில் வேலையிலிருந்து 'ரிடயர்' ஆனவராகவும் இருக்க வேண்டுமாம்!

காண்ட் என்ற ஜெர்மன் அறிஞர் 74-ஆம் வயதில் மனித ஆராய்ச்சி, ஆத்மிகம், ஒழுக்கம் முதலியவை சம்பந்தமாக ஒரு நூலை எழுதினர்.

கெதே என்ற பிரபல ஜெர்மன் கவி 86-ஆம் வயதில் 'ஃபவுஸ்டஸ்' என்ற அரிய நூலை எழுதினர். பிரிட்டிஷ் மகாகவி டென்னிஸன் 83-ஆம் வயதில் 'கடலைக் கடத்தல்' என்ற உயர்ந்த கவிதை எழுதினர். 88-ஆம் வயதில் ஹாப்ஸ் 'இலியாது' என்ற பழைய கிரேக்க இதிகாசத்தை மொழிபெயர்த்தார். 80-ஆம் வயதில் பெஞ்சமின் பிராங்க்ளின் என்ற அமெரிக்க அறிஞர் தம் 'சுயசரிதை'யை எழுதினர். வெர்தி என்ற கவி 74-ஆம் வயதில் 'ஒதெல்லோ' என்ற அற்புதக் காவியத்தையும், 80-ஆம் வயதில் 'ஃபால்ஸ்டாஃப்' என்ற கவிதையையும், 85-ஆம் வயதில் 'ஆவ் மேரியா' என்ற மற்றொரு கவிதையையும் இயற்றினர்.

ஓவியர்களிலும் இப்படியே டைடன் என்பவர் 98-ஆம் வயதில் 'லெபண்டோ போர்' என்ற பிரபல சித்திரத்தை எழுதியிருக்கிறார். இதேமாதிரி டிண்டொரெட்டோ 74-ஆம் வயதில் 'சொர்க்கம்' என்ற படத்தை 74 அடி நீளமும் 30 அடி அகலமும் உள்ள கித்தானில் எழுதினர்.

இப்படியெல்லாம் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் தம் திறமையைக் காட்டியும் இந்தக்காலத்தில் 'வாலிபர்கள்தான் உபயோகமானவர்கள்; கிழவர்கள் இருப்பதே சோற்றுக்குக் கேடு' என்று ஓர் எண்ணம் இருந்து வருகிறது. லார்டு மாக்மில்லன் என்பவர், 'ரிடயர்' ஆன அநேகம் உத்தியோகஸ்தர்கள் 70 வயதிலும் பொதுநல சம்பந்தமான ஊழியத்தில் ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைப்பதையும், அவர்கள் அறிவும் திட்பமும் கூடி வேலை செய்வதையும் நேரில் கண்டவர். "மூளைதான் முக்கியமேயொழிய வயது ஒன்றும் பிரமாதமில்லை" என்பதுதான் அவருடைய உறுதியான கருத்து.

மூழ்கினவரைக் காப்பாற்றும் முறை

★

நீந்தத் தெரிந்தவர்தான், நீரில் மூழ்கிய பிறரைக் காப்பாற்ற முடியும். ஆனால், நீந்தத் தெரிவதுமட்டும் அதற்குப் போதாது; காப்பாற்றும் முறையும் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், காப்பாற்றப் போகிறவருக்கே அபாயம் நேரக் கூடும். இங்கேஉள்ள கட்டுரை, காப்டன் ஏ. ஜே. பிஸ்கோ, எம். பி. ஈ. என்பவர் 'வேர்ல்டு டைஜெஸ்'டில் எழுதியிருப்பதன் சாரம். கட்டுரையாளர் ராயல் லைஃப் ஸேவிங் ஸோஸைட்டி காரியதரிசி.

"ஓர் ஆள் தவறித் தண்ணீரில் மூழ்கிவிட்டால் மூன்று தடவை வெளிவந்தே தீருவான்" என்று குருட்டுத்தனமாகப் பல பேர் நம்புகிறார்கள். இது நிஜமல்ல. யாராவது தண்ணீரில் மூழ்கிவிட்டால் அவரை உடனடியாகக் காப்பாற்றித் தீரவேண்டும்; நேரம் போக்கவே கூடாது.

மற்றவர்களை இப்படிக் காப்பாற்ற வேண்டுமென்றால் உங்களுக்கே ஓரளவுக்கு நன்றாக நீந்தத் தெரிந்திருக்கவேண்டும். தண்ணீரில் ஆள் திணறிக் கூவிக் கொண்டே மூழ்கின இடத்தில், காப்பாற்றப் போகிறவர் சட்டென்று குதிக்க வேண்டியது தான்.

ஆயினும் அதற்கு முன்னால் உங்கள் உடம்பில் கனமான ஆடை ஏதாவது இருந்தால் அதை எடுத்துப் போட்டுவிட வேண்டும். பூட்ஸ், கோட்டு இந்த மாதிரி எதுவும் உடம்பில் இருக்கக் கூடாது. நீந்துவதற்கு இவை தடையாக இருக்கும். கூடியவரை இவைகளையெல்லாம் விரைவில் களைந்தாக வேண்டும். ஒரு விநாடி தாமதமானால்கூட மூழ்கின ஆள் அதற்குள் இறந்து போய்விட்டாலும் போய்விடலாம்.

சிறிது நேரமே தண்ணீருக்குள் இருக்கவேண்டியிருந்தால் ஓரளவுக்கு ஆடை இருந்தாலும் பரவாயில்லை; நீரில் மூழ்கும்போது உடையில் காற்றுப் புகுந்துகொள்வதால்



விரைவில் வெளிக்கிளம்ப அதனால் சௌகரியமாகக்கூட இருக்கும்.

உயரமான இடத்திலிருந்து குதிக்கவேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். தண்ணீர் எவ்வளவு ஆழம் என்று தெரியாத பட்சத்தில் கால் முதலில் நீரில் படும்படி குதிக்கவேண்டும்.

ஒரு தரம் நன்றாக மூச்சு இழுத்துவிட்டு லேசாகத் தண்ணீரில் குதிக்கவேண்டும். இரண்டோர் அடி ஆழத்துக்கு மேல் மூழ்கக் கூடாது.

நீரில் அமிழ்ந்ததும் மூழ்கிவிட்ட ஆளை ஜாக்கிரதையாக நெருங்க வேண்டியிருக்கும். நீங்கள் எதிர்பாராதபடி எக்கச்சக்கமாக அவன் உங்களைப் பிடித்துக்கொண்டு விட்டால் உங்கள் பாடே ஆபத்தாக முடிந்துவிடும்.

ஆகவே, கூடியவரை அவனுக்கு எதிராகப் பாய்ந்து பிடிக்காதீர்கள். அது சாத்தியமில்லாவிட்டால் கீழே சொல்லுகிற முறைகளைக் கடைப்பிடித்து அவன் உங்களைக் கட்டிப் பிடிக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

முக்கால்வாசி அவன் உங்கள் தோளையும் உடம்பையும் கெட்டியாகப் பிடித்துக்கொள்வான். அப்போது உங்கள் இடது புஜத்தை அவனுடைய வலது புஜத்தின்கீழ்க் கொடுத்து அவனுடைய வலது தோளை உங்கள் இடது கையால் கொக்கி மாட்டியதுபோல் பிடியுங்கள். உங்கள் வலது உள்ளங் கையை அவனுடைய தாடைக்குக் கீழ்க் கொண்டுபோங்கள். அதே சமயம் உங்கள் வலது முழங்காலை அவன் வயிற்றில் படும்படி மேலே உயர்த்தி முட்டுங்கள்.

பிறகு உங்கள் வலது கையை முன்னுக்கும் கீழுக்குமாகப் பலமாய் நீட்டி, இடது கையால் ஆளைக் கீழுக்கு இழுங்கள். இப்படி நீங்கள் இழுக்கிற இழுப்பில் அவன் உங்களுக்குக் கீழே போய்விட வேண்டும்; உங்கள் முழங்காலும் வலது கையும் கீழ்ப் பக்கமாக அவனைத் தள்ளவேண்டியிருக்கும். இந்த மாதிரி திடீரென்று செய்வதால் அவன் தன் பிடியை விட்டுவிடுவான்; இனி உங்கள் சௌகரியம்போல் அவனை மீட்கும் வேலையில் ஈடுபடலாம் (படம் 1).

மூழ்கும் ஆள் கை கால்களை அடித்துக்கொள்ளாத பட்சத்தில் அவனை நிமிர்த்தி உங்கள் உள்ளங்கை இரண்டாலும் அவன் காது இரண்டையும் பொத்தியபடி பக்கவாட்டில் பிடித்து மேலே தூக்கவேண்டும்.

உங்கள் புஜம் இரண்டும் 2-ஆம் படத்திலுள்ளபடி உங்கள் விலாப் புறத்தில் இணைந்திருக்கவேண்டும். கை விரல் முன் கைக்கு நேராக இருக்கவேண்டும். மூழ்கின ஆளின்



தலை உங்கள் மார்புக்கு மேல் இருக்கவேண்டும்; அவன் தலை உச்சி உங்கள் மோவாய் நுனியைத் தொடும்படி அமைந்திருக்க வேண்டும். இதே ரீதியில் பின் பக்கமாக நீந்திச் செல்ல வேண்டும்.

அந்த ஆள் விலுவிலு என்று உதைத்துத் திமிரப் பார்த்தால் அவன் அக்குளில் உங்கள் கையை விட்டு அவனுடைய மார்பைப் பிடித்துக்கொள்ளுங்கள். உங்கள் விரல்கள் ஒன்றோடொன்று சேர்ந்திராதபடி பிரிந்திருக்கவேண்டும். கைக் கட்டைவிரல் அவன் கழுத் தெலும்பு (காலர் போன்) மேல் பொருந்தியிருக்க வேண்டும். பிறகு உங்கள் கை இரண்டையும் பக்கவாட்டில் தூக்க வேண்டும்; அப்படிச் செய்யும் போது மூழ்கின ஆளின் புஜம் மட்டுமாவது அவன் உடம்புக்கு நேர்க்கோணத்தில் தொங்க வேண்டும்.

பிறகு பின் புறமாக நீந்திக் கொண்டே போகவேண்டும். அதே சமயம் மூழ்கின ஆள் உங்கள் மோவாய்க்கும் கீழ் மட்டத்தில் போய்விடாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும் (படம் 3).

மூழ்கின ஆளின் கால் கை ஓய்ந்து போயிருந்தால் வேறு விதமான முறைகளைக் கையாள வேண்டும்.

அவனை உங்களுக்கு நேரே இருக்கும்படி சொல்லி அவன் கையை உங்கள் தோளில் கழுத்தருகில் பதியும்படி வைத்துக் கொள்ளுங்கள். அவன் கையை அப்படியே நீட்டிக்கொண் டிருக்க வேண்டும்; கீழ்ப்பக்கம் காலையோ கையையோ ஆட்டாமல் அவன் மல்லாந்த நிலையிலேயே கிடக்க வேண்டும்.





அவன் கால்கள் சேர்ந்தோ தனித்தோ, உங்களுக்குக் கீழாகவோ உங்கள் விலாப்புறம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாகப் பிரிந்தோ இருக்கலாம். எப்படியிருந்தாலும் நீங்கள் மேல் பக்கமாக இருக்கவேண்டும். மார்பை அசைத்து உங்கள் கை கால்கள் கட்டுப்பாடு இல்லாமல் நீந்த வசதியாக இருக்க வேண்டும்.

மூழ்கின ஆள் அடங்கி ஒடுங்கி நடப்பவனாக இருந்தால் நீண்ட தூரங்கூடச் சௌக்கியமாக அவனை வைத்துக்கொண்டு நீந்தலாம் (படம் 4).

இன்னொரு யோசனை: இப்படி மூழ்கிய ஆள் பிரக்ஞையற்று இருந்து அருகில் ஏதாவது சிறு படகில் அவனை ஏற்றிவிடுவதாக இருந்தால், படகின் பின்புறந்தான் ஏற்றவேண்டும். இல்லாவிட்டால் படகு கவிழ்ந்துவிடும். கடலில் இப்படி மூழ்கியவர்களைக் கரையேற்றி விட்டாலும் அதோடு உங்கள் வேலை தீர்ந்தது என்று எண்ணிக் கொள்ளக் கூடாது. சமயத்தில் சரியான முதல் உதவி அல்லது

சிகிச்சை இராததால் அவர்கள் இறக்க நேரலாம்.

கரையில் கொண்டு வந்ததுமே இந்தமாதிரி ஆளைச் சமதரையில் கவிழ்த்துப் போட்டு அவன் கழுத்தைச் சுற்றி இருக்கும் உடைகளையெல்லாம் களைந்துவிடவேண்டும். அவன் கை இரண்டையும் ஒன்றன்மேல் ஒன்று பதியும்படி நெற்றிக்குக் கீழ் வைத்து, மணலில் மூக்கும் வாயும் படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். எதற்கும் ஒரு கைக் குட்டையை அவன் முகத்துக்குக் கீழ்ப் போட்டுவைப்பது நல்லது. தரை கெட்டியாக இருக்கவேண்டியது அவசியம்.

பிறகு ஒரு காலை, மூழ்கின ஆளின் தலைக்குச் சற்றுத் தொலைவில் ஒரு பக்கம் மண்டியிட்டு மற்றக் காலை அவன் தோள்வளைவுக்கு அருகில் இன்னொரு பக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

உங்கள் உடம்பு அந்த ஆளின் தலைக்கு நேராக இருக்க வேண்டும். பிறகு கவிழ்ந்திருக்கும் அந்த ஆளின் முதுகுப் புறம் தோள் பட்டையண்டை (5-ஆம் படத்திலுள்ளது போல்) கையை வைத்துக்கொள்ள வேண்டும். உங்கள் கை மணிக்கட்டு, அவன் தோள் பட்டையருகிலுள்ள முதுகெலும்பில் பதிந்திருக்க வேண்டும்.

இப்படிச் சரியான முறையில் அமர்ந்து அவன் தோள்பட்டைக்கு நடுவில் உங்கள் கையை விரித்துச் சில தடவை ஓங்கித் தட்ட வேண்டும். இப்படிச் செய்ததும் அவன் நாக்கு வெளியில் வரும்; உடனே அவன் விழுங்கிய தண்ணீரும் வெளியில் கொட்டும். சுவாசப் பையிலுள்ள காற்று, சுவாசக் குழாய் வழியாகவும் வாய் வழியாகவும் உள்ளே இருக்கும் தண்ணீரை வெளியே கக்கும்படி செய்வது தான், எப்போதுமே முதல் முதலாகச் செய்ய வேண்டிய அப்பியாசம். இதற்கு அவன் உடலின் மேல் கையை வைத்து நிதானமாக நாம் அசைந்தாடவேண்டும். இப்படிச் செய்யும்போது நம் கை குத்திட்டாற்போல் நிற்கும் அளவுக்கு வரவேண்டும். அதிகமாக நம் கனத்தை அந்த ஆளின் மேல் போடக் கூடாது; சுமார் முப்பது பவுண்டு கனத்துக்கு அவன் தோள் மேல் பதியும்படி இருந்தால் போதும் (படம் 5).

பிறகு அவன் மூச்சை உள்ளே இழுக்கும்படி செய்யும் அப்பியாசத்தைப் புரிய வேண்டும். இதற்கு அவன் தோள் இரண்டையும் பிடித்து, தோளின் மேல் பாகம் தசைநார் விரியும்படி தூக்கவேண்டும். அதிகமாகப் பலத்தைச் செலுத்திக் கையைப் பிடித்து இழுக்கக் கூடாது; அதனால் உடம்பு சப்பையாகத் தரையில் படிந்தாலும் மார்பு விரியாது. (படம் 6).

இந்த மாதிரி முதல் சிகிச்சைக்கு ஹோல்கர் நீல்ஸன் முறை என்று பெயர். உயிர் போய்விட்டதுபோல் மூர்ச்சையுற்றிருக்கும் நிலையில் கூட இந்த முறை பயன்படும். இதில் இன்னொரு சௌகரியம்: வெகு நேரம் நமக்கும் சோர்வு தட்டாது.

பழைய கார் ஓட வழி

உங்கள் பழைய காரை ஓடச் செய்வதற்குச் சிறந்த வழி ஒன்று உண்டு. '53 மாடலின் விலையை அறிந்துகொள்வது தான் அது.

—'யுனைடெட் மைன் வொர்க்கர்ஸ் ஜர்னல்'

லேபாட்சிச் சித்திரங்கள்



இந்தியாவில் பழமையான கலைச் செல்வங்கள் எத்தனையோ உண்டு. அவற்றில் மிகப் பழமையானவை சில. சற்றே பழமையானவை வேறு சில. ஆனால், அவை எல்லாம் ஒரே ஐதிகத்தைப் பின்பற்றியவையே. சிறிதே பழமையான சித்திரச் செல்வங்களுள் ஒன்று ஆந்திரத்தில் உள்ள லேபாட்சி.

அனந்தப்பூர் ஜில்லாவில் ஹிந்துப்பூர் என்ற ஊருக்கு 9 மைல் தொலைவில் லேபாட்சி என்ற கிராமத்தில் வீரபத்திர ஸ்வாமி கோயில் ஒன்று உண்டு. இது விஜயநகரக் கட்டிடக் கலை ரீதியில் அமைந்திருக்கிறது. வெளி மதிளில் உள்ள கல்வெட்டிலிருந்து இந்தக் கோயிலைக் கி. பி. சுமார் 1538-ஆம் ஆண்டில் விருபண்ணா என்பவர் கட்டியதாகத் தெரிகிறது. இவர் விஜயநகர மன்னனான கிருஷ்ண தேவராயனின் பொக்கிஷதாரராக இருந்தவர். கஜானாவிலிருந்து தன் உத்தரவின்றி ராஜாங்கப் பணத்தைக் கோயில் பணிக்காகச் செலவழித்ததால் மன்னனுக்கு இவரிடம் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. கோயில் முழுதும் கட்டி முடிப்பதற்குள் ராஜ தண்டனைக்குள்ளானார் விருபண்ணா.

இப்படி அரை குறையாகவுள்ள 'கல்யாண மண்டப'த்தின் தூண்களில் அற்புதமான சிற்ப வேலைப்பாட்டைக் காணலாம். இதற்கு அருகிலேயே 'நாட்டிய மண்டபம்' அமைந்திருக்கிறது. கோயிலில் இதுதான் மிகவும் அருமையான பாகம். விஜயநகர சாம்ராஜ்ய காலத்து அற்புதச் சிற்ப வேலைப்பாட்டை இதிலுள்ள 61 தூண்களிலும் காணலாம். நடுவில் உள்ள தூண்களில் யட்ச கின்னர கந்தர்வர்கள் பாடுவது போலவும் ஆடுவது போலவும் குடைந்திருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

கோயிலுக்குக் கிழக்கே 200 கஜ தூரத்தில் ஒரே கல்லில் செதுக்கிய ஒரு நந்தி இருக்கிறது. இதன் உயரம் 15 அடி; நீளம் 27 அடி; இதிலும் அபாரமான சிற்பத் திறமையைக் காணலாம்.

நாட்டிய மண்டபத்தின் கூரையில் மகாபாரதம், ராமாயணம், புராணங்கள் இவற்றிலிருந்து பல காட்சிகளை அற்புத ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்கள்.

சிவன் ஒரு வேடனாக வந்து அர்ஜுனனுடன் ஒரு காட்டுப் பன்றிக்காகச் சண்டை போடும் காட்சி, ராம பட்டாபிஷேகம், ஆலிலையில் படுத்த கண்ணன் ஆகியவை சுவர்ச் சித்திரங்களில் சிறந்தவை. அர்ஜுனன் பல சந்தர்ப்பங்களில் தவம் புரிந்த காட்சிகளும், விஷ்ணு, வாயு, அக்கினி முதலிய தேவர்கள் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் நடக்கும் திருமணத்துக்கு வந்திருக்கும் காட்சியும் முக்கியமானவை. சிவன் பார்வதியின் செருக்கை அடக்கும் 'மானபங்க'க் காட்சி மிகவும் அருமையானது.

பெண்கள் ஸ்வாமி சந்நிதிக்குச் செல்வதுபோல் அமைந்த சில சித்திரங்களில் அவர்கள் உடுத்திருக்கும் அழகிய சேலையிலுள்ள வேலைப்பாடு பிரமாதமாக இருக்கிறது.

விஜயநகர சாம்ராஜ்ய காலத்தில் வாழ்ந்த ஓவியர்கள், உருவங்களையும் கோடுகளையும் எவ்வளவு நுண்ணறிவுடன் தீட்டினார்கள் என்பதற்கு இந்தச் சித்திரங்கள் சான்றாகும்.

மண்டபக் கூரையில் வெடிப்பு ஏற்பட்டுப் பல இடங்களில் ஊறியதாலும், கண்டவர்களும் பாழ்படுத்தி வந்ததாலும் பல சித்திரங்கள் மங்கி உதிர்ந்து வந்தன. 1950-இல் சென்னைச் சர்க்கார் பிரபல ஓவியர்கள் சிலரைக் கொண்டு லேபாட்சிச் சித்திரங்களில் முக்கியமானவற்றை வரையும்படி ஏற்பாடு செய்தார்கள்.

இப்போது இந்திய சர்க்காரின் பழம் பொருள் இலாகா, மேலும் பழுது ஏற்படாதபடி அக்கறையோடு இவற்றைக் கவனித்து வருகிறது.

மூலம்: தி மெயில் (ஆங்கிலம்: 1-10-'53), சென்னை.

சித்திரங்கள்

...லங்கள் எத்தனையோ உண்டு. அவற்றில்
...மையானவை வேறு சில. ஆனால், அவை
...ற்றியவையே. சிறிதே பழமையான
ஆந்திரத்தில் உள்ள லேபாட்சி.



காட்சிகளை அற்புத ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்கள்.

சிவன் ஒரு வேடனாக வந்து அர்ஜுனனுடன் ஒரு காட்டுப் பன்றிக்காகச் சண்டை போடும் காட்சி, ராம பட்டாபிஷேகம், ஆலிலையில் படுத்த கண்ணன் ஆகியவை சுவர்ச் சித்திரங்களில் சிறந்தவை. அர்ஜுனன் பல சந்தர்ப்பங்களில் தவம் புரிந்த காட்சிகளும், விஷ்ணு, வாயு, அக்கினி முதலிய தேவர்கள் சிவ பெருமானுக்கும் பார்வதிக்கும் நடக்கும் திருமணத்துக்கு வந்திருக்கும் காட்சியும் முக்கியமானவை. சிவன் பார்வதியின் செருக்கை அடக்கும் 'மானபங்க'க் காட்சி மிகவும் அருமையானது.

பெண்கள் ஸ்வாமி சந்நிதிக்குச் செல்வதுபோல் அமைந்த சில சித்திரங்களில் அவர்கள் உடுத்திருக்கும் அழகிய சேலையிலுள்ள வேலைப்பாடு பிரமாதமாக இருக்கிறது. விஜயநகர சாம்ராஜ்ய காலத்தில் வாழ்ந்த ஓவியர்கள், உருவங்களையும் கோடுகளையும் எவ்வளவு நுண்ணறிவுடன் தீட்டினார்கள் என்பதற்கு இந்தச் சித்திரங்கள் சான்றாகும்.

மண்டபக் கூரையில் வெடிப்பு ஏற்பட்டுப் பல இடங்களில் ஊறியதாலும், கண்டவர்களும் பாழ்படுத்தி வந்ததாலும் பல சித்திரங்கள் மங்கி உதிர்ந்து வந்தன. 1950-இல் சென்னைச் சர்க்கார் பிரபல ஓவியர்கள் சிலரைக் கொண்டு லேபாட்சிச் சித்திரங்களில் முக்கியமானவற்றை வரையும்படி ஏற்பாடு செய்தார்கள்.

இப்போது இந்திய சர்க்காரின் பழம் பொருள் இலாகா, மேலும் பழுது ஏற்படாதபடி அக்கறையோடு இவற்றைக் கவனித்து வருகிறது.

(ஆங்கிலம்: 1-10-'53), சென்னை.

விறகில்லாத அடுப்பு

★

வெயிலையே சக்தியாகப் பயன்படுத்தும் முயற்சி இந்தியாவில் மட்டும் அல்ல; உலகெங்குமே நடக்கிறது. உலகிலேயே பெரிய சூரிய அடுப்பு, பிரான்ஸில் இப்போது அமைந்திருக்கிறது. 'இல்லஸ்டிரேடட்' என்ற லண்டன் பத்திரிகையில் மாரிஸ் கோல்ட்ஸ்மித் என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சாரம் இது.



மாண்ட்லூயிஸ் சூரிய அடுப்பு

உலகத்தில் மொத்தம் கிடைக்கக்கூடிய நிலக்கரி, மண்ணெண்ணெய், 'காஸ்' இவையெல்லாம் செலவழிந்துகொண்டே வருகின்றன. கடைசியில் ஒரு நாள் இவை அடியோடு தீர்ந்துவிடும். பிறகு இவை கிடைக்க மாட்டா. அப்புறம் யந்திரம் முதலியவைகளை ஓட்டவும் பிற காரியங்களுக்கும் சக்தி வேண்டுமே; அதை மனிதன் எங்கே பெறுவான்? இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதில் தான் உண்டு. அதாவது சூரிய சக்தியையே மனிதன் பயன்படுத்த வேண்டும்.

இது ஏதோ விஞ்ஞானியின் பகற்கனவு அல்ல. இன்னும் ஐம்பதே வருஷங்களுக்குள், யந்திர ஆலைகளில் சூரிய சக்தியே பெரிதும் பயன்படப் போகிறது. சூரிய சக்தி

வற்றாத பொக்கிஷமாகும். அது ஒரு நாளும் செலவழிந்து தீர்ந்து போகாது. சூரிய சக்தியை மட்டும் திறமையாக யந்திரங்களில் பயன் படுத்தும்போது, பல தேச அரசியல் உறவுகளிலும் பொருளாதார உறவு களிலும் பெருத்த மாறுதல் ஏற்படு வது நிச்சயம்.

சூரிய சக்தியை எப்படிப் பயன் படுத்துவது என்பது குறித்து இப் போதே அநுபவ சாத்தியமான ஆராய்ச்சிகள் பல நாடுகளில் நடந்து பூர்த்தியாகியிருக்கின்றன.

இந்த ஆராய்ச்சிகளுக்குள்ளே மிகப்பெரிய ஒன்று பிரான்ஸ் நாட் டில் நடந்து வருவதுதான். பாரிஸ் நகருக்கு 600 மைல் தூரத்தில் தெற்குப் பிரான்ஸில் கிழக்குப் பைரெனீஸ் மலைத்தொடரின் அடி வாரத்தில் பெர்ப்பிக்னன் என்று ஓர் இடம் இருக்கிறது. அதிலிருந்து மலைகளுக்கிடையில் குறுகலான ஒரு ரெயில் பாதை சுமார் 5,000 அடி தூரம் செல்கிறது. அங் கிருந்து 50 மைல் தூரத்தில் பைன் மரங்கள் சூழ்ந்த மாண்ட் லூயிஸ் என்ற கோட்டைக்கு அந்தப் பாதை போய்ச் சேர்கிறது. இந்தக் கோட்டை ஒரு சிறிய நகரம். இங்கே 300 பேர்தான் வசிக்கிறார்கள். இதை 300 வரு ஷங்களுக்கு முன் வாபான் என்ற பிரபல பிரெஞ்சு ராணுவ எஞ் சினீர் கட்டினார்.

ஸ்பெயின் நாட்டினரின் படை யெடுப்பைத் தடுப்பதே இதன் நோக்கம். இந்தக் கோட்டையில் ஒரு பெரிய கோபுரம் (கதீட்ரல்) இருக்கிறது. இங்கே பிரகாசமாய் வெயில் காய்கிறது. இந்த இடத் தில் இப்போது சூரியசக்தி நிலையம் (ஸோலார் பவர் ஸ்டேஷன்) ஒன்று அமைத்திருக்கிறார்கள்.



மாண்ட்லூயிஸ் கோட்டையின் சூரிய அடுப்பில் உள்ள 516 நிலைக் கண்ணாடிகளின் மூலம் ஒருங்கு குவிந்த சூரிய உஷ்ணம், செங்கற்களை இப்படி எரித்துத் துளைத்துவிட்டது.

1949-ஆம் வருஷத்தில் பிரெஞ்சு சர்க்கார் இங்குள்ள கோபுரத்தில் மூன்றில் ஒரு பகுதியை, ஃபெலிக்ஸ் ட்ராம்ப் என்ற ஸயின்ஸ் ப்ரொஃபஸரிடம் ஒப்படைத்தார்கள். அதில் அவ ருடைய மேற்பார்வையின் கீழ் உலகிலேயே மிகப் பெரிய சூரிய சக்திக் கருவியை 1951-52-இல் நிறுவினார்கள்.

புராதன காலத்திலே கார்த் தேஜ் என்ற கிரேக்க நகரத்தை ரோம் நாட்டு யுத்தக் கப்பல்கள் வந்து முற்றுகையிட்டன. அப் போது ஆர்க்கிமிடீஸ் என்ற கிரேக்க விஞ்ஞானி சில நிலைக்கண்ணாடி களை வைத்துக்கொண்டார். அவற் றின் உதவியினால் சூரிய ஒளிக் கிரணங்களை ஒருங்கு குவியச் செய்து அந்தக் கப்பல்கள்மீது

திருப்பி அவைகளை எரித்துவிட்டார். பிற்காலத்தில் 1772-இல் லவாய்ஸீர் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி, பூதக்கண்ணாடி (பர்னிங்-க்ளாஸ்) ஒன்றின் உதவியால் ஒரு வைரக்கல்லை எரித்தார். வைரம் (டைமண்ட்), கரி (கார்பன்) இரண்டும் ரஸாயன ரீதியில் ஒன்றுதான் என்பதை இதன் மூலம் அவர் நிரூபித்தார். இந்த மாதிரி பழைய விஞ்ஞானிகளைப் பின்பற்றியே, ப்ரொஃபஸர் ட்ராம்ப் தம் ஆராய்ச்சியைப் புரிந்து வருகிறார்.

சூரியனின் மேல்புறத்தில் சுமார் 6,000 டிகிரி ஸெண்டிகிரேட் உஷ்ணம் இருக்கிறது. மாண்ட்லூயிஸ் கோட்டையில் இப்போது அமைத்திருக்கும் கருவி இந்த 6,000 டிகிரி ஸெண்டிகிரேடில் பாதி உஷ்ணத்தைக் கிரகித்துத் தருகிறது. 4,000 டிகிரி ஸெண்டிகிரேடுக்குமேல் உஷ்ணத்தைக் கிரகிப்பது சாத்தியமில்லை. ஏனென்றால், இதுவரையில் நமக்குத் தெரிந்த எந்தப் பொருளும் அவ்வளவு உஷ்ணத்தைத் தாங்காது.

சூரிய உஷ்ணத்தைக் கிரகிப்பதில் இரண்டு முக்கியமான முறைகள் இருக்கின்றன: ஒன்று, அது எப்படி விழுகிறதோ அப்படியே நேரே கிரகிப்பது; மற்றது, பூதக் கண்ணாடிகளையும் நிலைக்கண்ணாடிகளையும் உபயோகித்து அதைக் கிரகிப்பது. இரண்டாவது முறையைத்தான் ப்ரொஃபஸர் ட்ராம்ப் கைக்கொள்கிறார். குழிந்த நிலைக் கண்ணாடிகள் (பாரபோலிக் மிரர்ஸ்) சிலவற்றை வைத்துக் கொண்டு சூரிய கிரணங்களை 50,000 மடங்கு உஷ்ணமாகும் வரை ஒருங்கு கூடுமாறு (கான்ஸெண்ட்ரேட் ஆகுமாறு) செய்கிறார். இது ஒரு சதுர ஸெண்டிமீட்டர் இடத்தில் 4,000 வாட்-பவர் கொடுக்கிறது. நவீன ஆலைத் தொழிற்சாலைகளில் உள்ள மின்சார அடுப்புகளில் எவ்வளவு உஷ்ணம் உண்டாகிறதோ அவ்வளவு உஷ்ணத்தைத் தம்முடைய சூரிய அடுப்புகளின் மூலம் ப்ரொஃபஸர் ட்ராம்ப் உற்பத்தி செய்து விடுகிறார். நூறு பவுண்டு இரும்புக் கட்டியை ஒரே மணி நேரத்தில் அவருடைய அடுப்பு உருக்கிவிடும்.

சூரிய உஷ்ணத்தை இப்படிப் பயன்படுத்துவதில் பலவித லாபங்கள் இருக்கின்றன: எரிபொருள் (ஃப்யூயல்) எதுவும் இல்லாமல் மிக அதிகமான உஷ்ணம் உண்டாகிறது; அந்த உஷ்ணம் தூய்மை, கதிர் வீச்சு (ரேடியேஷன்) இரண்டும் உடையதாக இருக்கிறது. நிலக்கரி, எண்ணெய், மின்சாரம் இவைகளை உபயோகிக்கும் அடுப்புகளில் உண்டாகும் உஷ்ணத்தைக் கொண்டு உருவாக்கும் பண்டங்களில் அசுத்தம் சேர இடம் உண்டு. சூரிய உஷ்ணத்தை உபயோகிப்பதில் இப்படி எவ்வித அசுத்தமும் சேருவதில்லை. எந்தக் காலத்திலும் தொடர்ந்து வெயில் எரித்துக்கொண்டிருக்கும் வறண்ட பாலைவனப் பிரதேசங்களில் தம்முடைய முறையால் பெரிய பெரிய ஆலைத் தொழிற்சாலைகள் இனி ஏற்பட்டுவிடப்போகின்றன என்று ப்ரொஃபஸர் ட்ராம்ப் நம்புகிறார்.

ஆனால், இந்தமாதிரி சூரிய உஷ்ணத்தைப் பயன்படுத்தும் முயற்சி பிரான்ஸில் மட்டும் நடக்கவில்லை. இந்தியாவில் இப்போது ஒரு சூரிய அடுப்பு (ஸோலார் குக்கர்) விற்பனைக்கு வந்துள்ளது. டில்லியிலுள்ள நேஷனல் ஃபிஸிக்கல் லேபரட்டரியில்

இதைத் தயாரித்திருக்கிறார்கள். எளிய முறையில் அமைந்திருக்கும் இந்த அடுப்பினால் கிடைக்கும் உஷ்ணம், 450 வாட் மின்சார அடுப்பின் உஷ்ணத்துக்குச் சமமாயிருக்கிறதாம். நான்கு பேர் அடங்கிய ஒரு குடும்பத்தின் சமையல் முதலிய தேவைகளுக்கு இது போதுமாம்.

பம்புகளையும் சிறிய தறிகளையும் இயக்கும் குறைந்த குதிரைச் சக்தி உள்ள நீராவி எஞ்சின்களை ஓட்டக் கூடிய சூரிய அடுப்புகள்பற்றியும் இப்போது இந்தியாவில் ஆராய்ச்சி நடந்து வருகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் கணப்புகளுக்குப் பதிலாக வீடுகளுக்கு வெப்பமூட்டவும் சூரிய உஷ்ணத்தைப் பயன்படுத்தச் சில வருஷங்களாகவே ஆராய்ச்சி நடந்து வருகிறது. மஸாச்சுஸட்ஸ் ராஜ்யத்தில் டோவர் என்ற இடத்தில் நான்கு அறைகள் உள்ள ஒரு வீட்டை 1948-இல் கட்டினார்கள். அந்த வீட்டுக்கு முற்றும் சூரிய உஷ்ணத்தைக் கொண்டே வெப்பமூட்டுகிறார்கள். மூடிய டப்பிகளில் க்ளாபெர்ஸ் ஸால்ட் என்ற உப்பை நிறைத்து, அவைகளில் சூரிய உஷ்ணத்தைக் கிரகித்து வைக்கிறார்கள். வருஷம் முழுவதும் வெயில் எரித்துக்கொண்டிருக்கும் சில பிரதேசங்களில் சூரிய உஷ்ணத்தைக் கொண்டே வீட்டுக்கு வெந்நீர் தயாரித்துக் கொள்கிறார்கள்.



இந்தியாவில் தயாராகியிருக்கும் மலிவான சூரிய அடுப்பு. ஒளியைப் பிரதிபலிக்கும் கிண்ணம் (ரிஃப்ளெக்டர்) ஒன்று அதில் இருக்கிறது. அந்தக் கிண்ணத்தை எந்தக் கோணத்தில் வேண்டுமானாலும் திருப்பலாம். அதிலிருந்து மேலே நீண்டிருக்கும் குத்துக்கால் மீதுள்ள வளையத்தின் மீது பாத்திரங்களை வைக்கலாம்.

சூரிய உஷ்ணத்தைக் கிடைக்கிறபோது கிரகித்துச் சேகரித்து வைத்துக்கொண்டு, பின்னால் தேவையானபோது உபயோகித்துக் கொள்ளக்கூடிய வழிகளைப் பற்றி விசேஷமான ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன.

ஸோவியத் யூனியனில் மத்திய ஆசியாவில் சில அடிப்படையான ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சூரிய உஷ்ணத்தைக் கொண்டு தண்ணீரைச் சூடாக்கும் கருவிகள் (ஸோலார் வாட்டர் ஹீட்டர்ஸ்), அங்கே தினசரி உபயோகத்தில் இருக்கின்றன.

சூரிய உஷ்ணத்தைக் கிரகித்து இன்னொரு மகத்தான காரியத்துக்குப் பயன்படுத்துவதும் ஒரு காலத்தில் சாத்தியமாகலாம். 'க்ளோரஃபில்' என்ற பச்சை நிறச் சத்தைக் கொண்டு பசுஞ்செடிகள் சூரிய உஷ்ணத்தைக் கிரகித்து நமக்கு உணவாக மாற்றித் தருகின்றன. செடிகளின் இந்தக் காரியத்தை 'ஃபோட்டோ - ஸிந்தெஸிஸ்' என்று சொல்லுகிறார்கள். செயற்கை முறையில் பசுஞ் செடிகளை உண்டாக்கி அவைகளின் மூலம் சூரிய உஷ்ணத்தை உணவாக மாற்றக்கூடிய காலம் வரலாம். அப்போது உலகத்தில் உணவுப் பஞ்சமே இல்லாமல் போகும்.

நம்முடைய பூமிக்கு 9 கோடியே 30 லட்சம் மைல்களுக்கு அப்பால் சூரியன் இருக்கிறது. அதன் உட்புறத்தில் அணு வெடிப்பது (ந்யூக்ளியர் ரியாக்ஷன்) மூலம் 40 லட்சம் டன் சடப் பொருள் ஒவ்வொரு விநாடியிலும் உஷ்ண சக்தியாக மாறுவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

யாரும் தோண்டி எடுப்பதற்கு முன் பூமிக்குள் ஒரு காலத்தில் புதைந்திருந்த அசல் நிலக்கரி, எண்ணெய், 'காஸ்' இவற்றைப் போல் பத்து லட்சம் மடங்காம் சூரியனிலிருந்து வரும் இந்த ஒரு விநாடி உஷ்ண சக்தி. இதிலுங் கூட மிகச் சிறு பகுதிதான் நம் பூமிக்கு வந்து சேர்கிறது. ஆனால், அதுவே நாம் வருஷந்தோறும் பூமியிலிருந்து வெட்டியெடுக்கும் நிலக்கரியைப் போல் 50,000 மடங்கு இருக்கிறதாம். அந்தச் சக்தியைப் பயன்படுத்தத்தான் விஞ்ஞானிகள் இன்று முயன்று வருகிறார்கள்.

விமர்சகருக்குப் பயமா?

குறை கூறும் விமர்சகருக்குப் பயப்படுகிறவர் இந்த அராபியப் பழமொழியை மனத்தில் பதிப்பது நலம்: "குரைக்கிற நாய்க்கெல்லாம் வண்டியை நிறுத்தினால், உங்கள் ரஸ்தாவுக்கு முடிவே இல்லாமல் போய்விடும்."

குழந்தை எங்கே?

"என்டா பயலே, குப்பைத் தொட்டியை உருட்டிக் கொண்டிருக்கிறாய்?"

"குழந்தைக்கு வேடிக்கை காட்ட."

"குழந்தை எங்கே, காணோமே?"

"இதோ குப்பைத் தொட்டிக்குள்ளே இருக்கிறது."

—ஹோர்ட்ஸ் 'டெய்ரிமான்'.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபிலிமிண்டியா' செப்டம்பர் '53 இதழில் வந்தவை.

கேள்வி: இந்திய ராஜாக்கள் இப்போதெல்லாம் படத் தொழிலில் சிரத்தை கொண்டிருக்கிறார்களே; ஏன்?

பதில்: அவர்கள் கொள்ளையடித்த பணத்துக்கு ஏதாவது செய்ய வேண்டாமா?

* * *

கே: நேர்மைக்கு ஏன் பலன் கிடைப்பதில்லை?

ப: கிடைக்கும்; ஆனால் நெடு நாள் காத்திருக்க வேண்டும்.

* * *

கே: சினிமா நட்சத்திரங்கள் தங்கள் சுகத்தைக் காப்பாற்ற என்ன தேகப்பயிற்சி செய்கிறார்கள்?

ப: அவர்கள் காசு வைத்துச் சீட்டாடுகிறார்கள். அதில் ஏற்படும் நஷ்டம் அவர்களைச் சிரமப்பட்டு உழைக்கச் செய்கிறது.

* * *

கே: மூன்று பரிமாணப் படங்கள் இந்தியாவில் எப்படிச் செலாவணியாகும்?

ப: ஹாலிவுட் பட முதலாளிகள் நம்முடைய வாழ்க்கையையே கெடுத்துவிட்டார்கள்; இப்போது நம்மைக் குருடாக்க எண்ணுகிறார்கள். மூன்று பரிமாணப் படங்கள் கண்ணுக்கு அதிகமான கெடுதலைச் செய்கின்றன.

* * *

கே: ஐ. நா. சபைக்கு வேண்டியது என்ன?

ப: ஒரு போலீஸ் படையும், டாக்டர் ரீ, டாக்டர் மலான், டாக்டர் மொஸ்ஸாடெக், ஷேக் அப்துல்லா ஆகியவர்களுக்கு ஓர் ஆரோக்கிய விடுதியும் வேண்டும்.

* * *

கே: ருஷியாவில் எத்தனை அரசியல் கட்சிகள் இருக்கின்றன?

ப: இரண்டு: ஒன்று அதிகாரத்தில் இருப்பது; மற்றொன்று அதிகாரத்தில் இல்லாதது.

* * *

கே: இந்தியாவில் கம்யூனிஸத்துக்கு என்ன குறைவு?

ப: ஜனங்கள் வணங்கும்படியான வீரர்கள் யாரும் அதில் இல்லை.

* * *

கே: ஓநாய்கள் எல்லாம் செத்துப் போனால்?

ப: உலகத்தில் ஆட்டுமந்தைகள் அதிகமாகிவிடும். வாழ்வு சுவாரசியமாக இருக்கவேண்டுமானால் நமக்கு ஓநாய்களும் வேண்டும்.

* * *

கே: ஸ்வாமி விவேகானந்தருடைய எழுத்துக்கும் டாக்டர் ராதாகிருஷ்ணனுடைய எழுத்துக்கும் என்ன வேறுபாடு தெரிகிறது?

ப: ஒருவர் சிந்திக்கிறார்; மற்றொருவர் வியாக்கியானம் செய்கிறார். சிந்தனைக்கும் வியாக்கியானத்துக்கும் இடையே கடலனைய வேறுபாடு உண்டே.

கே: பாம்பை உங்களுக்கு முன்னே வீசினல்?

ப: சீனுக்காரர்களை விருந்துக்கு அழைப்பேன்.

* * *

கே: நம்முடைய தேசத் தலைவர்களுக்குக் கடவுளிடம் நம்பிக்கை உண்டா?

ப: முழு நம்பிக்கை உண்டு. ஜனங்களைப் பட்டினி போடச் செய்யும் தங்கள் திட்டத்தில் அவர் தலையிட மாட்டார் என்று அவர்களுக்குத் தெரியும்.

* * *

கே: மிகவும் நாகரிகமான யாசகம் எது?

ப: செத்துப்போன காங்கிரஸ்காரருக்காக நிதி திரட்டுவது.

* * *

கே: யாராவது பிறந்தால் மகிழ்கிறோம்; இறந்தால் அழுகிறோமே! ஏன்?

ப: பிறந்தால் அது லாபம்; செத்தால் நஷ்டம். லாப நஷ்டக் கணக்குப் பார்க்கிற வியாபார உலகமல்லவா இது?

* * *

கே: காமன்வெல்த்! - நமக்கு அதில் உள்ள பங்கு என்ன?

ப: நாம் மணப் பெண்ணுக்குப் பழைய உறவு—வேண்டா விருந்தாளிகள்.

* * *

கே: அன்புச் செயலுக்கு எப்படி நன்றி காட்டுவது?

ப: வார்த்தையில் கூடாது; செய்தவரை அது தர்ம சங்கடத்தில் ஆழ்த்தும். ஒரு பார்வை போதும். ஆனால், அவர் குருடாக இருந்தால், "நன்றி" என்ற ஒரே ஒரு வார்த்தை சொல்வது போதும்.

அவன் செய்த யுக்தி

கொரியாவில் ராணுவ அதிகாரி ஒருவர், தம் படை வீரர்களைப் பார்த்து, "அதோ இரண்டொரு மைல் தொலைவில் தெரிகிறதே, அந்த ரெயில்வே ஸ்டேஷனை உருப்படாதபடி செய்துவிட வேண்டும்; ஆபத்தான காரியந்தான். யார் போகத் தயார்?" என்றார்.

துணிச்சலான ஓர் ஆசாமி தான் அதைச் செய்வதாக முன் வந்தான். ராணுவ அதிகாரி அவனைப் பாராட்டி, வேலையை முடித்து வந்ததும் அவனுக்குத் தக்க சம்மானம் அளிப்பதாக உறுதி கூறி அனுப்பினர்.

ஒரு மணி நேரத்தில் அவன் முகமலர்ச்சியோடு திரும்பி வந்து, "முடித்துவிட்டேன், ஸார்! இனிமேல் அந்த ஸ்டேஷன் எதற்கும் லாயக்கில்லை!" என்றான். ராணுவ அதிகாரி தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் ஸ்டேஷன் பக்கம் கவனித்தார்; அது முன்போலவேதான் இருந்தது; "நிச்சயந்தானா?" என்றார் அவனைப் பார்த்து.

அவன், "ஆமாம், ஸார். இதோ பாருங்களேன்: அங்கிருந்த டிக்கட்டுகளையெல்லாம் எடுத்து வந்துவிட்டேன்" என்றான் பெருமை பொங்க.

—'போர்க்வா பாஸ்', பிரஸ்ஸல்ஸ்.

ஆந்திரமும் தெலுங்கும்

எம். சோமசேகர சர்மா

ஆந்திர ராஜ்யம் புதிதாக அமைந்துவிட்டது. சரித்திரத்திலும் புராண இதிகாசங்களிலும் ஆந்திரம், தெலுங்கு இவைபற்றிக் கிடைக்கும் ஆதாரங்களை இந்தச் சரித்திர நிபுணர் இங்கே விவரிக்கிறார்.

ஆந்திரர்கள் மிகவும் புராதன மக்கள். அவர்கள் எப்போது தோன்றினர்கள் என்பதே இன்னும் தெரியவில்லை. வேதத்தில் உள்ள ஐதரேயப் பிராம்மணம் என்ற பகுதியில்தான் முதல் முதலாகப் புளிந்தர், புண்ட்ரர், சபரர், முதிபர் என்ற பெயர்களோடு 'ஆந்திரர்' என்ற பெயரும் வந்திருக்கிறது. இவர்கள் விசுவாமித்திர முனிவரின் ஐம்பது மூத்த பிள்ளைகள் என்றும், தங்களுக்கும் மூத்தவனாகச் சுனச்சேபனை ஏற்றுக்கொள்ளாததால் இவர்களை இழிவானவர்கள் என்று சாபமிட்டு அவர் ஒதுக்கிவிட்டதாகவும் தெரிகிறது. டாக்டர் விண்டர்னிட்ஸ் என்ற ஆராய்ச்சியாளர் ஐதரேயப் பிராம்மணத்துக்கு முன்னலேயே சுனச்சேபனைப்பற்றிய வரலாறு இருந்திருண்டு என்கிறார். ஆகவே, சுனச்சேபன் காலத்தில் இருந்த ஆந்திரர்கள் மிகவும் புராதனமான மக்கள் என்று தெரிகிறது. ஆதிகாலத்தில் வாழ்ந்தவரின் பெயரைக் கொண்டு இப்போது வாழும் மக்களையும் குறிப்பிடுவது பழைய வழக்கம். அந்த ரீதியில் பார்த்தால் விசுவாமித்திரரின் மகனான 'ஆந்திரன்' என்பவனுடைய சந்ததியாரே இப்போதைய ஆந்திரர்கள் என்று சொல்லலாம்.

சுனச்சேபன் கதையின் உண்மைக் கருத்து என்னவாக இருந்தாலும் சரி, ஒரு விஷயம் நிச்சயம்: அந்தக் காலத்தில் விந்தியப் பிரதேசத்தில் ஆரிய ஜாதியாரோடு பிற ஜாதியாரும் வாழ்ந்து வந்தார்கள் என்றும், இந்த ஆந்திரர் விசுவாமித்திரரின் சந்ததியாரானதால் இவர்களும் ஆரிய இனத்தைச் சேர்ந்தவரே என்றும் தெரிகிறது. பௌத்த இலக்கியங்களிலும் அந்தகர் (ஆந்திரர்கள்) என்பவர்கள் வட இந்தியாவைச் சேர்ந்த ஜாதியார் என்று வருகிறது. வடகோசலத்தின் தலைநகரான சிராவஸ்தியினருகில் 'ஜேத வனம்' என்ற காட்டையடுத்து 'அந்தக வனம்' என்று இன்னொரு காடு இருப்பதாக அதில் குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆந்திரர்கள் ஒரு காலத்தில் வட இந்தியாவிலிருந்தே தென்னிந்தியாவுக்குக் குடியேறி, கிருஷ்ணா-கோதாவரிப் பிரதேசத்தில் ராஜ்யம் அமைத்தார்கள் என்று சொல்லலாம். ஆந்திரர்கள் மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்

மூலம்: ஹிந்து (ஆங்கிலம்: 1-10-'53), சென்னை.



பிரிந்த ஆந்திரமும் எஞ்சிய சென்னையும். ஆந்திரத்தின் கடற்கரை நீளம் சுமார் 600 மைல். 1951-ஸென்ஸஸ் கணக்குப்படி ஆந்திர ஜனத்தொகை ஏறக்குறைய 2 கோடியே 5 லட்சம்.

களுக்கு எதிராகக் கௌரவர்களுடன் சேர்ந்து போரிட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். ஆகவே, ராமாயண காலத்துக்கும் மகாபாரத காலத்துக்கும் இடையில் ஆந்திரர்கள் இங்கே வந்து குடியேறியிருக்க வேண்டும்.

பௌத்த இலக்கியத்தில் அஸ்ஸகர், மூலகர் என்ற இரண்டு ஆந்திர ஜாதியார் கோதாவரிப் பிரதேசத்தில் முதல் முதலாக வந்து குடியேறினார்கள் என்ற விவரத்தைக் காணலாம். இப்போது ஹைதராபாது ராஜ்யத்தில் போதான் (பழைய பெயர் போதன) என்று வழங்கும் இடம் அஸ்ஸகர் என்ற ஆந்திர ஜாதியாரின் தலைநகரமாகவும், கோதாவரிக் கரையிலுள்ள பைடன் (பழைய பெயர் ப்ரதிஷ்டானம்) மூலகர்களின் தலைநகரமாகவும் இருந்தன. அஸ்ஸகர், மூலகர், சாதவாகனர் இப்படிப் பல ஆந்திர ஜாதியார் இருந்திருப்பதாகத் தெரிகிறது.

"இப்போது வாழும் ஆந்திரருக்கும் விசுவாமித்திரரின் சந்ததியாருக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?" என்றால், அது இன்னும் நிர்ணயமானபாடில்லை. சிலர், "ஐதரேயப் பிராம்மணத்தில் வரும் பழைய முரட்டு ஆந்திர ஜாதியாருக்கும் இப்போதுள்ளவர்களுக்கும் சம்பந்தமேயில்லை. சந்திர வம்சத்து மன்னனான ஜனமேஜயனின் பரம்பரையில் வந்த பலிக்கு அங்கன், வங்கன், கலிங்கன், சுஹ்மன், புண்ட்ரன், ஆந்திரன் என்று ஆறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் கிழக்குப் பகுதிகளில் ஆண்ட ராஜ்யங்களுக்கே பின்னால் இப்படிப் பெயர் வந்தது" என்கிறார்கள்.

இப்படிப் பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். இவற்றில் எது தான் உண்மையென்று சொல்வதற்கில்லை. இனியும் ஆராய்ச்சி செய்தால்தான் இதைச் சொல்ல முடியும்.

ஆதிகாலத்தில் ஓர் இடத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் பெயரால் அந்த நாட்டைக் குறிப்பது வழக்கமாக இருந்தது. 'புகியர்' என்ற பிரிவினர் வசித்து வந்த இடத்தைப் 'புகி ராஷ்டிரம்' என்றும், 'ஹிரணியகர்' என்ற பிரிவினர் வசித்து வந்த இடத்தை 'ஹிரணிய ராஷ்டிரம்' என்றும் குறிப்

பிட்டார்கள். 'ராஷ்டிரம்' என்றால் குறித்த எல்லைக்குள் இருக்கும் பிரதேசம் என்று பொருள். இதையே தெலுங்கில் 'நாடு', 'அனெமு' என்று குறிப்பிட்டு வந்தார்கள். முன்னே வாழ்ந்து வந்த பல வகைப் பூர்விக இனத்தாரும் மறைந்தோ இந்து சமூகத்தில் இணைந்தோ போயிருக்க வேண்டும். இருந்தாலும், பழைய பிரதேசப் பெயர்கள்மட்டும் மாறாமல் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆகவே, தெலுகு நாடு அல்லது தெலுகு அனெமு என்ற பிரதேசத்தில் தெலிங்கர் என்ற பிரிவினர் வாழ்ந்திருக்கவேண்டுமென்றும், கலிங்கர், குயிங்கர் இவர்களைப்போல் இந்தத் தெலிங்கர்களும் இங்கே வாழ்ந்த திராவிட ஜாதியார் என்றும் தோன்றுகிறது. வாரங்கல் ஜில்லாவில் கோதாவரிக் கரையிலுள்ள மந்தேனையைச் சுற்றியுள்ள இடத்தில் ஆதியில் இந்தத் தெலிங்கர் வாழ்ந்திருக்கவேண்டும்.

வடக்கிலிருந்து வந்த ஆந்திரர்கள் கலாசாரத்திலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கியதால் விரைவில் கிழக்குத் தக்காணப் பகுதியில் வாழ்ந்துவந்த தெலிங்கர்கள், கலிங்கர்கள் முதலியவர்களை வென்று முதல் முதலாகப் பேரரசு ஒன்றை ஸ்தாபித்தார்கள். இதைத்தான் ஆந்திர சாதவாகன சாம்ராஜ்யம் என்று சொல்லுகிறார்கள். இந்த ஆந்திரர்கள் வட இந்தியாவி



ஆந்திர ராஜ்யம். நிலப் பகுதியில் புள்ளிக் கோடுகள் ஜில்லா எல்லைகள்; தொடர்ந்த கோடுகள் ஆறுகள். ஆனால் ஆறுகளின் பெயர்களைப் படத்தில் குறிக்கவில்லை.

விருந்து வந்ததால் ஆரிய மொழியின் கிளையான பிராகிருதத்தையே இவர்கள் பேசிவந்தார்கள். இதனால்தான் அந்தக் காலக் கல்வெட்டுக்கள் பிராகிருதத்தில் அமைந்திருக்கின்றன. இவர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் பிராகிருதத்தையே ராஜாங்க மொழியாக வைத்துக்கொண்டார்கள்.

பௌத்த மத நூல்களுக்கு உரை எழுதிய புத்தகோஷர் காலத்தில் முதல் முதலாக ஆந்திர பாஷை என்று அவர்கள் மொழிக்குப் பெயர் வழங்குவதைக் காணலாம். புத்தகோஷர் காலம் கி.பி. சுமார் 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டு. அவர், "ஆந்திர தேசத்தில் ஆந்திர மொழியிலேயே வேதங்களைக் கற்றுத் தந்தார்கள்" என்று ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார். அந்த மொழியின் எழுத்து, அமைப்பு எல்லாம் எப்படி இருந்தன என்று தெரியாவிட்டாலும் சம்ஸ்கிருதத்திலிருந்து வேறான 'ஆந்திரம்' என்ற ஒரு மொழி இருந்திருக்க வேண்டுமென்றே தெரிகிறது. அது திராவிட மொழி இனத்தைச் சேர்ந்த சில தெலுங்குச் சொற்கள் கலந்த ஒருவகைப் பிராகிருதமாக இருந்திருக்கவேண்டும். பழைய ஆந்திர அரசர்களின் ஆட்சி சீர்குலைந்த பிறகு ராஜாங்க மொழியாக இருந்த பிராகிருதத்தின் செல்வாக்கு, தெலுங்கு நாட்டில் மங்கத் தொடங்கியது. நாளடைவில் தெலுங்கு, பிராகிருதம் இரண்டும் இணைந்தன. இந்த வகைத் தெலுங்கில் முதல் முதலாக எழுதியதுதான் ஆந்திர மகா பாரதம். கி.பி. 7 முதல் 11-ஆம் நூற்றாண்டுவரை வழங்கிவந்த தெலுங்கு மொழி இது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இந்த வகைத் தெலுங்குக் கல்வெட்டுக்களைக் காண முடியும்.

ஆந்திர மகா பாரதம் இயற்றிய காலத்தில் தெலுங்கு என்று அந்த மொழிக்கு பெயர் வழங்கலாயிற்று. பிறகு திக்கன சோமயாஜி காலம் முதல் தெலுங்கு, ஆந்திரம் இரண்டும் ஒரே மொழிக்குரிய பெயர்களாகிவிட்டன. அந்த நாட்டு மக்களையும் அப்படியே தெலுங்கர், ஆந்திரர் என்று இரண்டு விதமாகவும் வழங்கலானார்கள்.

அந்தப் படம்

"இந்தக் காட்சி சூரியோதயமா, அஸ்தமனமா?"

"நிச்சயமாக அஸ்தமனந்தான்."

"அதெப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறீர்கள்?"

"இந்தப் படத்தை எழுதின சித்திரகாரர் எனக்குத் தெரிந்தவர். அவர் கண்விழித்து எழுந்திருப்பதே நடுப்பகலில் தான்."

—'கான்ஸ்டெல்லேஷன்,' பாரிஸ்.

புருஷர்களின் ஞாபகமறதி

மிக நல்ல ஞாபக சக்தி உடைய கணவன்மார்கூடத் தாங்கள் மணமானவர்கள் என்பதைச் சில சமயம் மறந்துவிடுகிறார்கள்.

—ஆலின் மில்லர்





நகைகளின் உருமாற்றம்

குடிபூடி இந்துமதி தேவி

இந்தப் பெண்களின் நகைகள்தான் எத்தனை விதமாய் மாறிக் கொண்டிருக்கின்றன! பாட்டி காலத்து நகைகள் மறைந்து இன்று தோன்றியுள்ள புது நகைகளின் விவரத்தை இந்த அம்மாள் ரஸமாக விவரிக்கிறள்.

நம் பாட்டிகளின் காலத்தில் உபயோகத்தில் இருந்த நகைகளின் தோற்றம் மாறி வந்து, சில அபூர்வமாக உபயோகத்தில் இருக்கின்றன; சில அடியோடு மறைந்து பெயரளவில் இருக்கின்றன. பழங்கால நகைகளின்மேல் ஆசை இல்லாவிட்டாலும் நகை என்று சொன்னவுடன் அதன் பெயரையாவது கேட்க வேண்டுமென்ற ஆசை பெண்கள் எல்லாருக்கும் உண்டாவது சகஜம்.

பொதுவாகத் தென்னிந்தியாவிலும், சிறப்பாக ஆந்திரத்திலும் வழங்கும் நகைகளைப்பற்றிச் சொல்லுகிறேன்.

தலைச் சாமான்கள்: ராகிடி (ராக்கொடி); தமலபாகு=வெற்றிலை; மொகலிரேகு=தாழைமடல் - இவை பொன்னலோ கல் இழைத்தோ செய்யப் பெற்றவை. வெற்றிலையையும் தாழைமடலையும் வகிட்டுக்கு அருகே கோத்துச் சிறு பின்னல் பின்னிப் பின்னலே ராக்கொடியில் அந்தப் பின்னலைச் சுற்றி விடுவார்கள். ராக்கொடி, உச்சியில் வைத்துப் பின்னும் நகை. இது இப்பொழுதும் ஓரளவு உபயோகத்தில் இருக்கிறது. ‘அந்தக் காலத்தில், ராக்கொடி எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு மதிப்பு அதிகம்; அழகும் அதிகம்’ என்று சொல்லுவார்கள். ராஜாவுக்ும் ராணிக்கும் கிரீடம் பெருமை தருகிறமாதிரி இல்லாசிகளான பெண்களுக்கு ராக்கொடி பெருமை தருவது.




மூலம்: ஆந்திர மகிளா (தெலுங்கு), சென்னை.

வகிட்டுக்கு இருபுறமும் பசுவின் குளம்புகள், சூரியப்பிரபை, சந்திரப்பிரபை என்பவற்றைக் கோப்பார்கள். வகிட்டுக்கு அளவாகப் பொன்னாலோ முத்தாலோ கெம்புக் கற்களாலோ செய்து நுனியில் பதக்கம் கோத்தது சுட்டி. இதன் மற்றொரு பகுதி பட்டம். இது நெற்றியில் முன்னுச்சியில் இரண்டு காது வரையிலும் நீண்ட அணி. பின்னலின் மேல் ஜடை நாகத்தைக் கட்டுவார்கள். இதுவும் பொன்னாலானதே.

பெரும் பணக்காரர்கள் 'பைட்ட ஜட' என்ற ஒன்றைப் பின்னலில் அணிவார்கள். இதைப் பின்னாலிருந்து முன்னுக்கு இழுத்து மேலாக்கு மாதிரியாகப் போட்டுக் கொள்வார்கள். கூச்சிபூடி பாகவதர்கள் பாகவதம் ஆடும்போது இப்படி இரண்டு ஜடைகள் இருக்கும். சத்தியபாமை வேஷம் போடும் பெண், 'பைட்ட ஜட' அணிந்து அதை முன்புறம் போட்டுக் கொண்டு பல பங்கிகளில் நாட்டியம் ஆடுவாள்.

ஜடைநாகம் சிறு பெண்களுக்கே வைப்பார்கள். வயதானவர்கள் சொருக்குப் போட்டு மற்றத் தலைச் சாமான்களையும் முத்துத் தோடுகள், ஜெரி சங்கிலி, சொருக்கு மாட்டல், மாட்டல் இவற்றையும் அணிந்துகொள்வார்கள். சிலர் சொருக்கு அல்லது எடுத்துக்கட்டு கிறையுபபடி, பிறை, நட்சத்திரங்கள், சவுரிக்கொட்டை, தேங்காய்ப் பூ, ஒரிதழ்ச் சாமந்திவில்லை, அடுக்குச் சாமந்தி வில்லை இத்தனையையும் வைத்துக்கொள்வார்கள். இவ்வளவு நகைகளையும் இவர்கள் வைத்துக்கொண்டு ஆவணி மாதம் வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில் மஞ்சள் குங்குமத்துக்கு வீடு வீடாகப் போகும் அழகைப் பார்க்கும் பாட்டிகளுக்கு உற்சாகம் பொங்கி வரும். "காஞ்சீபுரம் தேர் அசைந்தாற் போலும், மகாலக்ஷ்மியைப்போலும், பூத்த ஆவாரைச் செடிகளைப் போலும் எத்தனை அழகாக இருக்கிறார்கள்!" என்று உடலெல்லாம் கண்ணாகக் கொண்டு பார்ப்பார்கள்.

ஒரு சமயம் இப்படி அலங்கரித்துக்கொண்ட வயது சென்ற சுமங்கலிகளுடன் சிறிய சுமங்கலிகள் நாங்கள் சிலரும் சேர்ந்து போனோம். என் தோழி விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, "பாட்டி! நன்றாயிருக்கிறதே உங்கள் அலங்காரம்! சண்டைக்குப் புறப்படும் குதிரைகளைப் போலவும் வைக்கோல் குடிசையின் மேல் பூத்த பரங்கிப் பூவைப்போலவும் நகைகளையும் இந்த ராக்கொடியையும் அணிந்திருக்கிறீர்கள்!" என்றாள். எங்கள் வயதினர் எல்லோரும் நாகர் வைத்துக்கொண்டிருந்தோம். ஓர் ஊசியின் நுனியில் பீங்கானில் செய்து அமர்த்திய கிளி ஒன்றைப் பின்னலிலோ எடுத்துக்கட்டின் மேலோ செருகிக்கொண்டிருந்தோம். இந்த நாகரிகம் புதிதாக வந்ததுதான்; இருந்தாலும் எங்களைவிட நாகரிகத்தில் ஒரு படி முன்னேறிய ஒரு பெண், கையால் ஒருத்தியைச் சுட்டிக்காட்டி, கேலியாகச் சிரித்து, "ஓலைக்குடிசையின் மேல் பீர்க்கம்பூ இருக்கிறது; சூரம்மாவின் தலைமேல் என்ன இருக்கிறதென்று பார்" என்று பாடினாள். நாங்கள் எல்லாரும் ஒன்றும் புரியாமல் திருதிருவென்று விழித்தோம். சூரம்மா சட்டென்று புரிந்துகொண்டாள். விறக்கென்று வீட்டுக்குப்போய் நாகரைக் கழற்றி விட்டுச் சாதாரணமாகப் பின்னிக்

கொண்டு வந்தான். வேறு சிலரும் ரோஷப்பட்டுக்கொண்டு நாகரைக் கழற்றிவிட்டார்கள். ஆனால் எங்களில்பலர், "கூலியோ பத்து ரூபாய் கொடுத்திருக்கிறோம். பத்து மாதங்கூட ஆகவில்லை. இருக்கட்டும்; நமக்கு நன்றாகத்தான் இருக்கிறது!" என்று நாகரைக் கழற்றாமல் வைத்துக்கொண்டோம்.

காது நகைகள்: முத்துத் தோடுகள், கேரி சங்கிலி இவை பெரிய மாட்டலைப் போன்றவை. இவற்றைத் தோட்டின் முன்புறத்தில் மாட்டி மாட்டலைப் போல் தலைமேல் ஏற்றிப் பிறகு வகிட்டுக்கு இரு புறமும் கொண்டு போய் முடிப்பார்கள். மாட்டல்கள் தோட்டில் ஆரம்பித்துக் காது மூலையோடு நின்றுவிடுபவை. சொருக்குச் சங்கிலியைக் காதில் குருடு, பாவிலி என்றவற்றில் ஏதாவது ஒன்றோடு இசைத்துச் சொருக்கின் இருபுறமும் கொண்டுபோய்ச் செருகிவிடுவார்கள். பாவிலி அல்லது முருகு பல வகைப்படும். முறம் போன்றவை ஜல்லி பாவிலி. இவற்றில் சல்லடை போன்ற துளைகள் நிறைந்திருக்கும். ஜம்பாலு என்பது மற்றொரு வகை. நாலு வரிசை முத்துச் சரங்களை ஒரே கொக்கியில் மாட்டியிருக்கும். இது காதின்மேல் பாகத்திலிருந்து தொங்கும்; இந்தக் காலத்து நாகரிகப் பெண்களின் தலையிலிருந்து, பூக்கள் தொங்குவது போல் திரும்பியபோதெல்லாம் ஆடும். இது பத்து வகை. ஏறக்குறைய முகம்மதியப் பெண்களின் காதுகளில் உள்ள தொளைகளில் பாதி நம்மவர் காதுகளிலும் இருந்தன. இப்போது அவர்களே அவ்வளவு குத்துக்களையும் விட்டுவிட்டார்களே! அதற்கப்புறம் புதிய நாகரிகம் ஒன்று வந்தது. கன்னத்தை ஒட்டியபடி காதின் குட்டி நுனி இருக்கிறதே, அதைத் தொளையிட்டுத 'தாலூகாக் காது' என்று பெயரிட்டார்கள். இது என் அம்மா, அக்கா அவர்கள் காலத்தில் இருந்தது.

ஒரு பெண்ணுக்குத் 'தாலூகாக் காது' குத்திச் சரியாகாமல் முகமே கோணலாகிவிட்டதாம். அதிலிருந்து அந்த நகைக்கு மவுசு போய்விட்டது. அதன் பெயரே மறைந்துவிட்டது.

கழுத்தின் ஆபரணங்கள்: பிற்காலத்தில் அட்டிகைகளில் புதுச்சேரி அட்டிகை, கெஜ்ஜட்டிகை, என்னல் அட்டிகை, ஜிலேபி அட்டிகை என்றவை தோன்றி மறைந்தன. கல் அட்டிகையை மட்டும் இப்போது சிலர் அணிந்திருப்பதைப் பார்க்கிறோம். சங்கிலிகளில் கடியாரச் சங்கிலி, ஹோம்ரூல் சங்கிலி (சாதா செயின் 10 அல்லது 12-நீண்டவளையம் ஒன்று சேர்த்தது), எணிச் சங்கிலி, விபூதிப் பட்டைகளையோ S போன்ற தகடுகளையோ இணைத்த சங்கிலி இப்படிப் பல மாதிரி சங்கிலிகள் தோன்றின; இன்னும் பல தினுசுகளில் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

தெலுங்கர்களில சுமங்கலிகளுக்குக் கருகுமணி முக்கியம். இதை அந்தக் காலத்துக் கர்நாடகப் பெண்மணிகள் மென்னியைப் பிடிக்க அணிந்து, அதோடு சரட்டில் பெரிய தாம்பாளங்கள் போன்ற திருமங்கலியங்களையும் அணிந்திருப்பார்கள். இவை இடைக்காலத்தில் பணக்காரர்களிடத்திலிருந்து மறைந்தன. ஆனால் சினிமாவில் கையாளப்படுவதால் மறுபடியும் வந்துவிட்டன. ஆந்திர தேசத்து நகைகளில் முக்

கியமானவற்றில் காறையும் ஒன்று. குண்டுகள் கோத்த காறை, பட்டைக் காறை, முறுக்குக் காறை, வங்கிக் காறை என்று பல தினுசுகள் உண்டு. இத்தனையையும் எப்படிப் போட்டுக்கொள்வது என்று யாரோ கேட்கிறார்கள். எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் போட்டுக்கொள்வார்களா? ஒவ்வொரு முறை ஒவ்வொன்றை அணிவார்கள். இவை பணக்காரரின் நகைகளே. ஏழைகளுக்கு என்றைக்கும் ஒரே நிலைதான. பணக்காரர்கள் மட்டும் இவ்வளவு நகைகளை எப்படிச் சுமப்பார்கள் என்று கேட்கிறீர்களா? அவர்கள் வடித்த நாலு படிச் சோற்றுப் பானையை இந்தக் காலத்துப் பெண்கள் தூக்கி வடிப்பார்களா? அவர்கள் தூக்கிய தண்ணீர்த்தவலையைச் சுமப்பார்களா?

மூக்குக்கு: பேசரி, நத்து, முத்து மூக்குத்தி, ஹம்ஸ பேஸரி, புல்லாக்கு இவை அணிந்து வந்தார்கள். நததுக்குள் ஓர் உருண்டை சாதம் நுழையும்படி இருக்குமாம்.

கைகளுக்கு: மேல் பாகத்தில் அணிபவை: வங்கி, நாக ஒத்து, பாஜுபந்து, கடகம். ஆண் பிள்ளைகள் கூடக் கடகம், சிங்கமுகத் தோடா என்பவற்றை அணிவார்கள்.

முன் கை அணிகள்: காப்பு, பாட்டில், கங்கணம, கொலுசுகளோடு மண் வளைகளும் அணிவார்கள்.

காலணிகள்: பாடாம், தண்டை, காப்பு, பாதசரம், மாங்காய்க் கொலுசு, தொட்டில் சங்கிலி போன்ற கொலுசு, ஜிலேபிக் கொலுசு, கெட்டிக்கொலுசு, அத்திக்காய்க் கொலுசு, பட்டைக் கொலுசு, சாதா செயின் என்று காலக்கிரமத்தில் மாறின. பீலி என்ற ஒன்று மறைந்தே விட்டது. இடைக்காலத்தில் இவை எல்லாம் போய்க் காலில் ஒரு கொலுசு, கையில் ஒற்றை வளை, கழுத்தில் மெல்லிய ஒற்றைச் செயின் அணிவது நாகரிகமாயிற்று. நாலு விரல் அகலக் கைக்காப்பு, நாலு அங்குல அகலம் சுற்றளவுள்ள கால காப்பு, ரூபாய் அளவு தோடு, கால்ரூபாய் அளவு மூக்குத்தி, ஒட்டைச்சாண் அகலம் ஒட்டியாணம் இவை தலையெடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அளவில் தேய்ந்து, இப்போது மறைந்தே போய்ப் பெயரளவில் நிற்கின்றன. தங்க வளையல்கள் இருக்குமிடம் தெரியாதபடி மெல்லியவையாய்க் கண்ணாடி வளையல்களோடு சேர்ந்து முழங்கை வரையில் ஏறுகின்றன. இன்றைய நாகரிகம் நாளைக்குப் பழசு.

இவையெல்லாம் போக, லோலாக்குகள் வேப்பங்காயாகி அவலாகி, சங்குசக்கரமாகி, சல்லடையாகி, முறமாகி, சங்கிலியாகி, கூடையாகி, பழையபடி ஜிமிக்கியாகிவிட்டன. பிறகு ஒன்று இரண்டு மூன்று கப் கோத்த ஜிமிக்கி, தோளுடன் உறவாடி இப்போது குறைந்து வருகிறது. காலணிகள் மறைந்தேவிட்டன.

புதிய கார்

அப்பா: காலனுக்கு எவ்வளவு மைல் ஓடும்?
அம்மா: மெத்தை முதலியவை என்ன நிறம்?
மகன்: எவ்வளவு வேகமாய் ஓடும்?
அடுத்த வீட்டுக்காரர்: அதை வாங்க அவர்களிடம் பணம் ஏது?

—'தி ஹெய்ட் அக்ஸலேரேட்டர்.'

டாக்டர் திரும்புகிறார்

-ஆந்திரே மோர்வா சித்திரம்-

மக்கள் சமுதாயத்தில் ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு தீமைகள் நிலவுகின்றன. தீமைகளையெல்லாம் ஒழித்து இன்ப மயமாக உலகத்தை மாற்ற அவ்வப்போது அறிஞர்கள் சிந்தித்துக் கற்பனை உலக சித்திரங்களைத் தீட்டுகிறார்கள். அப்படி இன்றைய அறிஞர் ஒருவர் வரைந்த ஒன்றின் சாரம் இது. இந்தக் கட்டுரை வரிசையை எழுதி வருகிறவர் அன்பர்

ரா. ஸ்ரீ. தேசிகன்.

ஆந்திரே மோர்வா (Andre Maurois) பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியர்களுள் ஒருவர். சான்றோர்களின் சரிதங்களை மிகக் கவின்பெறச் சமைக்கும் ஆற்றலுள்ளவர். பழுத்த அநுபவமும், விரிந்த அறிவும், எதையும் நுணுக்கமாய்த் துருவி ஆராயும் சக்தியும் இவரிடத்தில் ஒரு தனிச் சிறப்புடன் மிளிர்கின்றன. டிஸ்ரெலி (Disraeli), பைரன் (Byron) இவர்களுடைய சரிதங்களையும் ஷெல்லி (Shelley) பற்றிய எரியெல் (Ariel) என்னும் சரிதத்தையும் ஒரு நவீன முறையில் வரைந்திருக்கிறார். இவைகளைப் படிக்குந்தோறும், பெரிய நாவல்களை நுகர்கிற உணர்ச்சி நம் மனத்தகத்தே பாயும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

“டாக்டர் ஓ’ கிரேடி மீண்டும் வருகிறார்” (The Return of Dr. O’ Grady) என்ற நூலில் ஒரு கற்பனைச் சித்திரம் விரியக் காண்கிறோம். டாக்டரிடம் தமக்கு மிகுதியான அன்பு உண்டு என்றும், ஆனால் அவர் வெளியிடும் கருத்துக்களுக்குத் தாம் பொறுப்பாளி அல்ல என்றும் ஆந்திரே மோர்வா மொழிகிறார். டாக்டர் தருகிற கருத்துக்கள் நம் சிந்தனைக்கு உரியவை.

முன் நடந்த போர்களுக்கும், இப்போது நடக்கும் போர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றி டாக்டர் கூறுகிறார். “கல்லால் அமைத்த ஒரு போர்க்கருவி ஒரு வைரியின் மண்டையை மட்டுந்தான் முன்பு பிளந்தது. 18, 19 இந்த நூற்றாண்டுகளில் நடந்த போர்கள்கூடப் பெருந் தீங்குகளை விளைவிக்கவில்லை. இப்போது நடக்கிற போர் முறைகளோ உலகத்திலுள்ள மனிதப் பூண்டனைத்தையும் வேரோடு மாய்த்து உலகத்தைச் சூனியம் அரசு செலுத்தும் சுடுகாடாக ஆக்கிவிடும்” என்று சாற்றுகிறார். இந்தப் பல்லவியைத் தான் வெல்ஸ் (Wells) எழுதிய நூல்கள் அனைத்திலும் கேட்கிறோம்.

‘உலகத்தையே அழிக்கும் இந்தக் கொடும் நோயை நீக்க வழியுண்டோ?’ என்று ஒருவர்

டாக்டரை வினவுகிருர். அதற்கு அவர் பின்வரும் பதிலை அளிக்கிருர்:

(1) மாந்தர்களுக்குப் போதுமான உணவையும் உடையையும் அளித்து அவர்கள் இன்பமான வாழ்வு நடத்தும்படி செய்வதற்குரிய பெரு முயற்சிகளை நாம் கைக்கொள்ள வேண்டும். இயற்கையில் மனிதன் முரட்டுச் சுபாவம் உடையவனுயிருந்தபோதிலும், வருங்கால வாழ்க்கை நிரந்தர இன்பத்தை அளிக்கும் என்ற நம்பிக்கையில் அவன் சாந்தம் அடைந்து விடுவான்.

(2) எந்தவிதமான முரட்டுத்தனச் செயலையும் தடுத்துவிட முடியும். போர்க் கருவிகளைப் பாதுகாப்பில் வைக்க வேண்டும். இந்தத் துறையில் ரகசியமென்பது கூடாது. பேரொளி எங்கும் பரவியிருந்தால், குற்றங்களைப் புரிய மனிதன் அஞ்சுவான்.

(3) நல்லுணர்ச்சிகளை மனிதனிடத்தில் தூண்ட வேண்டும். தூய ஒழுக்கம், வேதாந்த ஆராய்ச்சி, மதக் கொள்கைகள்—இவை பரவி மனிதனை முன்பு செம்மைப்படுத்தின. அத்தகைய சூழ்நிலையை மீண்டும் அமைத்தல் நலமாகும். தாழ்மையுற்றவர்கள் அவமானமுற்றவர்கள் இவர்களின் மனப்புண்களை ஆற்றவேண்டும். இப்படிப்பட்டவர்கள் தான் போர் உணர்ச்சியை வளர்ப்பார்கள். இவர்களிடத்தில் இன்பம் இல்லாத காரணத்தால், வெஞ்சினந் தான் இவர்கள் உள்ளத்தில் அரசு செலுத்தும். அதைத் தவிர்க்க நாம் எழவேண்டும்.

(4) மனிதனின் போர் உணர்ச்சியையும், போட்டி உணர்ச்சியையும் வேறு வாய்க்காலில் ஓடவிடுதல் சாலவும் நன்று. காதல் உணர்ச்சியை அழிக்க முடியாது. மனிதக் காதலைத் தெய்வக் காதலாக மாற்றிவிட்டால், காதல் தூய்மையுற்றுப் பெரும்பதவியை அடைந்துவிடும். ஆழ்வார்களும் நாயன்மார்களும் இந்த முறையைக் கையாண்டார்கள்.

(5) பெருத்த மதச் சடங்குகள் மனிதனைச் சூழ்ந்து நிற்கவேண்டும். ஐக்கிய நாடுகள் பொலிவுற்றுத் திகழ்ந்தால் உலக ஸமாதானம் ஓங்கி நிற்கும்.

(6) போர் தவிர்க்க முடியாத விஷயமன்று என்பதை மனிதனுக்குக் காண்பிக்கவேண்டும். வேட்டையாடும் தொழிலை விட்டுப் பந்தடிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள் சில காட்டு மனிதர்கள். மேலும் இந்தியாவிலும் சீனுவிலும் போர் என்பதை மறந்த சகாப்தங்கள் உண்டல்லவா? நாம் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளாத நிலையில் மனிதவர்க்கம் அழிந்துவிடும். அணுக்குண்டின் வேகத்தைத் தாங்கும் நம்பர் 311 பன்றி உலகமாய்ப் போய்விடும். "நம்பர் 311 பன்றி என்று சொல்லுகிறீர்களே, அதென்ன? சொல்லுங்கள், டாக்டர்" என்று ஒருவர் அவரை வினவினர். "அமெரிக்காவில் அணுக்குண்டுப் பரீட்சை செய்தபோது, அந்தப் பெரும் வெடியில், 311 இலக்கம் இட்ட பன்றி ஒன்று தான் பிழைத்துக் கரைக்கு நீந்தி வந்ததாம். முன் ஜாக்கிரதையை இழந்தோமானுல், வராக மண்டலமாய் நம் உலகம் மாறிவிடும்" என்று நகைச் சுவை ததும்ப டாக்டர் பதில் கூறினர்.

"நாம் நம்மை மனிதர்கள் என்று அழைக்கக் கூடிய யோக்கியதை அடைவதற்கு முன்பே

நம்மை விஞ்ஞானம் தெய்வங்களாக ஆக்கிவிட்டது'' என்று ஜீன் ரோஸ்டன் (Jean Rostand) மொழிந்த சொற்கள் நம் சிந்தையில் ஒலிக்காமற் போகா.

எந்த நிலையிலும் மனிதன் தன்னை மாற்றிக்கொள்ளலாம். பாவ்லவ் (Pavlov) ஒரு நாயைக் கொண்டு அநேகம் பரீட்சைகள் நடத்தினார். ஓர் இறைச்சித் துண்டைக் காண்பித்ததும், நாயின் நாக்கில் ஜலம் ஊறுகிறது. இறைச்சியைப் போல எந்தச் சிவப்பான பொருளைக் கண்டாலும் அத்தகைய உணர்ச்சி நாய்க்கு வருகிறது. ஒரு வித மணி அடிக்கும் நேரத்திலும் அதற்கு அந்தச் செயல் வருகிறது. இந்த நிலையில்தான் மனிதன் இருக்கிறான்.

நம்முடைய சரித்திர ஆசிரியர்கள் போர்வீரர்களைப் புகழ்ந்து பேசுகிறார்கள். இளம் மனத்தில் போர்வீரர்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் வேரூன்றி விடுகிறது. போர் முரசு கொட்டுகிறபோது இவர்களும் வீரர்களாய்த் திகழ விரும்புகிறார்கள். ஆனால் "ஸீஸர், நெப்போலியன், ஹிட்லர் - இவர்கள் உத்தம புருஷர்கள் அல்ல; உலகத்திலே தோன்றிய கடும் நோய்கள். புத்தர், சாக்ரடீஸ், ஏசுநாதர், ராமாநுஜர் - இவர்கள் தான் உத்தம புருஷர்கள்'' என்று சொல்லிக்கொண்டே வந்தால், உலகம் சமாதானத்தை நோக்கி விரைந்து போகும்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் நடத்திய சோதனைகள் நம் உள்ளத்தைக் கவராமற் போகா. அவர் பணத்தை வெறுத்தார். ஒரு நாள் அவர் உட்கார்ந்த இடத்தில் ஒருவர் ஒரு நாணயத்தை வைத்துவிட்டார். அந்த இடத்துக்கு அவர் போவதற்கு அவர் உடல் நரம்புகள் இடம் தரவில்லை. 'இத்தகைய வெறுப்பு நல்லதா? கெடுதலா?' என்ற விஷயத்தை நாம் ஆராய வேண்டியதில்லை. மனிதன் தன்னை மாற்றிக்கொள்ளக் கூடும் என்ற விஷயத்தை ஒருவரும் மறுக்க முடியாது. மேலும் சிந்தையின் வகையன்றோ செய்கை என்று கம்பர் கூறுகிறார். சீதை மிதிலையில் பவனி வருகிறபோது எல்லோரும் வணங்கினார்களாம். அவளைத் தாயாக அவர்கள் கருதினார்கள். ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு விலைமகளும் கலைமகளாய்த்தான் காட்சி அளித்தாள். தனித்த மனிதனின் மனக்கோளாறுகளை நீக்க உளச்சிகிச்சை வைத்தியசாலைகள் ஏற்படுவது போலவே, நாட்டின் அரசியல் மனக்கோளாறுகளை அகற்றவும் வைத்தியசாலைகள் (The Institute of Psychopolitics) எழவேண்டும்.

அடுத்த மகாயுத்தத்தைப்பற்றி டாக்டர் தரும் கருத்துக்களை ஆராய்வது நம் கடமையாகும். நாம் நம்மைத் தக்கதொரு சமுதாயமாக அமைத்துக்கொள்ளாத நிலையில் தனித் தனியாக அணுக்குண்டு வீச்சுக்கு இரையாகிவிடுவோம் என்று ஐன்ஸ்டீன் (Einstein) கூறுகிறார்.

"உளச்சிகிச்சையால் போர் வராதபடி தடுக்கலாம். அப்படிப் போர் நிகழுமானால், அதன் தன்மையை உனக்குச் சொல்லுகிறேன்'' என்று டாக்டர் தொடங்குகிறார்.

முன்போல் இல்லை இனி வரும் போர்கள். மனிதப்பூண்டே அழிந்துவிடும் போல, அணுக்குண்டு நிரம்பிய உலகம் காட்சி அளிக்கிறது. சர்வதேச ஆட்சிதான் இந்தக் கோர சம்பவத்தைத் தடுக்கக்

கூடியது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். 'உலகம் வேண்டுமா? உலகம் வேண்டாமா?' என்று கேட்டால், அறிவில்லாத ஜனங்கள் - அறிவில்லாத இரண்டு கால் பிராணிகள் - 'உலகம் அழியட்டுமே' என்று சொல்லுகிறார்கள். இத்தகைய உலகத்தில் நாம் என்ன செய்ய முடியும் என்று டாக்டர் மொழிகிறார்.

மேலும் விஞ்ஞான உலகத்தின் அதிசயங்களை டாக்டர் சித்திரிக்கிறார். ஆண் இல்லாமலேயே பெண்கள் பிரஜைகளை உற்பத்தி செய்ய முடியும்; ஆகவே, ஆண்கள் தேவை இல்லை என்ற முடிவுக்கு அவர் வருகிறார். இதே கருத்தை மேட்டர்லிங்க் (Maeterlinck) தம் 'தேனீ' (Bee) என்ற புத்தகத்தில், 'ராணி ஈயின் சாந்திக் கலியாணப் பிரயாணம்' என்ற அத்தியாயத்தில் வெளியிடுகிறார். தனித்த மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று டாக்டரை ஒருவர் வினவுகிறார்.

பொதுவாகச் சமுதாயத்துக்கும் தனித்த மனிதனுக்கும் நிகழ்கிற போராட்டத்தைத்தான் ஆசிரியர்கள் சித்திரிக்கிறார்கள். ஒழுங்கான சமுதாயத்தில் அத்தகைய போராட்டத்துக்கு இடமில்லை. தனித்த ஒரு மனிதன் அபூர்வமான எண்ணங்களையோ கொள்கைகளையோ வெளியிட்டால், அதற்காகச் சமூகம் அவனை வெறுக்கக் கூடாது. ஏனெனில், இப்போது சமூகம் வெறுக்கும் கொள்கைகளே பின்னால் மனித உள்ளத்தில் வீற்றிருந்து அரசு புரியும் ஆற்றல் பெறக்கூடும் அல்லவா?

பிரபஞ்சத்தைப்பற்றியும், அதை ஆட்டிவைக்கிற ஆண்டவனைப்பற்றியும் சர்ச்சைகள் இந்தப் புத்தகத்தில் நிகழ்கின்றன. பிரபஞ்சத்தில் மனத்துக்கு எட்டாத விஷயங்கள் நிகழ்கின்றன. அதற்காக அதை எதிர்த்து நிற்பதில் காரியமில்லை! இப்போது விரிந்துகொண்டே போகிற அறிவைக் கொண்டு துன்பங்களை அகற்றி இன்பங்களைப் பெருக்கிக்கொண்டு போகும் பாதைகளை வகுப்போமாக. முன்பு கிழவர்களை மதித்தார்கள். இப்போது கிழவர்கள் கூடப் பாலியங் கொண்டாடுகிறார்கள். வயதான பெண்களுக்கு நல்ல குரல் இருந்தால் அவர்கள் பாலியம் போலப் பாவித்துக்கொள்ளலாம். ரேடியோ நிலையத்தில் பாடினால், அவர்களின் உருவம் தெரியாதன்றோ? ரேடியோ நிலையங்கள் கூட அவர்களுக்குப் புகலிடமாக இல்லாமல் போய்விட்டன. டெலிவிஷன் எங்கும் தோன்றிவிட்டதால், அதற்காகச் சந்ததமும் இளமையோடு இருக்கப் பழகத் தொடங்கிவிட்டார்கள். "உன்னைப் பிறர் எப்படிப் பார்ப்பாரோ அப்படி உன்னைப் பார்த்துக்கொள்வாயாக; அதில்தான் பேரறிவு தங்கி நிற்கிறது" என்று டாக்டர் கூறுகிறார்.

'அடுத்த அணுக்குண்டுப் போருக்குப் பிறகு எவை எஞ்சி நிற்கும்?' என்ற கேள்வி எழுகிறது. 'எலிகளும் எறும்புகளும் பறவைகளும் உலகத்தில் வாழலாம்' என்ற பதில் வருகிறது. வேறு பிராணிகள் போன வழியே மனித இனமும் போய் மறைந்துவிடலாம்.

இந்த நிலையிலிருந்து தப்ப வழியுண்டா? ஆம்; உண்டு. தனித்துச் சாந்தமாய் யோசனை செய்தல் வேண்டும். இப்போது கிடைக்கக் கூடிய பிராணி சாஸ்திர அறிவைக்

கொண்டு எந்த நிலையையும் சமாளிக்கக்கூடிய புதிய மனித வர்க்கத்தைப் படைக்கவேண்டும். இப்போது இருக்கிற நிலையை முற்றும் மாற்றிவிடுவது நலமாகும்.

மனித ரீதியைக் கடந்த அமாநுஷ்ய மனிதர்கள் படைக்கும் கருவிகளையும் டாக்டர் சித்திரிக்கிறார். யோசனை பண்ணும் யந்திரங்கள், கணக்கிடும் யந்திரங்கள் இவைகள் தோன்றி விஞ்ஞானிகளுக்கு எந்தத் தொழிலையும் செய்யவல்ல கருவிகளாகிவிடும். உலகம் தோன்றிய நாள் முதல் வெளிவந்த புத்தகங்களை ஒரு சிறு அறையில் அடக்கிவிடலாம். ஒவ்வொரு புத்தகத்துக்கும் ஒரு டயல் நம்பர் உண்டு. அதைத் திருப்பினால் திரையில் நமக்கு வேண்டிய விஷயம் விழும்.

அரசியல் திட்டம் வகுக்கவோ அல்லது அரசாங்கத்தை நடத்தவோ யந்திரங்கள் பயன்படும். ஆள்கிற யந்திரம் மாந்தர்களின் எண்ணங்களை அளந்துவிடும். யந்திரம் ஒன்றுதான் நடுநிலையிலிருந்து எல்லா அலுவல்களையும் செய்யும் என்று டாக்டர் கூறுகிறார்.

"எல்லாவற்றுக்கும் மூலகாரணமான அழுக்காறு போகுமா?" என்று ஒருவர் டாக்டரைக் கேட்கிறார். அழுக்காற்றையும் அகற்றிவிடலாம். அதை எழுப்பியவர் ஒழுங்காய் நடந்துகொண்டால்-கொஞ்சங்கூட ஐயத்துக்கு இடம் தராமல் இருந்தால் - எல்லாம் ஒழுங்காய்ப் போகும்.

உலக நிலை மோசமாய்ப் போய்க்கொண்டிருந்தாலும், தைரியத்தை மனிதன் இழக்கக்கூடாது. புயல் அடிக்கலாம். மலைகள் போல் அலைகள் மோதி எழலாம். மாலுமி கை விரித்து நின்றால் யாது பயன்? மாலுமி அப்படி நிற்பதில்லை. அவன் புயலை எதிர்த்து நிற்கிறான். புயலும் தணிந்துவிடுகிறது. எல்லாம் வெற்றிகரமாய் முடிகின்றன. உலகம் உய்ய மா மருந்து நம் உள்ளத்தில் இருக்கிறது. அதை அருந்திப் பிழைப்போமாக.

ராக்ஃபெல்லர் கொடை

டஸ்க்கெஜி இன்ஸ்டிட்யூட் என்ற ஒரு கல்வி ஸ்தாபனத்தின்மீது ஜான் டி. ராக்ஃபெல்லர் (ஜூனியர்) மிகுந்த சிரத்தைகொண்டிருந்தார். அங்கே அவர் ஒரு முறை போயிருந்தபோது, வியாபார சம்பந்தமான பாடம் நடந்துகொண்டிருந்தது. ஒரு மாணவனைப் பார்த்து, "எங்கே ஒரு புரோநோட்டு எழுது, பார்க்கலாம்" என்றார் உபாத்தியாயர்.

மாணவன் உடனே பிளாக்போர்டில், "டஸ்க்கெஜி இன்ஸ்டிட்யூட்டுக்கு 10,000 டாலர் செலுத்த நான் வாக்களிக்கிறேன்—(ஒப்பம்) ஜான் டி. ராக்ஃபெல்லர் (ஜூனியர்)" என்று எழுதினான்.

இதைக் கண்டு களிப்புற்று, ராக்ஃபெல்லர் அங்கேயே அந்த ஸ்தாபனத்துக்கு 10,000 டாலருக்கு ஒரு செக் எழுதி வழங்கினார்.

—பி. ஸி. ஃபோர்ப்ஸ்

அமெரிக்காவில் இந்தியப் பயிர்கள்

★

★★★

அநேக விதமான இந்தியப் பயிர்களைக் கொண்டு போய் அமெரிக்க விவசாயத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். இந்தச் செய்தி நமக்குப் பெருமை தருவதுதான். ஆனால், இதனால் நம் விவசாய ஆராய்ச்சியாளர் ஒரு படிப்பினையும் பெறவேண்டும்.

★★★

போன வருஷம் அமெரிக்காவின் மேற்குப் பகுதியிலும் தென்மேற்குப் பகுதியிலும் அடித்த வெயிலால் புல்லும் கருகிற்று. பருத்திச் செடிகளெல்லாம் காய்ந்து நின்றன. சில இடங்களில் மட்டும் பச்சைப்பசேலென்று ஒரு செடி வாடாமல் வளர்ந்தது. டெக்ஸாஸ் ராஜ்யத்தில் உள்ள டல்லாஸ் என்ற இடத்து விவசாயிகள் அதை ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள். அவர்கள் பார்த்த செடி வேறொன்றும் இல்லை; எள்ளுச் செடிதான்.

எள்ளுச் செடி அமெரிக்காவுக்குப் புதிதல்ல. ஆயினும் நெடுங்காலமாய் அது அங்கே அதிகமாய்ப் பயிராகவில்லை. ஏனென்றால், எள்ளுக் காய்கள் ஒன்றுபோல் காய்ப்பதில்லை. முந்திக் காய்க்கும் காய்கள் முந்தி வெடித்து எள் விதை ஏராளமாகச் சிதறிப் போகும். அறுக்கும் யந்திரத்தையும் எள் விளைவுகளில் விட முடியவில்லை.

சிறிது காலத்துக்கு முன்பு இந்தியாவிலிருந்து ஓர் உயர் வகை எள் அமெரிக்க விவசாய இலாகாவின் செடிகொடிப் பிரிவுக்கு அனுப்பப் பெற்றது. அதைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கும் புதுவகைச் செடியில் காய்கள் ஒன்றுபோல் காய்க்கின்றன; இதனால் ஒரு காயும் முன்போ பின்போ வெடிப்பதில்லை; எல்லாம் ஒன்று போலவே வெடிக்கும். இந்தப் புதுவகை எள் விளைச்சல்தான் டல்லாஸ் என்னும் ஊர் விவசாயிகளுக்குப் பெரிய வியப்பாயிருந்தது.

எள்ளின் நல்லெண்ணெய் அமெரிக்காவில் நல்ல பணம் தரும்; எள்ளுப் பிண்ணாக்கில் நிறையப் புரதச்சத்து இருப்பதால், அதற்கும் தேவை அதிகம். எனவே, இனிமேல் அமெரிக்காவின் தென் பகுதி விவசாயிகள் எள்ளை அதிகமாக விரும்பிப் பயிரிடுவார்கள் என்று தெரிகிறது.

எள் மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ ஆசிய நாட்டுச் செடிகொடிகளால் அமெரிக்க விவசாயம் பலன் அடைந்திருக்கிறது. அமெரிக்கப் பயிர் வகைகளை வாட்டுகிற கோடை வெயிலும் நோய்களும் அவற்றைப் போன்ற ஆசிய நாட்டுப் பயிர் வகைகளை வாட்டுவ

காப்பிரைட்: அமெரிக்கன் ரிப்போர்ட்டர் (ஆங்கிலம்: 2-10-'53), சென்னை.

தில்லை என்று அமெரிக்க விவசாய இலாகா கூறுகிறது. உலகத்திலுள்ள செடி கொடி முதலிய பயிர்களை ஆராய்ந்து தகுந்தவற்றை அமெரிக்காவில் உற்பத்தி செய்ய வழி வகுக்கும் பிரிவு ஒன்று அமெரிக்க விவசாய இலாகாவில் இருக்கிறது.

கலிஃபோர்னியாவில் இம்பீரியல் பள்ளத்தாக்கு என்னும் பிரதேசத்தில் முலாம்பழத்தோட்டங்கள் அதிகம்; முலாம் பழ வியாபாரத்துக்கு அது பெயர் பெற்ற இடம். ஒரு சமயம் முலாம்பழங்கள் எல்லாம் பூசணம் பிடித்தும் மற்றும் சில நோய்களாலும் கெட்டுப் போகத் தொடங்கின. சிறிது காலத்தில் அந்தப் பிரதேசமெங்கும் முலாம் பழமே இல்லாமல் போய்விடும் போல் தோன்றிற்று. அப்போது, இந்தியாவிலிருந்து வந்த மூன்று வகையான முலாம்பழ வித்துக்களை அமெரிக்க வகையோடு இணைத்தார்கள். புதிதாய் வளர்ந்த ஒட்டுவகைச் செடியால் இன்று கலிஃபோர்னியாவில்



கோலம்பியா நதிப் பள்ளத்தாக்கில் ஒரு நிலம். அமெரிக்காவில் விவசாயம் முற்றும் யந்திரங்களாலேயே நடைபெறுகிறது.

மூலாம்பழத் தோட்டங்கள் முன்போல் செழிப்பாயிருக்கின்றன. இந்த மூலாம் பழ வியாபாரத்தால் ஆண்டுதோறும் ஐம்பது, அறுபது லட்சம் டாலர் கிடைக்கிறது.

அமெரிக்காவில் வளரும் இலந்தை வகையிலும் நோயில்லாமல் வளரும் செடி ஒன்று உண்டு. அதுவும் இந்தியாவிலிருந்து கொண்டு போன இலந்தையின் உதவியால் கண்டுபிடிக்கப் பெற்ற புது இனந்தான்.

பாக்டீரியாக் கிருமிகளால் பாதிக்கப் பெறாத சோயாபீன் வகையும் இந்தியாவிலிருந்து போனதுதான். இதேபோல் அரிய ஆமணக்கு ஒன்றும் அமெரிக்காவில் அதிகமாக உண்டாகிறது. அதுவும் முதலில் இந்தியாவிலிருந்து சென்றதே. அஸ்ஸாமிலிருந்து கொண்டுபோன வெள்ளரியைக் கொண்டு நோய் பற்றாத புதுவகை வெள்ளரி ஒன்றைக் கண்டுபிடிக்க அமெரிக்காவில் முயற்சி நடக்கிறது. வெள்ளரியும் அமெரிக்காவின் தென் பகுதியில் முக்கியமாக விளைவதே.

வெளிநாடுகளில் சேகரித்த செடி கொடிகள் எல்லாம் முதலில் அமெரிக்கத் தலைநகருக்குப் போகும். அங்கு அவற்றை வகை வகையாய்ப் பிரிப்பார்கள். பிறகு அமெரிக்காவின் பல பாகங்களிலுமுள்ள பிராந்திய நிலையங்களுக்கு அவற்றை அனுப்புவார்கள். (இந்தியாவிலிருந்து செல்பவற்றைப் பெரும்பாலும் தெற்கு ராஜ்யமாகிய ஜார்ஜியாவுக்கே அனுப்புகிறார்கள்.) அந்த அந்த இடங்களில் இந்தப் புதுச் செடிகளையும் இவற்றைப் போன்ற அமெரிக்கச் செடிகளையும் கலந்து புது வகையை உற்பத்தி செய்கிறார்கள். இதற்குச் சில சமயம் பல ஆண்டுகள் ஆகும். கலப்பினத்தைக் கண்டுபிடித்துச் சோதித்துப் பார்த்த பிறகு அதை ஏராளமாக விளைவிக்க உடன்படும் விவசாயிகளுக்கு அனுப்பி விதைகளைச் சேகரித்து வைத்துக் கொள்வார்கள்.

பாடகரின் சாமர்த்தியம்

ஜான் மக்கார்மக் பிரபல ஐரிஷ் பாடகர். அவருடைய கச்சேரி யென்றால் யாரும் கேட்கவே தவற மாட்டார்கள். அவருக்கு ஒரு கச்சேரியின்போது சற்று ஜலதோஷம் கண்டுவிட்டது. இருந்தாலும் அவர் சோர்ந்துவிடவில்லை. ஆனால் ஓர் இடத்தில் மேல் ஸ்தாயியை எட்ட வேண்டியிருந்தது. அப்போதைய நிலையில் அது சாத்தியமில்லை என்று அவருக்குத் தெரியும். ஆகவே, பக்க வாத்தியக்காரர் முதலியோரை ஜாடையாக ஒரு பார்வை பார்த்தார். அவர்கள் காது புளிக்கும்படி உச்ச ஸ்தாயியில் வாசிக்க ஆரம்பித்தார்கள். இப்படி மக்கார்மக் பாடி முடித்ததும் சபையோர் பிரமாதமாகக் கரகோஷம் செய்தார்கள். மக்கார்மக் தலை வணங்கிப் புன்சிரிப்புடன் அதை ஏற்றார். ஆர்க்கெஸ்ட்ரா உச்ச ஸ்தாயியில் வாசிக்கையில் அவர் வாய்திறந்தாலும் குரலை எழுப்பவேயில்லை.

—'காரோனெட்'

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்ற மட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் போதுவாகக் கொள்ளலாமே தவிர வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

[நண்பர்களின் கேள்விகளுக்கெல்லாம் விடை கூற எனக்கு விருப்பந்தான். ஆனால், 'மஞ்சரி'யில் கொடுத்திருக்கும் இடம் சுருக்கம். எனவே, அநேக நண்பர்களுடைய கேள்விகளுக்கு விடை கொடுக்க இயலாமற் போகிறது.]

மீனு, சென்னை:

கேள்வி 1: செயற்கைப் பற்கள் வைத்துக்கொள்வது நல்லதா? அவை பார்வைக்கு நன்றாயிருப்பதைத் தவிர, ஆகாரத்தை மென்று விழுங்கப் பிரயோசனப் படுவதில்லையே!

விடை: விதியில்லாமல் போனால்தான் செயற்கைப் பற்கள் வைத்துக்கொள்ள வேண்டும். இயற்கைப் பற்களில்லாதவர்களுக்கு இந்தப் பற்கள் அழகாயிருப்பதோடு, மெல்லவும் பேசவும் உபயோகமாகின்றன.

கே. 2: தேகத்தை ஆக்கிரமிக்கும் பகை அணுவுயிர்களைக் கொல்வதில் பெனிசிலின் நல்லதா? ஆரோமைசின் நல்லதா?

வி: இருவகை மருந்துகளுக்கும் தனித்தனி ஆற்றல் இருக்கின்றன. ஒன்றோடு ஒன்றைத் தரம் மதிக்க இயலாது. பெனிசிலினால் கொல்ல இயலாத அநேகம் அணுவுயிர்களை ஆரோமைசினால் கொல்ல முடியும்.

கே. 3: பெனிசிலின் மருந்தை ஏன் வாய்மூலமாக உபயோகிக்க முயற்சி செய்யவில்லை?

வி: பெனிசிலின் மருந்தை வாய் மூலமாகப் பயன்படுத்தும்படியும் தயார் செய்திருக்கிறார்கள். ஆனால் அதை இஞ்செக்ஷன் மூலம் உடலில் புகுத்துவதால் உண்டாகும் நற்பயனை வாய் மருந்து கொடுப்பதில்லை. நான் எழுதியிருக்கும் 'பெனிசிலின்' என்ற நூலில் இதை நன்கு விளக்கியிருக்கிறேன். படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

கே. 4: சல்ஃபானமைட், பெனிசிலின் இவை போன்ற மருந்துகளைக் கண்டு பிடிக்குமுன் விஷக் கிருமிகளைக் கொல்ல எந்த மருந்துகளை நம் முன்னோர்கள் உட்கொண்டார்கள்? அந்தக் காலத்தில் விஷக் கிருமிகள் இருந்ததில்லையா?

வி: மின்சார சக்தி, ரெயில் வண்டி, மோட்டார், ஆகாய விமானங்கள் இவையெல்லாம் இல்லாத நாளில் நம் முன்னோர்கள் எப்படிப் பிரயாணம் செய்தார்களோ அதைப் போலவே விஷக் கிருமிகளையும் வென்றிருப்பார்கள். மனிதன் உலகில் உதயமான நாள் முதல் விஷக் கிருமிகளும் உற்பத்தியாகித்தான் இருக்க வேண்டும் என்று விஞ்ஞான ஆராய்ச்சி கூறுகிறது.

கே. 5: க்ஷயரோகத்துக்கென்று கண்டு பிடித்துள்ள அற்புத மருந்தான 'ஸ்ட்ரெப்டொமைசின்' ஏன் பலருக்கு ஏமாற்றம் அளிக்கிறது?

வி: க்ஷயரோகக் கிருமி வம்சத்தில் தனி ஆற்றல் பெற்ற சில கிருமிகள் இருக்கின்றன. இவைகளைத் தாக்க ஸ்ட்ரெப்டொமைசினால் இயலவில்லை. சில வேளை இந்த மருந்து இந்த அணுவுயிர்கள் வேகமாய் வளர்ந்து பெருகும்படி கூடச் செய்துவிடுகிறதாம். சில நோயாளிகளின் விஷயத்தில் ஏமாற்றம் ஏற்படுவதற்கு இது ஒரு காரணமாகும்.

கே. 6: கால்களில் பித்தவெடி ஏற்படுவது ஏன்? அதற்குப் பரிகாரம் உண்டா?

வி: தேக ஆரோக்கியக் குறைவினால் பித்தவெடி ஏற்படலாம். ஒரு வகைப் பூஞ்சணம் இதற்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள். காலைத் துப்புரவாய் வைத்துக் கொண்டு செருப்பையும் உபயோகப்படுத்தினால், பித்தவெடி நீங்கலாம்.

ஐயாசாமி, ஆர். பம்பாய்:

கே. 1: 'கூலிங் கிளாஸ்' அணிவதால் கண்களுக்குக் கெடுதல் உண்டா?

வி: நம் கண்களிலேயே வெளிச்சத்தின் கடுமையைக் குறைக்க வசதிகள் இருக்கின்றன. இதற்கு மேல் கண்ணில் படும் சூரிய வெளிச்சத்தைத் தாங்கக்கூடிய சக்தியும் நம் கண்களுக்கு இருக்கிறது. கண்ணுக்கு இயற்கையாக இருக்கும் இந்தச் சக்தியெல்லாம் 'கூலிங் கிளாஸ்' அணிவதால் குறைந்துதான் போகும். இதற்குப் பிறகு 'கூலிங் கிளாஸ்' இல்லாமல் வெளியே செல்லவே இயலாமல் போய்விடும். ஆனால் சில தொழில்களில் (வெல்டிங் அணு ஆராய்ச்சி போன்றவற்றில்) 'கூலிங் கிளாஸ்' இல்லாமலிருந்தால் கண் குருடாகி விடும்.

கே. 2: பிரதி தினமும் புகைவண்டியில் நாற்பது மைல் பிரயாணஞ் செய்யும் ஒருவர் கவனிக்க வேண்டிய சுகாதார விதிகளைக் கூற முடியுமா?

வி: இதற்குச் சுகாதார விதிகள் கூறுவது சற்றுக் கஷ்டம். ரெயில் வண்டியில் பிரயாணஞ் செய்யும் நேரம் அதிகமாயிருந்தால் தேகப் பயிற்சிக்கும், ஆகாரத்தைச் சாவகாசமாய்ச் சாப்பிடுவதற்கும் நேரமில்லாமல் போகலாம். ரெயில் வண்டி, டிராம், பஸ் முதலிய பொது வாகனங்களில் செல்லும் போது தொத்து நோய்கள் பற்றிக்கொள்ளலாம். இவற்றில் முக்கியமானவை ஜலதோஷம், இன்ஃப்ளுயென்ஸா, தொண்டைப் புண் ஆகியவை. இவற்றைத் தடுக்கக் கைக் குட்டையைக் கொண்டு

மூக்கையும் வாயையும் மூடிக் கொள்வது. அவசியம். ஆனால் முற்றும் இந்த நோய்கள் தொத்திக்கொள்ளாமல் இது தடுக்காது. வீட்டுக்கோ வேலை செய்யும் இடத்துக்கோ சென்றவுடன் நல்ல தண்ணீரைக் கொண்டு தொண்டையைக் கழுவிக்கொள்வது சிறந்த பரிகாரமாகும்.

கே. ஆர். ரதுபதி; கடம்பக் குறிச்சி:

கே. 1: குழந்தைகள் பெற்றிருந்தால் பாட முடியாது, அல்லது குரல் கெட்டு விடும் என்று ஓர் அன்பர் கருதுகிறார். அது உண்மையா?

வி: குழந்தைகளைப் பெற்றும் குரல் கெடாமல் வெகு நாள் பாடிக்கொண்டிருந்த மாதர்களை நான் பார்த்திருக்கிறேன்; அப்படிப்பட்ட பலரைப்பற்றிக் கேட்டும் இருக்கிறேன்.

கே. 2: ஒரு வருஷம் பூர்த்தியாகு முன் குழந்தை கண்ணாடியைப் பார்த்தால் ஊமையாகி விடும் என்று நம்புகிறார்களே; அது உண்மையா?

வி. இந்த நம்பிக்கைக்கு ஆதாரமில்லை.

கே. 3: அடிக்கடி தும்மல் தோன்றுவதற்குக் காரணம் என்ன? உள் நாக்கு வளர்ந்திருப்பதே காரணமா?

வி: தும்மலினால் தனக்குக் கஷ்டமிருப்பதும், பிறர் ஒரு காரியத்தில் ஈடுபடும்போது தும்மினால் அது அபசகுனமாகும் என்ற நம்பிக்கையும் மன வருத்தத்துக்குக் காரணமாகலாம். 'அலெர்ஜி' (allergy) என்று சொல்லப்படும் அதீத உணர்ச்சியே தும்மலுக்குக் காரணமாகலாம். உள் நாக்கு வளர்ந்திருப்பது நீடித்த ஜலதோஷத்தின் அறிகுறியாகலாம். ஜலதோஷமும் தும்மலும் தொடர்புடைய நோய்கள். 'அலெர்ஜி'க்கென்று மருந்துகள் இருக்கின்றன. உங்கள் வைத்தியரிடம் கேட்டுக்கொள்ளலாம்.

பி. எல். சுந்தரம், வாலப்பேன் எஸ்டேட்:

கே. 1: சாப்பாட்டுக்குப் பின் வெற்றிலை போட்டுக்கொள்வது நல்லதா, கெடுதலா? கெடுதலானால் என்ன கெடுதல்?

வி: வழக்கமாக வெற்றிலை போட்டுக்கொள்கிறவர்களுடைய ஆரோக்கியம் அதனால் குறையவில்லை. அது ஜீரணத்துக்கு நல்லதென்றே சொல்லுகிறார்கள். வெற்றிலையில் இருக்கும் காரம் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியது. பற்களை மட்டும் அடிக்கடி சுத்தம் செய்துகொள்ள வேண்டி வரும்.

கே. 2: இருபது வயதுள்ள ஓர் ஆண் எவ்வளவு எடை இருக்க வேண்டும்? உயரம் எவ்வளவு இருக்க வேண்டும்?

வி: எடை உயரத்தையும் வயதையும் பொறுத்தது. உயரத்தை வயதுக்குத் தக்கபடி நிதானிப்பது சாத்தியமில்லை; அது ஒவ்வொரு நாட்டையும் பொறுத்தது. சில நாட்டினர் இயற்கையாகவே குள்ளர்களாக இருக்கிறார்கள்; சில நாட்டினர் இயற்கையாகவே உயரமாய் இருக்கிறார்கள். நம் நாட்டில் இருபது வயதுக்கு, சுமார் ஐந்து அடி ஆறு அங்குலம் இருக்கலாம்; எடை நூறு பவுண்டுக்குக் குறைவில்லாமல் இருக்க வேண்டும்.

எஸ். ஏ. கே., கண்டி:

கே: அக்குளில் நாற்றம் வீசுவதேன்? அதைப் போக்க என்ன செய்ய வேண்டும்?

வி: அக்குளைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதுதான் அதற்குப் பரிகாரம். ஆடையும் தூய்மையாக இருக்க வேண்டும். தினமும் ஸ்நானம் செய்ய வேண்டும். அக்குளில் மயிர் வளரவிடாமல் இருப்பது நாற்றத்தை நீக்க உபாயமாகும்.

ஏ. வி. ராமகிருஷ்ணன், ஸெக்ஷன் ஆபீசர், சிங்காரப்பேட்டை:

கே. 1: பெரியம்மை (வைசூரி) பூட்டினால் அதற்குச் சிகிச்சை முறை ஏதாவது உண்டா?

வி: பெனிசிலின் போன்ற பூஞ்சண மருந்துகளைப் பிரயோகம் செய்து பெரியம்மையால் தோன்றும் கோளாறுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

கே. 2: நிறை கர்ப்பிணிக்கு அம்மை பூட்டினால் என்ன விதமான பாதுகாப்புக்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்?

வி: இந்த நோய் விஷயமான பாதுகாப்புக்கள் தடுப்பு முறைகளே; உறுதியாய்ப் பயன் தருமென்று சொல்லக் கூடிய வேறு முறைகள் ஒன்றுமில்லை. தடுப்பு முறை என்னவென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

கே. 3: மனைவிக்கு அம்மை பூட்டினால் கணவன் அருகில் செல்லலாகாது என்பதன் மர்மம் என்ன?

வி: கணவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான். ஆரோக்கியத்தோடிருப்பவர்கள் அம்மை நோய் தோன்றியவர்களிடம் செல்ல வேண்டுமானால், அம்மை குத்திக் கொள்ள வேண்டும்; ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவையாவது குத்திக்கொள்ள வேண்டும். பொதுவில் எல்லா விதத் துப்புரவையும் கையாள வேண்டும்.

ப. கமலக் கண்ணன், புதுவை.

கே. 1: சினிமா பார்ப்பது நல்லதென்று டாக்டர் அகர்வால் கூறுகிறார். தங்கள் கருத்து யாது?

வி: சினிமா பார்ப்பதைப் பற்றிப் பலர் பல விதமாய் அபிப்ராயப்படுகிறார்கள். ஆகவே, நான் அபிப்பிராயம் கூறினால், அதற்கு மதிப்பிருக்குமென்று நான் நம்பவில்லை. சினிமா பார்ப்பது கண்ணுக்கு எப்படி என்பதைத்தான் டாக்டர் அகர்வால் சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். சினிமா பார்ப்பதில் நேர்முறை, தவறான முறை என்று இரண்டு விதம் இருக்கின்றன. நேர் முறையில் பார்த்தால் நலமளிக்கும் என்கிறார் டாக்டர் அகர்வால். கண்பார்வை விஷயத்தில் அநுபவம் பெற்ற டாக்டர் அகர்வால் சொன்னால், அதில் நம்பிக்கை வைக்கவேண்டியதுதான்.

கே. 2: இரவில் விழிக்கும்போது தண்ணீர் குடிக்கலாமா? காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிப்பது நல்லதா?

வி: தாகம் எடுத்தால் நீர் அருந்துவது எந்த வேளையிலும் நல்லதுதான்.

கே. 3: மனம், அறிவு என்பன யாவை? இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையா? வைத்திய சாஸ்திரப்படி இதற்கு விளக்கம் கூறுமாறு வேண்டுகிறேன்.

வி: இந்த விஷயத்தை விளக்க வைத்திய சாஸ்திரத்தைக் காட்டிலும் மனத்தத்துவ சாஸ்திரமே தகுதியானது. மனம் புத்திக்கு ஆதாரம்; புத்தி என்பது அறிவால் வளர்கிறது. சாதாரணமாக மனம் என்று சொல்லும்போது, விருப்

பத்தைப்பற்றி எண்ணுகிறோம். மனத்தத்துவ சாஸ்திரமோ, மூளையையும் அதன் வேர்களாகிய உணர்ச்சி நரம்புகளையும் கிளைகளாகிய இயக்கு நரம்புகளையும் பற்றிய பல கருமங்களைக் குறித்தும் விவரிக்கிறது.

எஸ். பி. ஸ்வாமி, அறந்தாங்கி:

கே. 1: ஜலதோஷம் வரக் காரணம் என்ன? வந்தால் அதைப் போக்கக்கூடிய நல்ல மருந்து எது?

வி: ஜலதோஷம் ஒரு வகைத் தொற்றுநோய். ஆகவே, ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குத் தொற்றிக்கொள்ளும். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது போல, மூன்று நாள் மருந்து கொடுத்தால் ஜலதோஷம் படிப் படியாய்க் குறைந்து குணமாகிக் கொண்டு வரும். ஜலதோஷத்தைப் போக்கக்கூடிய நல்ல மருந்து ஆராய்ச்சியாளர்களுடைய முயற்சிக்கு அகப்படாமல் ஒளிந்துகொண்டிருக்கிறது. ஆனால் அதனால் விளையும் சிக்கல் கோளாறுகளைக் குறைக்க 'ஸல்ஃபானமைடு' மருந்துகளும் 'பெனிசிலின்' போன்ற பூஞ்சண மருந்துகளும் பயன்படுகின்றன.

கே. 2: கண் பார்வை குறைவாயுள்ளவர்கள் கண்ணுக்குக் கண்ணாடி அவசியம் போட்டுத்தான் ஆகவேண்டுமா? அப்படிப் போட்டுக்கொள்ளாமல் இருந்தால் தீங்கு அதிகரிக்க வழியாகுமா?

வி: கால் முடமாயுள்ளவன் மரத்தால் செய்த பொய்க்கால்களைக் கொண்டு நடக்கிறான். கண்காட்சிகளைக் கண்டு உள்ளம் இன்புறுகிறது. கண் பார்வைக் குறையுள்ளவர்கள் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்வையை விருத்தி செய்துகொள்ள இயலுமானால், அது அவசியமென்றே சொல்ல வேண்டும். கண்ணாடி போட்டுக் கொள்ளாமல் இருந்தால் தீங்கு அதிகமாகுமா என்று கேட்டால் அது அந்த அந்தக் கண்வியாதியைப் பொறுத்தது.

வாடிக்கைக்காரர்

ஒரு நாள் ஒரு கனவான் ஓட்டல் ஒன்றுக்குப் போனார். அங்கிருந்த வெயிட்டரிடம், "பழுப்பு ரொட்டி வேண்டும்" என்றார். வெயிட்டர் வெள்ளை ரொட்டியைக் கொண்டுவந்து வைத்தான். கனவான் பேசாமல் சாப்பிட்டுவிட்டு, மறு நாளும் அதே ஹோட்டலுக்குப் போனார். அதே வெயிட்டரிடம் பழுப்பு ரொட்டி கேட்டார். அவன் வெள்ளை ரொட்டியே கொண்டுவந்து போட்டான். பிறகு பல நாள் இப்படியே இவர் பழுப்பு ரொட்டி கேட்க, அவன் வெள்ளை ரொட்டியே கொண்டுவந்தான். கடைசியில் ஒரு நாள் இதை மாற்றிப் பார்க்க எண்ணினார் கனவான். "கொஞ்சம் வெண்ணெய், கொஞ்சம் சர்க்கரை இவைகளோடு ஒரு வெள்ளை ரொட்டி வேண்டும்" என்றார். உடனே அந்த வெயிட்டர் இவரைச் சற்று வெறித்துப் பார்த்து, "தினம் பழுப்பு ரொட்டி கேட்பாரே ஒரு கனவான்; அது நீங்கள் தானே? இல்லையா?" என்றான்!

—'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி அவ் பாகிஸ்தான்'

சிறு கதை:

எவ்வளவு நிலம் வேண்டும்?

லியோ டால்ஸ்டாய்

மனிதனுக்கு மண்ணின்மேல் உள்ள ஆசை அளவற்றது. மண்ணாசை ஒருவனை எப்படி அழிக்கும் என்பதை ருஷிய ஞானி டால்ஸ்டாய் ஒரு கதையாக எழுதியிருக்கிறார். விநோபா பாவேயின் பூதான யக்ஞம் வளர்ந்து வரும் இந்தக் காலத்துக்கு இந்தக் கதை மிகவும் பொருத்தமானது. 'சக்தி காரியாலய'த்தார் இரண்டு பாகமாக வெளியிட்டுள்ள 'டால்ஸ்டாய் கதைகள்' என்ற புத்தகத்தின் இரண்டாவது பாகத்தில் உள்ளது இது. தமிழ்ப்படுத்தியவர் ஸ்ரீ போ. குருசாமி. புத்தகத்தின் விலை: ரூ. 1-8-0.

தங்கையைப் பார்க்க அக்காள் வந்திருந்தாள். தமக்கை பட்டணவாசி; தங்கை கிராமத்தவள். மூத்தவள் ஒரு பெரிய வியாபாரிக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள்; இளையவள் எழைக் குடியானவனின் மனைவி. இருவரும் சாப்பிட்டவாறே பேச ஆரம்பித்தார்கள்.

அக்காள், "வாழ்வதென்றால் பட்டணத்தில் வாழவேண்டும். சுகமென்றால் அது அல்லவா சுகம்!" என்று பட்டண வாழ்வைப் போற்றி ஒரு புராணம் பாடினாள். தங்கையோ, "பட்டண வாழ்வில் நிச்சயமில்லை; ஆனால் பட்டிக்காட்டு வாழ்க்கையை நிச்சயமாக நம்ப முடியும். வரும்படி அதிகம் இல்லாவிட்டாலும் போதுமானது" என்று கிராம வாழ்க்கையின் மேன்மையை எடுத்துரைத்தாள்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தான் இளையவளின் கணவன் பகோம். 'ஓய்வு இல்லாமல் பாடுபட்டுக்கொண்டிருப்பதால் தீய நினைவுகளுக்கு இடமில்லை. போதிய நிலம் இல்லை என்பதுதான் ஒரே குறை. நிறைய நிலம் மட்டும் இருக்குமானால் அந்தச் சாத்தானுக்குக்கூட அஞ்ச வேண்டியதில்லை' என்று எண்ணினான் அவன்.

நடந்த பேச்சு முழுவதையும் ஒரு பக்கத்திலிருந்து சாத்தான் (கடவுளின் எதிரியான பேய்) கேட்டுக்கொண்டிருந்தான். "நிறைய நிலம் இருந்தால் சாத்தானுக்குக்கூடப் பயப்பட வேண்டியதில்லை" என்று பகோம் நினைத்தது, சாத்தானை அளவு கடந்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

"சரி, பார்க்கலாமே! நம் இரண்டு பேரில் யார்தான் வல்லவரென்று தெரிந்துகொள்ளலாம். வேண்டியமட்டும் நிலம் உனக்குத் தந்து, அதன் வழியாகவே உன்னை என் அடிமையாக்குகிறேன், பார்" என்று சாத்தான் கூறிக்கொண்டான்.

பகோமின் கிராமத்தை ஒட்டி ஒரு சீமாட்டி வாழ்ந்து வந்தாள்.

அவனுக்கு 300 எக்கர் நிலம் உண்டு. அவன் நிலபுலங்களையெல்லாம் விற்றுவிடப் போகிறுன் என்று ஒரு வதந்தி உலாவியது.

அயல் வீட்டான் ஐம்பது எக்கர் வாங்கப் போவதாய்ப் பகோம் கேள்விப்பட்டான். அவனுக்குப் பொருமை ஏற்பட்டது. "நிலம் முழுவதையும் மற்றவர்கள் வாங்கிக்கொண்டால் நாம் என்ன செய்வது?" என்று தன் மனைவியோடு கலந்தாலோசித்தான். எப்படியாவது இருபது எக்கர் நிலமாவது வாங்கவேண்டும், என்ன வழி செய்வதென்று இருவரும் யோசித்தார்கள். பல விதங்களில் பாதிப் பணம் சேர்த்தார்கள். எஞ்சியிருக்கும் பாதியை இரண்டு ஆண்டுகளில் கொடுத்துவிடுவதென்ற ஏற்பாட்டுடன், நாற்பது எக்கர் நிலம் வாங்கினுன் பகோம்.

ஒரே வருஷத்தில் கடன் எல்லாம் தீர்ந்தது. தனக்காகவே தன் சொந்த நிலத்தை உழலானுன். இன்பமாக வாழ்ந்து வந்தான். திருப்தி அவன் மனத்திலே குடிகொண்டது. ஆனுல் அண்டை அயலில் இருந்த குடியானவர்கள் தொல்லைமட்டும் இல்லாமலிருந்தால்....

அவனுடைய வயல்களுக்குள் மற்றவர்களின் ஆடுமாடுகள் வந்துகொண்டே இருந்தன. பல முறை சொல்லியும் பயனில்லை. மற்றக் குடியானவர்கள் தன் மேல் வெறுப்புக் கொண்டு இவ்வாறு செய்யவில்லை, போதுமான நிலம் இராததுதான் இதற்குக் காரணம் என்று பகோமுக்குத் தெரியும். இருந்தாலும் என்ன செய்வது? 'சும்மா விட்டுக்கொண்டே இருந்தால் என் கதி என்ன ஆவது?' என்று நினைத்து, அவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஒருவன் தண்டனை அடைந்தான்; பின்னர் மற்ருெருவன். ஒருவன் அபராதம் செலுத்தினுன்; இன்னொருவனும் செலுத்தினுன். இதனுல் வெறுப்பேற்பட்டு ஊரார் வேண்டுமென்றே அவனுடைய தானியங்களைத் திருட ஆரம்பித்தார்கள். ஒரு நாள், அவனுடைய வாழைத் தோட்டத்தில் ஒரே ஒரு மரம் தவிர மற்ற எல்லாம் நாசமாகிக் கிடந்தன. தாறு, இலை, பட்டை எல்லாவற்றையுமே எவனே திருடிக்கொண்டு போய்விட்டான். யோசித்துப் பார்த்ததில், 'சைமன் தான் இப்படிச் செய்திருப்பான்' என்று தோன்றவே வழக்குத் தொடர்ந்தான். போதிய சான்றுகள் இராததால் சைமன் விடுதலையானுன். சைமன்மேல் பகோமுக்கு இன்னும் ஆத்திரம் அதிகமாயிற்று. நீதிபதிகளிடமே பூசல் விட்டுவிட்டு வந்தான். அண்டை அயலாரிடமும் சமாதான முறையில் நடந்துகொள்ளவில்லை. வீட்டில் நெருப்பு வைத்துவிடுவதாகப் பலர் பயமுறுத்தினுர்கள். இப்படிச் சொத்து இருந்துங்கூட அமைதியாக அவனுல் வாழ முடியவில்லை.

இந்தச் சமயத்தில் பலர் வேறு இடத்துக்குக் குடி போவதாக வதந்தி கிளம்பியது. 'போனுல் போகட்டும்; அவர்களுடைய நிலங்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டு இன்னும் சௌகரியமாக வாழலாம்' என்று பகோம் நினைத்தான்.

ஒல்கா நதிக்கு அப்பாலுள்ளது குடியேற்ற நாடானதால், குடியேறும் ஒவ்வொருவனுக்கும் இருபத்தைந்து எக்கர் நிலம் இனுமாகக்

கொடுக்கிறார்கள் என்றும், அதுவும் வளமான நிலம் என்றும் ஒரு நாள் கேள்விப்படவே பகோமுக்கு ஆசை கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. தானே போய் நிலமெல்லாம் பார்த்து, வழிப்போக்கன் வர்ணித்தபடியே அங்கே எல்லாம் இருக்கக் கண்டான். தவிர, பணம் உடையோர் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்; மிகவும் செழிப்பான பூமிகூட எக்கர் இரண்டு ஷில்லிங்குக்குக் கிடைக்கும். எல்லாவற்றையும் விற்றுவிட்டு மனைவி மக்களோடு அந்தப் புது இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

பகோமுக்கு மொத்தம் நூற்றிருபத்தைந்து எக்கர் நிலம் கிடைத்தது. ஊர்ப் பொது மேய்ச்சல் காடுகளையும் அவன் உபயோகித்துக் கொள்ளலாம். பழைய இடத்தில் இருந்ததைவிட இரண்டு மடங்கு நிலங்கள்; அதிலும் எல்லாம் நன்செய்கள்! முன்னைக் காட்டிலும் வாழ்க்கை பத்து மடங்கு மேலானதாக இருந்தது. ஆனால் இதிலும் திருப்தி உண்டாகவில்லை.

முதல் வருஷத்தில் தனக்குக் கிடைத்த பங்கில் கோதுமை பயிரிட்டான். நல்ல அறுவடை. மீண்டும் கோதுமையே பயிரிட விரும்பினான். இவனைப் போலவே பலரும் கோதுமை பயிரிட விரும்பினபடியால் ஒரே போட்டி; நிலமோ சிறிதளவுதான் இருந்தது. அதையும் பணம் படைத்தவர்கள் பெற்றுக்கொண்டார்கள். வருஷந்தோறும் வாடகைக்கு நிலம் வாங்கிக் கோதுமை பயிரிட்டு வந்தான். நல்ல பலன்; நிறையப் பணம் சேர்ந்தது. ஆனால் ஒவ்வொரு தடவையும் வாடகைக்கு நிலம் பிடிப்பது தொந்தரவாயிருந்தது. 'நான் தனி நிலமுதலாளியாக ஆகிவிட வேண்டியதுதான்' என்று எண்ணினான் பகோம். ஒரு பூமியை விலை பேசி முடிக்க இருந்தான்.

இந்த நிலையில் ஒரு வணிகன் பகோம் வீட்டுக்கு வந்தான். தான் பாஷ்கீர் பிரதேசத்திலிருந்து வருவதாயும், அங்கே ஆயிரம் ரூபிளுக்கு ஆயிரத்து முந்நூறு எக்கர் நிலம் வாங்கியிருப்பதாகவும் வியாபாரி தெரிவித்தான். மேலும், அங்குள்ள தலைவர்களோடு நட்புக் கொண்டால் போதும்; பேருக்கு ஏதோ விலை கொடுத்து எவ்வளவோ நிலம் வாங்கலாம் என்றும் சொன்னான். பகோமின் எண்ணமெல்லாம் இப்போது பாஷ்கீர் பிரதேசத்தைப்பற்றித்தான்!

வணிகன் பாஷ்கீருக்குச் சென்றவுடன், இவனும் ஒரு வேலைக்காரனைத் துணைக்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டான். வழியில் பாஷ்கீர்களுக்குப் பரிசுப் பொருள்களான தேயிலை, சாராயம் முதலியவற்றை வாங்கிக்கொண்டான். இருவரும் ஏழு நாளில் சுமார் முந்நூறு மைல் நடந்தார்கள். கடைசியில் இவர்கள் பாஷ்கீர் மக்கள் கூடாரமடித்துத் தங்கியிருக்கும் ஓர் இடத்தைக் கண்டார்கள்.

பாஷ்கீர் மக்களுக்கு உழவுத் தொழில் தெரியாது. நிறைய ஆடுமாடுகளை வளர்த்து வந்தார்கள். அவற்றின் இறைச்சியும் பாலுமே அவர்களுக்கு உணவு. சூதுவாது அறியாதவர்கள். பிறரிடம் அன்பாக நடந்துகொள்வார்கள். பகோம் வருவதைக் கண்டதும் வெளியே வந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அவன் வந்த நோக்கத்தைத் தெரிவித்தான்.

பாஷ்கீர் மக்களுக்கு ஒரே மகிழ்ச்சி. பலவிதமாக உபசரித்தார்கள். பின் பகோம் தான் கொண்டுவந்த பரிசுப் பொருள்களை வண்டியிலிருந்து இறக்கி வாரி வழங்கினன். அவர்களின் களிப்பு எல்லை கடந்தது. தங்களுக்குள் என்ன என்னவோ பேசிக்கொண்டார்கள். கடைசியில் மொழி பெயர்ப்போன் பகோமிடம் செய்தியைச் சொன்னன்: "உங்களைப் பாஷ்கீர் மக்கள் மிகவும் விரும்புகிருர்கள். விருந்ினரை மகிழ்விக்க என்ன என்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்வதே தங்கள் மரபென்றும், நீங்கள் தந்த பரிசுகளுக்கெல்லாம் கைம்மாறு செய்ய விரும்புகிருர்கள் என்றும் பாஷ்கீர் மக்கள் தெரிவிக்கிருர்கள். எங்களிடம் உள்ள பொருள்களில் எதை விரும்புகிறீர்களோ அதைத் தெரிவியுங்கள்."

"உங்கள் பொருள்களில் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்வது இங்குள்ள நிலபுலங்கள் தான். இவ்வளவு வளமான நிலத்தை நான் எங்கும் கண்டதேயில்லை" என்ருன் பகோம்.

அதற்குள் அவர்கள் தலைவனும் வந்தான். எல்லோரும் எழுந்து நின்ருர்கள். "இவர் தான் எமகள் தலைவர்" என்ருன் மொழி பெயர்ப்போன். பகோம், உடனே சிறந்த அங்கி ஒன்றையும் ஐந்து பவுண்டு தேயிலையையும் தலைவனுக்குப் பரிசாக அளித்தான். சிறிது விசாரித்துவிட்டு, தலைவன் பகோமிடம், "சரி, உன் விருப்பம் போல் எந்த நிலம் வேண்டுமோ அதைக் குறிப்பிட்டுச் சொல்" என்ருன்.

பகோம் அதற்கு நன்றி தெரிவித்துவிட்டு, தன் பெயருக்குப் பத்திரம் எழுதித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதற்குப் பாஷ்கீர் மக்களின் தலைவனும் ஒப்புக்கொண்டான்.

பகோம்: விலை என்னவென்று சொல்லவில்லையே!

தலைவன்: இங்கே எப்போதும் ஒரே விலைதான். நாளொன்றுக்கு ஆயிரம் ரூபிள்.

"நாளொன்றுக்கா! இதென்ன கணக்கு? எத்தனை ஏக்கர் இருக்கும்?"

"எத்தனை ஏக்கர் என்பது எங்களுக்குத் தெரியாது. நாள் கணக்கிலேதான் நாங்கள் விற்கிருேம். காலால் நடந்து ஒரு நாளில் எவ்வளவு சுற்றுகிருயோ அவ்வளவும் உன்னுடையதுதான். நாளொன்றுக்கு எவ்வளவு வேண்டுமானுலும் சுற்றலாம்; விலைமட்டும் ஓராயிரம் ரூபிள் தான்" என்ருன் பாஷ்கீர் மக்களின் தலைவன்.

"ஒரு நாளில் எவ்வளவு தொலைவு வேண்டுமானுலும் சுற்றலாமே!".... பகோமுக்கு ஒரே வியப்பு.

"எவ்வளவு சுற்றினுலும் உனக்கேதான். ஆனல் ஒன்று: அதே நாளுக்குள் புறப்பட்ட இடத்துக்கே வரவில்லையானுல் பணம் பறி போய்விடும்."

"எந்த எந்த வழியில் போனேன் என்பது எப்படித் தெரியும்?"

"ஒரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு, போகும் இடத்திலெல்லாம் அதனல் அடையாளம் செய்துகொள். திரும்புகிற இடங்களிலெல்லாம் ஒரு குழி தோண்டி மண்ணைக் குவித்து வை. கடைசியில் நாங்கள் எங்கள் ஆளை அனுப்பி நீ தோண்டிய குழியோடு குழி சேர்த்து எல்லைக் கோடு தோன்றும்படியாக உழுது விடு

வோம். நீ சுற்றிவிட்டுச் சூரியன் மறைவதற்குள் புறப்பட்ட இடத்துக்கு வந்துவிட்டால், அவ்வளவு நிலமும் உனக்கே உரிமையாகிவிடும்.''

பகோமின் மகிழ்ச்சி எல்லை கடந்தது. மறு நாள் காலையில் அவன் நடை தொடங்குவதென்று முடிவாயிற்று.

இரவெல்லாம் பகோமுக்கு ஏதேதோ கனவுகள்! மறுநாள் காலை......

பாஷ்கிர் மக்களும் பகோமும் குறித்த இடத்துக்கு வந்தார்கள். எல்லாரும் ஒரு சிறு பாறைமீது ஏறிக் குழுமினார்கள். பாஷ்கிர் மக்களின் தலைவன் தன் முன் இருந்த நிலப் பரப்பைச் சுட்டிக் காட்டி, ''கண்ணுக்கு எட்டும் வரையில் தோன்றும் நிலமெல்லாம் எங்களுடையது. எந்தப் பகுதியை வேண்டுமாயினும் நீ எடுத்துக் கொள்ளலாம்'' என்றான். பகோமின் கண்களில் ஒளி வீசியது. தலைவன் குல்லாயைத் தரைமீது வைத்து, ''இதுதான் அடையாளம். இங்கிருந்து புறப்பட்டுச் சுற்றி மீண்டும் இங்கே வந்துவிட வேண்டும்'' என்றான்.

பணத்தை எடுத்துப் பகோம் அந்தக் குல்லாயில் போட்டான். கால் சட்டை, உள்ளங்கியுடன் ஒரு பையில் ரொட்டியும் கூஜாவில் தண்ணீரும் எடுத்துக்கொண்டான். அடிவானத்தில் சூரியனின் கதிர்கள் ஒளிரத் தொடங்கியவுடனே பயணம் துவக்கினான். ஆயிரம் கஜம் சென்ற பிறகு, நின்று ஒரு குழி தோண்டி அடையாளம் செய்தான்; புல் தரையைச் சிப்புச் சிப்பாகச் செதுக்கி எடுத்து கன்றாக அடையாளம் தெரிவதற்காக ஒன்றின் மேல் ஒன்றாக அவற்றை அடுக்கினான். பிறகு மேலும் நடக்க ஆரம்பித்தான். சிறிது நேரமான பிறகு முன் போலவே குழி ஒன்று தோண்டி அடையாளம் செய்தான். திரும்பிப் பார்த்தான். புறப்பட்ட பாறை தெளிவாகத் தெரிந்தது. மூன்று மைல் தொலைவு நடந்திருக்கலாம் என்று நினைத்தான். வெயில் ஏற ஆரம்பித்துவிட்டது. மேலே நடந்தான். காலை உணவுக்காக அமர்ந்தான். ''இன்னும் ஒரு மூன்று மைல்; பிறகு இடது புறம் திரும்பவேண்டும்'' என்று சொல்லிக்கொண்டான்.

நேராகப் போய்க்கொண்டிருந்தான். வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தான். தான் புறப்பட்ட பாறைமேல் இருந்தவர்கள் கட்டெறும்புகள் போல் இருப்பதைக் கண்டான். ''சரி, இந்தத் திசையில் நடந்தது போதும்; இனித் திரும்ப வேண்டியதுதான்'' என்ற எண்ணம் எழுந்தது. முன்போல் அடையாளம் செய்துவிட்டுச் சிறிது தண்ணீர் குடித்தான். பிறகு இடது பக்கம் புறப்பட்டு மேலும் மேலும் சென்றான். வெயில் வர வர அதிகமாயிற்று. சூரியனைப் பார்த்தான். நடுப் பகல். ரொட்டியில் சிறிது உண்டு, நீர் அருந்தினான். 'படுத்தால் எங்கே தூக்கம் வந்துவிடுகிறதோ?' என்று படுக்கவில்லை. சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டு எழுந்து புறப்பட்டான். சிறிது நடந்த பின் கஷ்டமாக இருந்தது. வெயில் தாங்க முடியவில்லை. தூக்கம் வந்தது; ஆனால் நடையை நிறுத்தவில்லை. ''இப்போது ஒரு மணி நேரம் கஷ்டப்பட்டால் வாழ்நாளெல்லாம் சுகமாக இருக்கலாமே'' என்று நினைத்

தான். அந்த நினைவு அவனுக்கு ஊக்கம் அளித்தது.

இடது புறம் இன்னும் சிறிது நடந்துவிட்டு மூன்றாவது பக்கம் திரும்பினான். சூரியனைப் பார்த்தான்; பொழுது சாய ஆரம்பித்துவிட்டது. மூன்றாவது பக்கத்தில் இன்னும் இரண்டு மைல்கூட நடக்கவில்லை. இன்னும் பத்து மைல் நடந்தால்தான் பாறையை அடைய முடியும். 'இது போதும்' என்று அவசரம் அவசரமாக அடையாளக் குழி ஒன்று தோண்டிவிட்டு, பாறைப் பக்கமாகத் திரும்பி விரைவாக நடக்கலானான் பகோம்.

குன்றை இலக்காக வைத்து நேராக நடந்தான். இப்போது நடப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது. கால்கள் பின்னிக்கொண்டு நடக்க மறுத்தன. சூரியன் அடிவானத்தை நெருங்கிவிட்டான். எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டுப் பகோம் இப்போது ஓடலானான்.

மூச்சுத் திணறியது. இருதயம் சுத்தியல் போல் அடிக்க ஆரம்பித்தது. 'எங்கே இறந்து விடுவோமோ?' என்ற பயம் பகோமைப் பிடித்து ஆட்டிற்று. 'இவ்வளவு தொலைவு ஓடி வந்துவிட்டு இப்போது நின்றுவிட்டால் என்னை முட்டாள் என்பார்களே பாஷ்கீர் மக்கள்' என்று நினைத்தான். மேலும் மேலும் ஓடினான். வர வரக் குறிப்பிட்ட இடத்தை நெருங்கினான். கதிரவன் அடிவானத்தைத் தொடும் நேரம். பகோமும் எல்லையைக் குறுகிவிட்டான்; பாறையின் மேல் இருந்த மனிதர்களைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. விரைந்து வரும்படியாக அவர்கள் கையை ஆட்டி ஆட்டிச் சைகை செய்துகொண்டிருந்தார்கள். நரி மயிர்க் குல்லாயும் பணமும் பகோமுக்கு நன்றாகத் தெரிந்தன.

கொஞ்ச நஞ்சம் இருந்த மூச்சையும் இழுத்துப் பிடித்துக்கொண்டு ஓடினான் பகோம்; தடுமாறினான். பாறையின் அடிவாரத்தை அடைந்ததும் திடீரென்று இருள் பரவியது; அஸ்தமனம் ஆகிவிட்டது. "ஐயோ! நான் பட்ட பாடெல்லாம் வீணாயிற்றே" என்று கதறினான். ஆனால் பாஷ்கீர் மக்கள் அவனை ஓடி வருமாறு அழைத்தார்கள். நீண்ட ஒரு மூச்சு வாங்கிக்கொண்டு பாறைமீது ஓடி ஏறினான். அங்கு இன்னும் வெளிச்சமாகத்தான் இருந்தது. குல்லாவையும் அதிலிருந்த பணத்தையும் கண்டான். கால் தடுமாறிக் கீழே விழுந்தான். அவனது கைகள் குல்லாயையே தொட்டுவிட்டன.

"அடாடா! மிகவும் கெட்டிக்காரன்தான். எவ்வளவு நிலம் பிடித்துவிட்டான்!" என்று வியந்தான் பாஷ்கீர் மக்கள் தலைவன்.

வேலைக்காரன் ஓடிவந்து தரையில் வீழ்ந்து கிடந்த பகோமைத் தூக்க முயன்றான். ஆனால் பகோம் வாய்வழியே ரத்தம் வடிய, மூச்சில்லாமல் கிடப்பதைக் கண்டான்; பகோம் இறந்து போனான்.

பாஷ்கீர் மக்கள் 'உச்சு'க் கொட்டி அநுதாபப்பட்டார்கள்.

வேலைக்காரன் மண்வெட்டியை எடுத்தான். எஜமானனுக்குக் குழி தோண்டிப் புதைத்துவிட்டான்.

பகோமுக்குத் தேவையாயிருந்ததெல்லாம் ஆறே அடி நிலந்தான். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் அளந்தாலும் அவனுக்கு ஆறடி நிலந்தான் வேண்டியிருந்தது!

மஞ்சரி

டிசம்பர் '52—நவம்பர் '53

ஆறும் வருஷ அட்டவணை

அரசியல்

உலகில் பெரிய பதவி பிப் '53 . 29
ஊரும் உலகமும் டிச. '52 . 1
ஜன. '53 . 1 பிப். '53 . 1
மார்ச் '53 . 1 எப். '53 . 1
மே '53 . 1 ஜூன் '53 . 1
ஜூலை '53 . 1 ஆக. '53 . 1
செப். '53 . 1 அக். '53 . 1
நவ. '53 . 1
ஐ. நா. ஸ்தாபனம் . டிச. '52 . 51
காஷ்மீர் விவகாரம் செப். '53 . 25
கென்யா பயங்கரம் ஜன. '53 . 53
சிந்து நீர் விவகாரம் எப். '53 . 69
நாகர் கிளர்ச்சி மர்மம் ஜூலை '53 . 40
பெர்முடா சந்திப்பு ஜூலை '53 . 3
ராணியின் மகுடாபிஷேகம். ஜூன் '53 . 44
ருஷியாவின் புதிய தலைவர்கள். மே '53 . 64

உணவு - விவசாயம்

அமெரிக்காவில் இந்தியப் பயிர்கள் நவ. '53 . 62
அரிசியின் பெருமை செப்.' 53 23
இலங்கைத் தென்னை அக். '53.14
எதற்கு எந்த மரம்? நவ. '53 . 10
தென்னைப் பாதுகாப்பு பிப் '53 37
ஜப்பானிய விவசாயம் மார்ச் '53.81

என்னைக் கேளுங்கள்

எப். '53 . 67 மே '53 73
ஜூலை '53 . 37 ஆக '53 . 9
செப். '53 . 13 அக். '53 . 10
நவ. '53 . 65

க்விஸ்

ஜன. '53 . 16 பிப். '53 . 19
மார்ச் '53 . 25 எப். '53 . 21
மே '53 . 77 ஜூன் '53 . 8

கற்பனை உலகம்

இல்லாநாட்டுச் செய்தி ஜன. '53.71
உலக அரசாங்கம் எப். '53 . 25
உலக நந்தவனம் செப். '53 . 47
எல்லாம் மாறிய நாடு டிச. '52 . 37
ஏழையற்ற உலகம் பிப். '53 . 73
சர்வாதிகாரத்துக்கு வழிகாட்டி மே '53 . 4
டாக்டர் திரும்புகிறார் நவ. '53 57
பத்து லட்சம் ஆண்டுக்குப் பின் அக். '53 . 38
பழைய கம்யூனிஸம் ஜூன் '53 37
புதிய உலக அமைப்பு ஜூலை '53 . 64
விஞ்ஞான ஸமுதாயம் மார். '53 63

கார்ட்டூன் கதம்பம்

டிச. '52 . 8 ஜன. '53 . 44
பிப். '53 . 44 மார்ச் '53 . 44
எப். '53 . 62 மே '53 . 24
ஜூன் '53 . 32 ஜூலை '53 . 62
ஆக. '53 . 28 செப். '53 . 36
அக். '53 . 44 நவ. '53 . 31

சமூகம்

உலகில் புதிய இயக்கம் எப். '53 . 53
சீமாட்டி பேட்டி மே '53 . 41
நகைகளின் உருமாற்றம் நவ. '53 . 53
பணம் வேண்டுமோ? மார்ச் '53 . 11
புகழ்ப் பசி மார்ச் '53 . 68
விலைக் கட்டுப்பாடு பிப். '53 . 46

சரித்திரம்

அந்நியரின் சிலை மார்ச் '53 . 49
அபூர்வக் கல்யாணம் பிப். '53 . 8
ஆந்திரமும் தெலுங்கும் நவ. '53 . 49
இந்திய அடிமைகள் செப் '53 . 28
இந்தியக் கடற்படை நவ '53 .
நகர நிர்மாணம் ஆக. '53 . 41
நம் புராதனக் கப்பல்கள் மே '53 . 55
நாகரிகம் வளர்த்த பழம் பாட்டை அக். '53 . 22
பழங்கால இந்திய விமானம் மார்ச் '53 . 59

சித்திரம் - சிற்பம்

அபூர்வச் சிற்பங்கள் டிச. '52 . 54
இந்தியச் சிற்பம் ஜுன் '53 . 34
காட்டிலே கண்ட சிற்பம் மார்ச் '53 . 37
கிந்தருவப் பெண் ஜுலை '53 . 69
தெய்வத் தாமரை மார்ச் '53 . 22
ராகங்களின் சித்திரம் செப். '53 . 60
லேபாட்சிச் சித்திரங்கள் நவ. '53 . 40
ஜப்பானியக் கலை செப். '53 . 44

சிறு கதை

அத்தை சொன்ன கதை - மஞ்சேரி எஸ். ஈச்வரன். மார்ச் '53 . 84
அவன் மனைவி - லியோனிட் ஸோபெலெவ் ஏப். '53 . 83
உதட்டில் பொன் - மஞ்சேரி எஸ். ஈச்வரன். ஆக. '53 . 66
எவ்வளவு நிலம் வேண்டும்? - லியோ டால்ஸ்டாய் நவ. '53 . 70
கடவுள் வந்தார் - லியோ டால்ஸ்டாய் ஜன. '53 . 78
காதலர் தூதன் - ஷீலா சட்டர்ஜி டிச. '52 . 69
காதலும் கடமையும் - கான்ஸ் டண்டின் பாஸ்டவ்ஸ்கி. செப். '53 . 70
திக்குவாயன் - வ. கே. அல்பஜ்னி மே '53 . 82
பச்சாத்தாபம் - சரத்சந்திரர் அக். '53 . 69
பாழடைந்த ஊர் - வி. ஸ. காண்டேகர் ஜுலை '53 . 70
லாமாவின் மாடு - பால் ரோச் ஜுன் '53 . 67
வீட்டு விளக்கு - வி. ஸ. காண்டேகர் பிப். '53 . 80

சுக வாழ்வு

ஆண்-பெண் ரகசியம் ஜன. '53 . 59
ஆரோக்கியமும் ஆனந்தமும் டிச. '52 . 66

தாய்மையும் குழந்தை வளர்ப்பும்

'அம்மா, ஒரு கதை சொல்லு' மே '53 . 69
அன்பின் அறிகுறி ஆக. '53 . 63
கற்பனைத் தோழன் ஏப். '53 . 73
குழந்தை பத்திரம் டிச. '52 . 25
- ஷ - ஜன. '53 . 17
குழந்தையின் கண் பிப். '53 . 3

தொழில்

இந்திய ஸைக்கிள் டிச. '52 . 13
உலகெங்கும் பரவிய பத்திரிகை நவ. '53 . 22
கம்பள நெசவு ஏப். '53 . 63
குழந்தைகள் பொம்மை.. ஆக. '53 . 33
டாடா தொழிற்சாலை ஜுன் '53 . 64
தமிழ் நாட்டில் நிலக்கரி ஏப். '53 . 11
நூறாண்டு வளர்ந்த ரெயில் மே '53 . 12
ரோல்ஸ்-ராய்ஸ் வந்த விதம் பிப். '53 . 49
வாரம் ஓர் எஞ்சின். நவ. '53 . 12
ஹோட்டல்கள் சீர்திருந்த வழி மார்ச் '53 . 6

நடைச் சித்திரம்

காட்ஜூ பேட்டி மார்ச் '53 . 32
'டாக்டரே, சௌக்கியமா?' டிச. '52 . 58
புருஷர்களே, உஷார் .. ஜன. '53 . 40
வீடு எப்படி? ஜுலை '53 . 58

நாடும் மக்களும்
கலைநிறைந்த கம்போடியா அக். '53 . 3
குடகின் வீர மக்கள்.. நவ. '53 . 14
தலை வெட்டும் ஜாதியார் ஏப். '53 . 14
பாகிஸ்தானில் கல்யாணம் ஆக. '53 . 47

பண்டிகைகள்
சூரிய விழா பிப். '53 . 34
நாக பூஜை செப். '53 . 57

பாகவதம்
அசுவத்தாமன் கொடுமை. மே '53 . 61
கபிலர் அவதாரம் செப். '53 . 6
கலி தீர்க்கும் நூல் மார்ச் '53 . 14
தட்ச யக்ஞம் அக். '53 . 50
நாரதர் தோற்றம் ஏப். '53 . 8
பரீட்சித்து வரலாறு ஜூன் '53 12
பிருது சரிதம் நவ. '53 . 18
வராக அவதாரம் ஜூலை '53 . 44
ஹிரண்யாட்ச வதம் ஆக. '53 . 24

பாபு ராவ் பதில்
டிச. '52 . 78 ஜன. '53 . 27
பிப். '53 . 79 மார்ச் '53 . 75
ஏப். '53 . 51 மே. '53 . 30
ஜூன் '53 . 11 ஜூலை '53 17
ஆக. '53 . 52 செப். '53 . 66
அக். '53 . 67. 17 நவ. '53 . 47

பிரபல இடங்கள்
நர்மதைக் கரையில் ஆக. '53 . 44
புகழ் மிகுந்த வைசாலி மே '53 . 51
மகிமை வாய்ந்த புவனேசுவரம்.. ஜூன் '53 . 3
மர்மக் குன்று ஜூன் '53 . 41
மலைகளில் பெரியது மார்ச் '53 . 53

பிராணி
அந்தப் பூனை அக். '53 . 34
எறும்புக் குளியல் ஏப். '53 . 29
சக்தி மிக்க விலங்கு அக். '53 . 17
சர்க்கஸ் விலங்குகள் மே '53 . 53
தேள் செப். '53 . 41
பட்டணத்தில் பாம்பு ஆக. '53 . 54
விலங்குகள் வேகம்.. ஜூலை '53 . 32

புத்தகச் சுருக்கம்
இதய நாதம் (நாவல்) சிதம்பர சுப்ரமணியம். ஆக. '53 . 71
எதிரொலி - ய. கோ. ஜோஷி.. அக் '53 . 73
கண்ணன் செய்த சோதனை (கட்டுரை) கி. வா. ஜகந்நாதன் செப். '53 . 75
காரும் தேரும் (கட்டுரை) கி. வா. ஜகந்நாதன். டிச. '52 . 79
பர்மா அகதி - மானவி முகோபாத்யாய ஜூன் '53 . 73
வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் - கி. சந்திரசேகரன் ஜூலை '53 . 73

பொது
அட மனிதா! மார்ச் '53 . 13
அழகே உண்மை டிச. '52 . 29
அமெரிக்கர் வீட்டிலே மார்ச் '53 . 74
இரவிலே ஓட்டம் ஏப். '53 . 16
இலங்கை ரத்தினங்கள் ஏப். '53 . 37
உங்கள் கடிகாரம் ஜன. '53 . 12
ஊர்வசி மே '53 . 44
எதிரி மாப்பிள்ளையா? மார்ச் '53 . 39
ஏமாந்த போலீஸ்காரன் டிச. '52 . 53
என்னால் நன்மையா? செப். '53.40
கண் பெற்ற பெண் செப். '53 . 54
கல்வியினால் கவர்ச்சி குறைகிறதா? அக். '53 . 25
கேட்பாரற்ற பணம் பிப். '53 . 20
தீயுடன் போர் ஜன. '53 . 46
நகர வாகன நிலை ஜன. '53 . 7
நல்ல சாட்சி ஜூன் '53 . 5
நவீன துபாஷி மார்ச் '53 . 77

பரீட்சித்துப் பார்த்தவை..
ஆக. '53 . 51
பல சரக்கு பிப். '53 . 26
மார்ச்'53. 70; ஜூன்;'53 . 56
ஆக. '53 . 22
பனி மாளிகை செப். '53 . 33
பானைக்கு உறுதி தரும் பூச்சு
மே '53 . 59
புத்தகசாலைக் கதை மார்ச் '53.26
புத்தரும் சர்வோதயமும்..
மார்ச் '53 . 3
பூதானம் தொடங்கிய விதம்
செப். '53 . 64
போட்டியிடச் சென்றேன்
பிப். '53 . 40
மன்னனைத் தேர்ந்தெடுத்தல்
ஆக. '53 . 30
யுத்த அபாயம் ஜூன் '53 . 58
ராணி எமாந்தாள் ஜூலை '53.27
வெளி நாட்டில் ரவீந்திரர்
ஆக. '53 . 13
விளையாட்டில் போதை..
செப். '53 . 68
வைசிராய் அழைத்த ஆசிரியர்
மே '53 . 20
ஜீவிய சரித்திர பலன் எப். '53.47
ஜோஸ்யம் பலித்தது
ஜூன் '53 . 53

பொழுது போக்கு

கவர்னரின் புலிவேட்டை
ஆக.'53 . 17
நீந்தும் முறை ஜூலை'53 . 14
மல் வித்தை ஜன. '53 . 63

மனத் தத்துவம்

அற்புத மனோசக்தி அக். '53 . 29
உணர்ச்சிக் கட்டுப்பாடு
மார்ச் '53 . 19
பெண்களின் மனநோய்
ஜூலை '53 . 29
மீண்டும் மனோவசியம்
மே '53 . 78
வருவதைச் சொல்லலாம்
மே '53 . 47

மூன்றம் அட்டை

அதன் செயல் நவ. '53 .
இலக்கியப் படிப்பு மே. '53 .
கருமிச் சீமான் மார்ச். '53 .
குடிசையும் மனிதனும்
எப். '53 .
குண்டும் கணித நிபுணரும்
பிப். '53 .
சமாதானக் கூட்டம்
ஆக. '53 .
நாஸ்திகரைத் திருப்பும் வழி
ஜூலை '53 .
பல மதம் ஏன்? டிச. '52 .
போதனைக் கலை ஜன. '53 .
மத நூலின் புனிதம் ஜூன் '53 .

ரமணர்: வாழ்வும் வாக்கும்

டிச. '52 . 22 ஜன. '53 . 4
பிப். '53 . 70 மார்ச் '53 . 8
எப். '53 . 18 மே '53 . 10
ஜூன் '53 . 16 ஜூலை '53 . 18
ஆக. '53 . 6 செப். '53 . 10
அக். '53 . 8 நவ. '53 . 7

ராமாயணம்

சீதையின் அக்கினிப் பிரவேசம்
டிச. '52 . 44
திரும்பும் வழியில் ஜன. '53 . 8
ராம பட்டாபிஷேகம்
பிப். '53 . 14

விஞ்ஞானம்

அணுக்குண்டில் ஹிட்லர் தோல்வி
ஜூலை '53 . 21
அணுக்குண்டு அநுபவம்
டிச. '52 . 49
இடியும் மின்னலும்
டிச. '52 . 61
எதையும் விற்க யந்திரம்
ஜூலை '53 . 47
சிதறாத கண்ணாடி ஜன. '53 . 3
சூட்டைக் காணும் கருவி
மே '53 . 37
செயற்கை அரிசி டிச. '52 . 18
தந்தி எப்படி வந்தது? ஜன. '53.22
நூதனக் கருவிகள் பிப். '53 . 7

பறக்கும் தட்டு பிப். '53 . 63
பின்புற என்ஜின் கார் ஜூன் '53 . 9
புதுமாதிரி ஸினிமா மார்ச் '53.46
பூமிக்கு அபாயம் ஜன. '53 . 49
மூக்கைத் துளைக்கும் வாயு எப். '53 . 58
மூளைக் கடிகாரம் ஜூலை '53 . 51
ராமன் கண்டு பிடித்தது எப். '53 . 5
விறகில்லாத அடுப்பு நவ '53 . 42
ஸினிமா உலகில் புரட்சி ஜூலை '53 . 6

வைத்தியம்

அதிசய இரட்டை பிப். '53 . 59
ஆண் - பெண் மாறுதல் செப். '53 . 17
இனித் திக்க வேண்டாம் ஜன. '53 . 67
உங்கள் டாக்டர் யார்? செப். '53 . 3
சித்திரச் சிகிச்சை டிச. '52 . 32
தோலைப் பாதுகாத்தல் அக். '53 . 55
நடமாடும் கண் வைத்தியசாலை எப். '53 . 44
நலம் தரும் பொன் ஜூன் '53 61
நிறச் சிகிச்சை பிப். '53 . 55
பாலின் பெருமை டிச. '52 . 10
மலடு என்பது என்ன? அச். '53 . 58
மூக்கை மாற்றலாம் ஜூன் '53 . 28
மூழ்கினவரைக் காப்பாற்றும் முறை நவ. '53 . 36
வழுக்கைக்கு மருந்து மார்ச் '53 . 42
விஷ ஆராய்ச்சி செப். '53 . 21
வீட்டிலே சிகிச்சை எப். '53 . 41
வைத்தியப் புதுமைகள் ஜன. '53 . 29
- ஷை - பிப். '53 . 23

ஜீவிய சரித்திரம்

அதிசய உலக ஆசிரியர் ஜூலை '53 . 53
அழகிய சிங்கர் எப். '53 . 33
ஆசாரிய ஸ்வாமிகள் செப். '53 . 38
ஆயுத மன்னன் விடுதலை ஜன. '53 . 32
இவரும் அவரும் எப். '53 . 78
ஈரான் பிரதமர் ஆக. '53 . 59
எகிப்தின் சர்வாதிகாரி அக். '53 62
எழுபதுக்கு மேல் நவ. '53 . 32
'கீத கோவிந்த' ஆசிரியர் ஜன. '53 . 37
சபாபதி ஐயர் ஆக. '53 . 3
தாகூர் மீரான் எப். '53 . 32
புதிய ஜனாதிபதி ஐக். டிச. '52 . 3
புரந்தர தாசர் மே '53 . 26
மாயமாய் மறைந்த நிபுணர் மே '53 . 32
விநோபா யாத்திரை ஜூன் '53 . 19
மாண்ட அணு உளவாளிகள் ஆக. '53 . 36
ராகவேந்திரர் அக். '53. 46

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

அதன் செயல்

தேவர்கள் பக்கலிலே நின்று பிரம்மம் அவர்களுக்கு வெற்றியைத் தந்தது. "இது நமது வெற்றி; நம்முடைய பெருமையால் இது வந்தது" என்று அவர்கள் பெருமிதம் கொண்டார்கள். அவர்களுடைய இந்தத் தவறான கருத்தை அறிந்த பிரம்மம், அற்புதமான ஒரு யட்ச வடிவத்தோடு அவர்கள் எதிரில் நின்றது. அந்த வடிவம் இன்னதென்று அவர்களுக்கு விளங்கவில்லை.

தேவர்கள் அக்கினியைப் பார்த்து, "இந்த யட்ச வடிவம் என்ன என்று அறிந்து வா" என்றனர். அவன் சரி என்று சொல்லி, அந்த வடிவத்தினிடம் சென்றான். "நீ யார்?" என்று அது அவனைக் கேட்டது.

"நான் அக்கினி; ஜாதவேதன் என்று என்னைச் சொல்வார்கள்" என்றான் அக்கினி.

"நீ என்ன செய்ய முடியும்?"

"உலகிலுள்ள அனைத்தையும் நான் எரித்துவிடுவேன்."

அந்த வடிவம் அவன் முன்னால் ஒரு துரும்பை எறிந்து, "இதை எரி" என்றது. அக்கினி தன் வேகங்கொண்ட மட்டும் துரும்பின்மேல் பாய்ந்தான். அதை எரிக்க முடியவில்லை. "இந்த யட்ச வடிவத்தை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை" என்று சொல்லிக்கொண்டே அவன் திரும்பினான்.

தேவர்கள் வாயுவை அனுப்பினார்கள். "நீ யார்?" என்றது யட்ச வடிவம்.

"நான் வாயு; என்னை மாதரிச்வா என்பார்கள்."

"உன்னால் என்ன முடியும்?"

"உலகிலுள்ள அனைத்தையும் நான் தூக்கி எறிவேன்."

"இதைத் தூக்கு" என்று சொல்லி, ஒரு துரும்பை அந்த வடிவம் வாயுவின் முன்பு வைத்தது. வாயு தன் பலங்கொண்டமட்டும் அதன் மேல் பாய்ந்தான். அதை அசைக்கவே அவனால் முடியவில்லை. "இந்த வடிவம் யாதோ, எனக்குத் தெரியவில்லை" என்று கூறிக்கொண்டே அவன் திரும்பினான்.

பிறகு தேவர்கள் இந்திரனை அனுப்பினார்கள். அவன் வந்ததுமே அந்த வடிவம் மறைந்தது. வானத்திலே ஒளி வீசும் உருவத்தோடு இமவான் மகள் உமா தேவி காட்சியளித்தாள்.

"இந்த யட்ச வடிவம் யாது?" என்று இந்திரன் அவளைக் கேட்டான்.

"இந்த வடிவமே பிரம்மம். பிரம்மத்தின் வெற்றியைக் கொண்டு நீங்கள் பெருமைப்பட வேண்டும்" என்றாள் உமா தேவி.

இந்திரன் அப்போது பிரம்மத்[illegible] அதன் பெருமையையும் தெரிந்துகொண்டான். அதனால் அ[illegible] தேவர்களுக்குத் தலைவன் ஆனான். பிரம்மத்தை நெருங்கினமையால், அக்கினியும் வாயுவும் மற்றத் தேவர்களைவிடச் சிறந்து விளங்கினார்கள்.

—கேனோபநிஷத்து.

November '53 **Regd. No. M. 4975**

மஞ்சரி

விஜய - கார்த்திகை

ஊரும் உலகமும்		1
இந்தியக் கடற்படை	தென்னாடு	3
ரமணர்: வாழ்வும் வாக்கும்		7
எதற்கு எந்த மரம்?	மேழிச் செல்வம்	10
வாரம் ஓர் எஞ்சின்	பம்பாய்க் கிரானிக்கிள்	12
குடகின் வீர மக்கள்	பிரஜா மத	14
பிருது சரிதம்		18
உலகெங்கும் பரவிய பத்திரிகை	டைம்	22
கார்ட்டூன் கதம்பம்		31
எழுபதுக்கு மேல்	அமிர்த பஜார் பத்திரிகை	32
மூழ்கினவரைக் காப்பாற்றும் முறை		36
லேபாட்சிச் சித்திரங்கள்	தி மெயில்	40
விறகில்லாத அடுப்பு		42
பாபு ராவ் பதில் சொல்லுகிறார்	பிலிமிண்டியா	47
ஆந்திரமும் தெலுங்கும்	ஹிந்து	49
நகைகளின் உருமாற்றம்	ஆந்திர மகிளா	53
டாக்டர் திரும்புகிறார்	ரா. ஸ்ரீ. தேசிகன்	57
அமெரிக்காவில் இந்தியப் பயிர்கள்	அமெரிக்கன் ரிப்போர்ட்டர்	62
என்னைக் கேளுங்கள்	[illegible]டன் என். சேஷாத்திரிநாதன்	65
எவ்வளவு நிலம் வேண்டும்?	லியோ டால்ஸ்டாய்	70
மஞ்சரி ஆறும் வருஷ அட்டவணை		76
அதன் செயல்	3-ஆம் அட்	